# கல்கி





KALKI ஏப்ரல் 25, 1954 4 அண

# கல்கி பொருளடக்கம்



மலர் 13
இதழ் 39

1954 ஏப்ரல் 25

ஜய௵
சித்திரை 13




"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



மேலும் சிறந்த
சமூக சேவைகளும்,
பொதுஜன சௌகரியங்
களும் கிடைக்க . . .

## இவற்றில் முதலீடு செய்யுங்கள்

## இன்னும் அதிக பாடசாலைகள்
## அதிக ஆஸ்பத்திரிகள் - அதிக ரஸ்தாக்கள்

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 39

# தேசமே! முன்னேறு!

தேசம் என்பது என்ன? தேச பக்தி என்பது எதனை? 'தேசத் தொண்டு செய்ய வேண்டும்' என்னும் போது, எதை எண்ணிக் கொண்டு சொல்கிறோம்? 'தேச முன்னேற்றம்' என்னும்போது எந்த முன்னேற்றத்தைக் குறிப்பிடுகிறோம்?

தேசபக்தி ஊட்டுவதற்காகக் கவிகள் தேசத்தை வர்ணிக்கும் போது, தேசத்திலுள்ள மலைகளையும் நதிகளையும் வனங்களையும் வயல்களையும் இயற்கை எழில்களையும் செயற்கை வளங்களையும் ஏரி குளங்களையும் குறிப்பிடுவது மரபு. தேசத் தலைவர்களும் ஆவேசச் சொற்பொழிவாளர்களும் அந்த முறையிலேயே தேசத்தை வர்ணிப்பார்கள். ஆனால் உண்மையில் தேசம் என்பது இவைதானா? மலையிடமும் மரத்திடமும் வைக்கும் பக்திதானா தேசபக்தி? ஆறுகளுக்கும் ஏரிகளுக்கும் செய்யும் தொண்டுதானா தேசத்தொண்டு? 'தேச முன்னேற்றம்' என்று சொல்லும்போது, நீலகிரி மலையையோ, விந்திய மலையையோ, இமய மலையையோ முன்னேறச் செய்வது பற்றியா பேசுகிறோம்?

தேசம் என்பது உண்மையில் அந்த தேசத்தில் வசிக்கும் மக்கள் தொகுதியேயாகும். தேச மக்களிடம் செலுத்தும் அன்பே தேசபக்தி. தேச மக்களுக்குச் செய்யும் தொண்டே தேசத் தொண்டு. தேச மக்களின் முன்னேற்றமே தேசத்தின் முன்னேற்றம் ஆகும். தேச மக்களின் வாழ்வில் வறுமை தொலைந்து வளம் மிகுந்து இன்பம் பெருகினால்தான் தேசம் முன்னேறி வருகிறது என்று சொல்லலாம்.

தேசத்தை ஆளும் பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் அடிக்கடி இந்த உண்மையை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த உண்மையை மனத்தில் வைத்துக் கொள்ளாமல் தேச முன்னேற்றத்துக்காகத் திட்டங்கள் வகுத்தால், உண்மையான தேச முன்னேற்றம் ஏற்படாது. அங்கங்கே முன்னேற்றம் ஏற்படுவதுபோல் காணப்பட்டாலும், அது மனித உடம்பில் நோய் காரணமாக எங்கேனும் வீக்கம் ஏற்பட்டால் எப்படியோ, அப்படிப்பட்ட முன்னேற்றமாகவே இருக்கும். வீக்கத்தை நோய் என்று சொல்லுவோமே தவிர, வளர்ச்சி என்று சொல்ல மாட்டோம் அல்லவா?

* * * *

தேசம் முன்னேற்றம் அடைவதற்காக நம் மாபெரும் தலைவர்கள் பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். முக்கியமாக, ஐந்து வருஷத் திட்டம் வகுத்திருக்கிறார்கள். பண்டித ஜவாஹர்லால் நேரு ஐந்து வருஷத் திட்டத்தைப் பற்றி மக்களிடையே உற்சாகம் உண்டு பண்ணப் பெரு முயற்சி செய்து வருகிறார். அண்ணாமலை நகரில் கூடிய பேனா வீரர்கள் மகா நாட்டில்கூட "ஐந்து வருஷத் திட்டத்தைப் படித்தீர்களா? அதன் வெற்றிக்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டார்.

ஐந்து வருஷத் திட்டத்தைப் பற்றி நம் தலைவர்கள் எதிர்பார்க்கிற அளவு மக்களிடையே உற்சாகம் காணப்படவில்லை. ஏன்? ஐந்து வருஷத் திட்டத்தைத் தயாரித்தவர்களுக்கே அதைப் பற்றி அடிக்கடி சந்தேகம் உண்டாகி விடுகிறது. அதை மாற்றி அமைக்கவும் புதிய அம்சங்களைச் சேர்க்கவும் முயற்சிக்கிறார்கள்.

ஐந்து வருஷத் திட்டத்தைப் பற்றிச் சொல்லப் போவானேன்? எவ்வளவோ அரும்பாடுபட்டுத் தேசம் அடைந்திருக்கும் சுதந்திரத்தைப் பற்றிக்கூட மக்களிடையே இருக்க வேண்டிய அளவு உற்சாகம் இல்லை. ஆரம்பத்தில் காணப்பட்ட உற்சாகமும் வர வரக் குறைந்து வருகிறது. இதன் காரணம் என்னவென்று சிந்திக்க வேண்டும். எழுத்தாளர்களும் சிந்திக்க வேண்டும்; நேருஜி போன்ற தலைவர்களும் சிந்திக்க வேண்டும்.

நம் வேலையில்லாத் தோழர் இராமசாமியை எடுத்துக் கொள்வோம். இந்த இராமசாமியைத் தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் காணலாம். இவர் எஸ். எஸ். எல். சி.

படித்தவர். 1947-ல் இவர் வேலை யில்லாமலிருந் தார். சுதந்திரம் வந்து விட்டபடியால் இனி விரை வில் தமக்கு ஏதேனும் வேலை கிடைத்து விடும் என்று நம்பினார். அவ்வருஷம் ஆகஸ்டு 15-ந் தேதி இவர் போட்ட 'ஜே ஹிந்த்' கோஷம் வானை அளா வியது. அவ்வளவு உற்சாகத்துட னிருந்தார்.

வருஷம் ஆறு ஆனபிறகு இன்னமும் இராமசாமி வேலையில்லாமலே இருந்து வருகிறார். இவருடைய தமையன் கிருஷ்ணசாமி அப்போது ஒரு வேலையில் இருந்தார். அந்த இலாகாவை மூடி விட்ட படி யால் கிருஷ்ணசாமியும் இப்போது வேலையில்லாத வராகி விட்டார். இராமசாமியின் தம்பி கோவிந்த சாமி 1947-ல் ஏழாவது வகுப்பில் படித்துக் கொண் டிருந்தார். எஸ். எஸ். எல். சி. படித்து முடித்து விட்டுக் கோவிந்தசாமியும் இப்போது வீட்டுக்கு வந்து வேலையில்லாம லிருக்கிறார்.

1947-ல் அந்தக் குடும்பத்தில் ஒருவர் வேலை யில்லாமலிருந்தார். இப்போது மூன்று பேர் வேலை யில்லாமலிருக்கிறார்கள்! இந்த முன்னேற்றத்தைக் குறித்து இராமசாமியும் அவருடைய சகோதரர் களும் உற்சாகம் அடைய முடியுமா! ஐந்து வரு ஷத் திட்டத்தின் அருமை பெருமையைப் பற்றித் தான் குதூகலம் அடைய முடியுமா!

அப்புறம், தோழர் வேலுசாமியைப் பார்ப் போம். இவர் பரம்பரையாகக் கைத்தறி நெசவு செய்து வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். மகா யுத்தம் நடந்த காலத்தில் இவர் பாடு யோகமாக இருந்தது. யுத்தம் முடிந்த பிறகு திடீரென்று இவருக்குக் கஷ்டம் நேர்ந்தது. நெசவுக்கு நூல் கிடைப்பது அரிதாயிற்று. நூல் பங்கீடு மூலம் கொஞ்சம் நூல் கிடைத்தது. அந்தச் சொற்ப நூலைக் கொண்டு பாவு போட்டுத் துணி நெய்ய முடியவில்லை. ஆகையால் சில சமயம் கருப்பு மார்க் கட்டில் நூலை லாபத்துக்கு விற்றார். எப்படியோ அரை வயிறு உண்டு காலம் தள்ளி வந்தார்.

1947-ல் சுதந்திரம் வந்த போது, "இனி நம் கஷ்டமெல்லாம் தீர்ந்து விடும். சுதந்திர இந்தியா வில் கைத்தறி நெசவாளிகளை முதலில் கவனித்துக் கொள்வார்கள்!" என்று நம்பினார்.

அவர் நம்பியதற்கு மாறாக நிலைமை மேலும் மேலும் மேலும் மோசமாகி வந்தது. சட்டசபை அங்கத்தினரிடமும் தலைவர்களிடமும் போய்க் கேட்டார். "துங்கபத்திரை நதியில் அணைக் கட்டு வேலை நடக்கிறது. அங்கே போய்க் கூலி வேலை செய்து பிழை!" என்று பதில் கிடைத்தது.

இந்த நிலைமையில் இவரைக் குமப்பக்காரர்கள் பயன் படுத்திக் கொண்டார்கள். வேலுசாமியும் அவருடைய குடும்பத்தாரும் பட்டினிப் பட்டா ளத்தில் சேர்ந்து சென்னைக்கு வந்தார்கள். சில நாள் தெருக்களில் சுற்றி அலைந்து விட்டுத் திரும் பிப் போனார்கள். இன்னமும் வேலுசாமியின் கஷ்டம் தீர்ந்த பாடில்லை. ஏதோ வாரத்துக்கு இரண்டு நாள் மூன்று நாள் இப்போது வேலை கிடைக்கிறது. உயிரை வைத்துக் கொண்டிருப் பதே பெரும் பிரயாசையாக இருக்கிறது.

தோழர் வேலுசாமியும் அவருடைய குடும்பத் தாரும் நாடு சுதந்திரம் அடைந்தது பற்றியோ, ஐந்து வருஷத் திட்டத்தைப் பற்றியோ எப்படிக் குதூகலப் படுவார்கள்!

இம்மாதிரியே வாழ்க்கையில் பல துறைகளி லும் முன்னைக் காட்டிலும் க்ஷீண நிலையை அடைந் திருக்கும் கோவிந்தசாமிகளையும் நாராயணசாமி களையும் முத்துச்சாமிகளையும் ரத்தினசாமிகளை யும் வேங்கடசாமிகளையும் சின்னச் சாமிகளையும் பெரிய சாமிகளையும் நாடெங்கும் காணலாம்.

இத்தகையவர்கள் பாரத தேசம் சுதந்திரம் அடைந்து விட்டது பற்றியோ, ஐந்து வருஷத் திட்டம் அமுலாகி வருகிறது என்பது பற்றியோ உற்சாகம் காட்ட முடியாது. தேசம் முன்னேற்றம் அடைந்து வருகிறதாக இவர்களை நம்பச் செய் வதும் கஷ்டமான காரியந்தான்.

இந்த உதாரணங்களிலிருந்து ஐந்து வருஷத் திட்டம் பயனற்ற திட்டம் என்றோ, சுதந்திர இந்தியா முன்னேற்றமே அடையவில்லையென்றோ நாம் முடிவு கட்டிவிடக் கூடாது.

நம் அருந்தலைவர்களின் முயற்சியால் தேசம் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்துதான் வரு கிறது. ஐந்து வருஷத் திட்டத்தின் கீழ் புதிய புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. நாடெங்கும் பொருள் உற்பத்தி பல முனைகளில் பெருகியும் வருகிறது.

ஆனால் அந்த முன்னேற்றம் போதிய அளவு பரவலாக இல்லை. பெரும்பாலான மக்களுக்குப் பயன்படக் கூடியதாக இல்லை. இதற்குக் கார ணம், "தேசம் என்பது மக்கள் சமூகம்" என் பதை மறந்து விட்டுத் திட்டம் வகுப்பதேயாகும்.

# ஆள் பலமே நம் அரும் பெரும் செல்வம்

சென்ற வாரத்தில் இந்தியாவின் தற்போ தைய மொத்த ஜனத் தொகைக் கணக்கு வெளி யாயிற்று. ருஷியாவிலும் அமெரிக்காவிலும் சேர்ந்து மொத்தம் எவ்வளவு ஜனங்கள் இருக்கி றார்களோ, அதைக் காட்டிலும் அதிகமான ஜனங்கள் பாரத நாட்டில் மட்டும் இருக்கிறார்கள் என்று ஏற்பட்டது.

ஆம்; இந்தியாவின் செல்வங்களுக்குள்ளே முக் கியமான செல்வம் நமது ஆள் பலம்தான்.

முப்பத்தாறு கோடி மக்கள் என்றால் அற்ப சொற்பமல்ல. இவ்வளவு பேருடைய உழைப்பை யும் சரியான வகையில் உபயோகப்படுத்திக் கொள்ளத் திட்டம் வகுத்தால் அதைக் காட்டிலும் இந் நாட்டின் முன்னேற்றத்துக்கு உகந்த திட்டம் வேறு இருக்க முடியாது.

இந்தியாவின் ஆள் பலம் முழுவதையும் எப்படி நல்ல முறையில் உபயோகப்படுத்துவது என்பதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை.

இதை ஐந்து வருஷத் திட்டம் வகுத்தவர்கள் உணர்ந்துதான் சென்ற மாதத்தில் அநுபந்தத் திட்டம் புதிதாக வெளியிட்டார்கள். "வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக முப்பத்தைந்து கோடி ரூபாய் செலவிடப் போகி றோம்" என்று சொன்னார்கள். அதிலேயும் "இத் தனை கோடி ரூபாய் செலவு" என்று குறிப்பிட் டார்களே தவிர, இத்தனை பேருக்கு வேலை கொடுக்கப் போகிறோம் என்று சொல்லவில்லை.

சுதந்திர சர்க்காரின் நிர்வாகத்தின் கீழ் தேசத் தில் சரியானபடி முன்னேற்றம் ஏற்பட்டு வரு கிறதா என்று தீர்மானிப்பதற்குப் பின் வரும்

கேள்விகளைப் போட்டுக் கொண்டு அவற்றுக்குப் பதில் கண்டு பிடித்துச் சொல்ல வேண்டும்:—

(1) இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னர் வேலை யில்லாம லிருந்தவர்கள் எத்தனை பேர்!

(2) அவர்களில் எத்தனை பேருக்குச் சுதந்திர சர்க்கார் வேலை தேடிக் கொடுத்திருக்கிறார்கள்!

(3) சுதந்திரம் வந்த பிறகு எத்தனை பேருக்கு ஜீவனோபாயம் இல்லாமற் போய் விட்டது!

4) தற்போது வேலையில்லாமல் திண்டாடுகிற வர்களின் தொகை முன்னைக் காட்டிலும் அதிக மாகி யிருக்கிறதா, குறைந்திருக்கிறதா!

(5) நடுத்தர வகுப்பார், தொழிலாளி வர்க்கத்தார் இவர்களின் வருமானம் சென்ற ஆறு வருஷங்களில் எந்த அளவில் உயர்ந்திருக்கிறது!

(6) முன்னம் ஒரு வேளை உணவு அருந்தியவர்களில் எத்தனை பேர் இப்போது இரண்டு வேளை உணவு அருந்துகிறார்கள்!

(7) முன்னம் வருஷத்துக்கு ஒரு தடவை துணி வாங்கியவர்கள் எத்தனை பேர் இப்போது இரண்டு தடவை வாங்குகிறார்கள்!

மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கெல்லாம் கிடைக்கும் பதில்கள் திருப்திகரமாக இருந்தால்தான், தேசம் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்று திருப்தி அடையலாம்.

"திடீர்த் திடீர் என்று சிலர் பெரும் பணம் சேர்த்துப் பணக்காரர்களாகி விடுவதைப் பார்க்கிறேன். எப்படி இவ்வளவு துரிதமாக இவர்கள் பணக்காரர்கள் ஆகிறார்கள் என்பது எனக்குப் பேராச்சரியம் விளைக்கிறது!" என்று சமீபத்தில் பண்டித ஜவாஹர்லால் நேரு கூறினார்.

சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வருமான வரியைச் சரிவரச் செலுத்தினால் நியாயமான முறையில் தொழில்களைச் செய்து யாரும் திடீர்க் குபேரர்கள் ஆக முடியாதுதான்.

# சராசரிக் கணக்கு சரியான கணக்கு அன்று

ஐந்து வருஷத் திட்டத்துக்காகச் செலவாகும் கோடிக் கணக்கான ரூபாயின் மூலமாக எத்தனை பேர் திடீர்ப் பணக்காரர்கள் ஆகி யிருக்கிறார்கள் என்பதை நேருஜி விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

மொத்தத்தில் ஐந்து வருஷத் திட்டத்தினால் தேசத்தில் பொருள் உற்பத்தி இவ்வளவு அதிகமாகி யிருக்கிறது. மக்களின் சராசரி வருமானம் இவ்வளவு உயர்ந்திருக்கிறது என்று கணக்குப் போட்டுச் சொல்லித் தேச முன்னேற்றத்தை மதிப்பிடுவதும் முறையாகாது.

சராசரி வருமானத்தைக் கொண்டு மக்களின் சுபிட்சத்தை மதிப்பிடுவது, சராசரி ஆழத்தைத் தெரிந்து கொண்டு நதியைக் கடக்க முயன்றவனின் கதையாகவே முடியும்.

ஆறு அடி உயரம் வளர்ந்திருந்த ஒருவன், "நமக்கு நீந்தத் தெரியாமற் போனால் என்ன! இந்த ஆற்றின் ஆழம் சராசரியில் மூன்று அடி தானே!" என்று நினைத்துக்கொண்டு வெள்ளத்தில் இறங்கினான். வெகு தூரம் வரையில் ஒரு அடி, ஒன்றரை அடி ஆழந்தான் இருந்தது. பிறகு மூன்று அடி, நாலு அடி வரைக்கும் வந்தது. நதியின் மத்தியில் ஒன்பது அடி ஆழம் இருந்தது. அப்படி இருந்தது கொஞ்ச தூரந்தான் என்றாலும், அந்த ஆள் அங்கே வெள்ளத்தில் மூழ்கி உயிர் துறக்க வேண்டியதாயிற்று. சராசரிக் கணக்கு அவனுடைய உயிரைக் காப்பாற்றவில்லை.

அதுபோலவே செல்வப் பெருக்குப் பற்றிய சராசரிக் கணக்கும் தேசத்தைக் காப்பாற்றாது.

பம்பாயிலோ, கல்கத்தாவிலோ உள்ள முதலாளிகள் — வர்த்தகப் பிரமுகர்களின் வருமானம் மூன்று மடங்கு உயர்ந்திருக்கலாம்.

சேலம் ஜில்லா கிராமங்களில் மாதம் முப்பது ரூபாய் சம்பாதித்து உயிர்வாழ்ந்து கொண்டிருந்த ஏழையின் வருமானம் முப்பதிலிருந்து பதினைந்து ரூபாயாகக் குறைந்திருக்கலாம்.

இப்படி ஆகி யிருந்தால், தேசம் மொத்தத்தில் முன்னேற்றம் அடைந்திருப்பதாகச் சொல்லி நாம் சந்தோஷப்பட முடியாது.

தஞ்சை ஜில்லாவின் நஞ்செய் வயல்களில் நெல் விளைவு ஒன்றுக்கு இரண்டு மடங்கு ஆகலாம். அதே சமயத்தில் வட ஆற்காடு ஜில்லாவில் பல்லாயிரம் ஏழைத் தொழிலாளிகளுக்கு வேலையும் கூலியும் இல்லாமற் போயிருந்தால், தஞ்சை ஜில்லாவில் விளைந்த நெல்லும் வாங்குவாரின்றித் தேங்கிக் கிடக்கும்; வட ஆற்காடு ஜில்லாவிலே வேலையில்லாத ஏழை மக்கள் பட்டினி கிடந்து மடிந்து கொண்டிருப்பார்கள்.

அந்த நிலைமையில் தேசம் சராசரி முன்னேற்றம் அடைந்து வருகிறது என்று சொல்லுவது பேதைமை ஆகுமல்லவா!

இத்தகைய பேதைமையின் சிகரம் என்று சொல்லக் கூடிய யோசனை ஒன்று சில காலமாகப் பெரிய இடங்களில் பேசப்பட்டு வருகிறது.

ஆங்கிலத்தில் 'Rationalisation of Industries' என்று சொல்கிறார்கள்.

தமிழ்ப் பத்திரிகைகளில் 'தொழிற் சீரமைப்பு' என்று குறிப்பிடுகிறார்கள்.

தற்சமயம் நாட்டில் உள்ள பெரிய தொழிற் சாலைகளில் பழைய காலத்துப் பழுது பட்ட இயந்திரங்களை உபயோகித்து வேலை நடைபெறுகிறதாம். இதனால் அநாவசியமாக அதிகமான ஆட்கள் வேலை செய்ய நேருகிறதாம். பழைய இயந்திரங்களைக் கழித்துக் கட்டி விட்டு, புதிய இயந்திரங்களை அமைத்தால் குறைவான ஆள் பலத்தைக் கொண்டு அதிகமான பொருள்களை உற்பத்தி செய்யலாமாம். அப்போது அப்பொருள்களின் விலை மலிவுமாம்! இதைத்தான் "தொழில் சீரமைப்பு" என்ற சொற்றொடரால் குறிப்பிடுகிறார்கள்.

நாட்டின் தற்போதைய நிலையில், மேற்படி ஏற்பாட்டைத் "தொழிற் சீரமைப்பு" என்று சொல்லுவதை விடச் "சமுதாயச் சீர் குலைப்பு" என்று கூறுவது பொருத்தமா யிருக்கும்.

ஏற்கனவே, தேசத்தில் வேலை யில்லாமை மிகுந்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் தொழில் செய்து பிழைத்தவர்கள் பலர் இப்போது பிழைப்பை இழந்து திண்டாடுகிறார்கள். "என்னத்திற்கு இந்தச் சுதந்திரம் வந்தது!" என்று ஆத்திரத்துடன் கேட்கிறார்கள்.

ஆள் பலத்தைப் பூரணமாக உபயோகிப்பது என்ற அடிப்படையில் ஐந்து வருஷத் திட்டம்

வருக்கப்படவில்லை. இதனால், வேலையில்லாமை வளர்ந்து வருகிறது; சமூகத்தில் பல பகுதியாரின் வருமானம் குறைந்து வருகிறது.

எனவே, தற்போதையச் சூழ்நிலையில் வேலையில்லாமையை அதிகமாக்கக் கூடிய திட்டம் எதுவும் தேசியத் தற்கொலைத் திட்டமேயாகும்.

குழப்பவாதிகளுக்குப் பலம் கொடுக்கக் கூடிய திட்டமாகவே முடியும்.

நாட்டில் எத்தனை எத்தனையோ புதிய புதிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது. ஊசி முதல் மோட்டார் வண்டி வரையில் உற்பத்தி செய்வதற்கு எத்தனையோ புதிய தொழில்களை ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது.

இப்படிப் புதிதாக ஆரம்பிக்கும் தொழில்களில் 'சிரமைப்பு' முறைகளைக் கையாளலாம் அல்லவா! மிக மிக நவீன இயந்திரங்களை அமைத்துக் குறைந்த ஆள் பலத்தைக் கொண்டு அதிக பொருள்களை உற்பத்தி செய்து குறைந்த விலைக்கும் விற்கலாம் அல்லவா!

அப்படிப் பல புதிய தொழில்கள் ஆரம்பித்து, தேசத்தில் வேலையில்லாமை என்பது ஒழிந்து "வேலைக்கு ஆள்கள் வேண்டும்; கிடைக்கவில்லை" என்ற நிலைமை ஏற்படும் போது, பழைய ஆலைத் தொழில்களிலும் சிரமைப்பை அமுலுக்குக் கொண்டு வரலாமே! அது வரையில் இத்தனை நாள் நடந்தது போல நடக்கட்டும் என்று விட்டிருக்கலாமே! வேலையில்லாதார் பட்டாளத்தை அதிகமாக்கிக் குழப்பவாதிகளுக்குப் பலம் தேடித் தராமல் இருக்கலாம் அல்லவா!

** ** **

எத்தனை பேருக்கு வேலை தேடிக் கொடுக்கலாமோ, அவ்வளவு பேருக்கும் விரைவில் வேலை தேடிக் கொடுக்க வேண்டும்.

குடும்ப வரவு செலவைச் சரிக்கட்ட முடியாமல் திண்டாடும் நடுத்தர வகுப்பார், ஏழை விவசாயிகளின் வருமானத்தை எவ்வளவு தூரம் உயர்த்தலாமோ அவ்வளவு உயர்த்த வேண்டும்.

இந்த இரண்டு துறைகளிலும் ஏற்படும் முன்னேற்றமே உண்மையில் தேச முன்னேற்றமாகும்.

இதை மனத்தில் வைத்துக்கொண்டு போடும் திட்டங்கள்தான் உண்மையில் தேச முன்னேற்றத்துக்கு உகந்த திட்டங்களாகும்.

# புதிய காலேஜ் வேண்டியதுதானா?

தஞ்சை மாநகரில் காலேஜு இல்லாமலிருக்கும் குறைபாட்டை நீக்கச் சில பிரமுகர்கள் முயற்சி தொடங்கியிருக்கிறார்கள். இவர்களுடைய நல்ல நோக்கத்தை நாம் பாராட்டுகிறோம்.

இந்த முயற்சி சம்பந்தமாக யோசிக்கக் கூடிய பூர்வாங்கக் கூட்டத்தில் சர் தார் ஏ. வேதரத்தினம் பிள்ளை அவர்கள் "வெறும் பி. ஏ. காலேஜ் என்னத்துக்கு! தொழில் நுட்பக் கல்லூரி ஏற்படுத்தலாமே!" என்று சொன்னாராம். இதை மற்றவர்கள் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. காதில் வாங்கிக் கொள்வார்கள் என்று சர் தார் வேதரத்தினமும் எதிர்பார்த்திருக்க மாட்டார்.

தச்சுத் தொழில் செய்த ஏசுநாதருடைய உபதேச மொழிகள் உலகில் மிகச் சிறந்த இலக்கியமாகக் கருதப் படுகின்றன. அவை அடங்கிய கிறிஸ்துவ வேதமாகிய விவிலிய நூலைப் போல் இந்த உலகில் கோடிக் கணக்கில் விநியோகமாகியிருக்கும் புத்தகம் வேறு ஒன்றுமில்லை.

நெசவுத் தொழில் செய்த வள்ளுவர் இயற்றிய திருக்குறள் உலகத்தின் மிகச் சிறந்த நூல்களில் ஒன்றாகப் போற்றப்பட்டு வருகிறது.

நக்கீரர் பெருமான் "சங்கறுப்பது எங்கள் குலம்; சங்கரர்க்கு இங்கு ஏது குலம்!" என்றார். பரமசிவனைப் பார்த்து, "நாங்கள் சங்கு அரிந்து பிழைப்போமே யன்றி உம்மைப் போல் இரந்து பிழைக்க மாட்டோம்!" என்று அறைந்தார்.

ஆங்கிலப் பள்ளிக் கூடத்தின் நிழலிலேயே ஒதுங்காதவரும் மூன்றும் வகுப்பு வரையிலேயே படித்தவருமான ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பெரிய பெரிய கல்விமான்களால் மகா ஞானி என்று போற்றப் பட்டார்.

அக்பரும் ஹைதர் அலியும் கை யெழுத்துப் போடத் தெரியாதவர்களாயிருந்தும் மகத்தான சாம்ராஜ்யங்களை ஸ்தாபித்து ஆண்டார்கள்.

முழுதாக ஒரு வருஷம் கூடப் பள்ளிக்கூடம் போய்ப் படிக்காதவரும் கட்டை பிளந்து பிழைத்தவருமான ஆப்ரஹாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாகி உலக சரித்திரத்தில் இணையில்லாத பெருமையை அடைந்தார். அவர் பிளந்த மரப் பிளாச்சுகள் இன்னும் கண்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

இத்தகைய சரித்திர பூர்வமான உதாரணம் எதுவும் நம்மவர்கள் விஷயத்தில் பயன்படவில்லை.

தமிழ் நாட்டில் நம் கண் முன்னால் இரண்டு பெருந் தலைவர்கள் இங்கிலீஷ் படிப்பு இல்லாவிட்டாலும் அரசியலில் தலைமைப் பீடத்துக்கு வர முடியும் என்று நிரூபித்து வருகிறார்கள்.

ஸ்ரீ ராமசாமிப் பெரியார் மூன்றும் வகுப்புக்கு மேல் படித்ததில்லை. ஆனாலும் தமிழகத்தில் அவர் ஒரு பெரிய பிரம்மாண்டமான அரசியல் — சமூக சக்தியாக விளங்கி வருகிறார்.

அந்த அளவிலேயே பள்ளிக் கூடத்தில் படித்தவரான ஸ்ரீ காமராஜ நாடார் பதின்மூன்று வருஷமாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை வகித்து, அகில இந்தியக் காரியக் கமிட்டியில் அங்கம் வகித்து, இப்போது இந்த இராஜ்யத்தின் முதன் மந்திரி பதவிக்கு வந்திருக்கிறார்.

"என்னை விட அரசியலில் ஸ்ரீ காமராஜ் தான் கெட்டிக்காரர்" என்று ராஜாஜியே ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று.

தொழில் துறையில் எடுத்துக் கொண்டால், சமீபத்தில் துரதிர்ஷ்டவசமாக விமான விபத்துக்கு உள்ளாகிக் காலமான ஒரு தமிழ் நாட்டுப் பிரமுகர் எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்கு மூன்று தடவை சென்று தோல்வியடைந்தார். அத்துடன் படிப்பை விட்டுத் தொலைத்தார். ஆனால் இந்தியாவில் மிகப் பெரிய ஆயுள் காப்பீடு கம்பெனி ஒன்றையும், பாங்கி ஒன்றையும் நிர்வகித்து இணையில்லா வெற்றியடைந்தார்.

இப்படிப்பட்ட பிரத்யட்ச உதாரணங்களும் நம்மவர்கள் விஷயத்தில் பயன்படவில்லை. பி. ஏ. பட்டத்தில் உள்ள மோகம் தீர்ந்தபாடில்லை.

இன்னமும் புதியபுதிய காலேஜுகள் ஏற்படுத்தி வருகிறார்கள்; வேலையில்லாத பி. ஏ. பட்டதாரிகளின் தொகையைப் பெருக்கி வருகிறார்கள்.

இதனால் சர்தார் வேதரத்தினம் பிள்ளை போன்றவர்கள் மனச் சோர்வு அடையக் கூடாது. ''சங்கு ஊதுகிறபோது ஊதினால் பொழுது விடிகிறபோது விடியட்டும்!'' என்று அவர்கள் உண்மையை எடுத்துச் சொல்லிக் கொண்டே யிருக்க வேண்டும். இன்றைக்குப் பயன் தராமற் போனாலும் பின் ஒரு காலத்தில் பயன் அளித்தே தீரும்.

இராஜ்ய நிர்வாகக் காரியங்கள் எல்லாம் இனிக் கொஞ்ச காலத்தில் அந்தந்தப் பிரதேச மொழிகளிலேயே நடைபெறப் போகின்றன. இந்த ஏற்பாடு அமுலுக்கு வரும்போது எஸ். எஸ். எல். சி. க்கு மேலே படித்தவர்கள் அரசாங்க உத்தியோகங்களுக்குத் தேவை யில்லை என்று கண்டிப்பாக ஏற்படுத்தி விடுவார்கள்.

பின்னர் காலேஜுப் படிப்பின் பேரில் மோகம் படிப்படியாகக் குறைந்தே தீரும்.

உலக மகா இலக்கியங்களையும் கவிதைகளையும் அநுபவிக்கவும் விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஈடுபடவும் ஆர்வம் உள்ள இளைஞர்களே கலாசாலைகளைத் தேடி வருவார்கள்.

அப்போதுதான் நம் கலாசாலைகளும் உண்மையான கலைக் கோயில்களாக விளங்கும்.

# “மூட்டை கட்டுங்கள்!”

பிரஞ்சு இந்திய மக்களின் மகத்தான புரட்சி வெள்ளத்தில், பிரஞ்சு அதிகார வர்க்கம் தத்தளித்து வருகிறது அல்லவா! இதைக் கண்டு போர்ச்சுகல் சர்க்காருக்குப் பெரும் திகில் ஏற்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரம் அதே போன்ற புரட்சி வெள்ளம் தங்களையும் திணற அடிக்குமோ என்று அவர்கள் பீதி கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில் போர்ச்சுகலின் நிர்வாகத்தில் உள்ள பிரதேசங்களும் இந்தியாவுடன் ஐக்கியம் அடையும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்ற கவலை போர்ச்சுகல் சர்க்காருக்கு உண்டாகி விட்டது. எனவே, வெள்ளத்தில் மூழ்குவோன் அதில் மிதக்கும் துரும்பு தன்னைக் காப்பாற்றும் என்று எண்ணுவது போல, கோவா முதலிய பிரதேசங்களில் தங்களுடைய ஆதிக்கத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போர்ச்சுகல் சர்க்கார் குதர்க்க வாதமாகிற துரும்பைத் தொத்திக்கொள்ள முற்பட்டிருக்கிறார்கள்!

சில தினங்களுக்கு முன் போர்ச்சுகல் பிரதம மந்திரி டாக்டர் சலாஸர் போர்ச்சுகல் தலைநகரமான லிஸ்பனில் பேசியபோது, இந்தியாவில் போர்ச்சுகலின் நிர்வாகத்தில் உள்ள பிரதேசங்களைப் பற்றிக் குறிப்பிட்டார். 1642-ம் ஆண்டில் பிரிட்டனுக்கும் போர்ச்சுகலுக்கும் செய்து கொண்ட துருப்பிடித்துப் போன பழைய உடன்படிக்கையை அவர் கட்டிக் காட்டினார். அந்த உடன்படிக்கையின்படி, போர்ச்சுகலுக்குச் சொந்தமாக உள்ள காலனிகளை, போர்ச்சுகீசியர்களின் பிடியிலிருந்து நழுவாமல் பாதுகாத்துக் கொடுப்பதாகப் பிரிட்டன் உத்தரவாதம் அளித்திருக்கிறதாம். எனவே, இந்தியாவில் தங்களுடைய ஆதிக்கத்தில் உள்ள பிரதேசங்களில் தங்களுடைய அதிகாரத்துக்கு யாதொரு ஆபத்தும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது பிரிட்டனின் கடமை என்பது டாக்டர் சலாஸரின் அபிப்பிராயம்!

எத்தனையோ உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் உதறித் தள்ளிவிட்டுப் பிரிட்டிஷாரே இந்தியாவிலிருந்து வெளியேறிச் சென்று விட்டார்கள். பிரிட்டிஷாருடன் இந்திய மன்னர்கள் செய்து கொண்டிருந்த உடன்படிக்கைகளாலும் மேற்படி மன்னர்களின் அதிகாரத்தைக் காப்பாற்ற முடியவில்லை. அப்படி யிருக்க, முந்நூறு வருஷங்களுக்கு முன் தாங்கள் பிரிட்டனுடன் செய்துகொண்ட உடன்படிக்கை தங்களைக் காப்பாற்ற வல்லது என்று போர்ச்சுகீசியர்கள் கனவு காண்பது விந்தை அல்லவா!

''நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் காலடி வைத்தது போர்ச்சுகீசியர்களான நாங்கள்தான்; எனவே எங்களுக்கு இந்தியாவில் அதிக பாத்தியதை உண்டு'' என்று சில மாதங்களுக்கு முன் பிரதம மந்திரி டாக்டர் சலாஸர் கூறியது ஞாபகம் இருக்கலாம்.

மற்றும் இந்தியாவில் உள்ள கோவா முதலிய பிரதேசங்கள் போர்ச்சுகலைச் சேர்ந்த மாகாணமே யாகும் என்றும் அவர் துணிந்து ஒரு போடு போட்டதை யாரும் மறந்திருக்க முடியாது.

ஆனால், இத்தகைய குதர்க்க வாதங்களுக்கு நமது பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜி சரியான பதில் கொடுத்துள்ளார்.

காலதாமதமின்றி, கண்ணியமாகவும் நல்லுறவுக்குக் குந்தகம் ஏற்படாமலும் மூட்டை கட்டிக் கொண்டு வெளியேறுங்கள் என்பதுதான் நேருஜி அளித்துள்ள பதில் ஆகும்.

எந்தக் காலத்திலோ செய்து கொண்ட துருப்பிடித்துப் போன உடன்படிக்கை சுதந்திர இந்தியாவை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது. பிரம்மாண்ட தேசமான இந்தியாவில் அங்கும் இங்குமாகச் சில திட்டுப் பிரதேசங்கள் அன்னியர்களுக்குச் சொந்தமாக இருப்பதை இந்தியா சகித்துக் கொண்டிருக்க முடியாது என்று இந்தியாவின் பிரதம மந்திரி தெளிவாகக் கூறி யிருக்கிறார்.

ஒரு நாட்டைச் சேர்ந்த பிரதேசங்களில் மற்றொரு நாடு ஆதிக்கம் செலுத்த முற்படுவது ஜனநாயக அடிப்படைக்கே முரணானது. இந்த உண்மையைப் போர்ச்சுகல் சர்க்கார் உணர்ந்து, காலம் கடவாமல் பரிகாரம் செய்ய முன் வர வேண்டும். அவ்விதம் செய்தாலன்றி, பிரஞ்சு அதிகார வர்க்கத்தை இன்று திக்கு முக்காட வைக்கும் புரட்சி வெள்ளம், போர்ச்சுகல் அதிகார வர்க்கத்தையும் சூழ்ந்துகொள்ள அதிக காலம் ஆகாது.

மக்களின் சுதந்திர உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்துப் போர்ச்சுகல் சர்க்கார் கண்ணியமான முறையில் கோவா முதலிய பிரதேசங்களில் தாங்கள் செலுத்தி வரும் ஆதிக்கத்தை விட்டு விட்டு வெளியேறுவார்களானால் அவர்களுக்கு இந்திய மக்களின் நல்லெண்ணமும் இந்திய சர்க்காரின் நட்பும் கிடைத்து வரும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் உலக நாடுகளின் மத்தியில் போர்ச்சுகல் சர்க்காரின் மதிப்பு உயரும்.




## அத்தியாயம் 88

# பட்டாபிஷேகம்

அருள்மொழிவர்மர் தொடர்ந்து புலவரைப் பார்த்துக் கூறினார்:—"ஐயா! தங்களை இன்னும் ஒன்று கேட்கிறேன். சிபிச் சக்கரவர்த்தி முதல் சிவஞான கண்டராதித்தர் வரையில் எங்கள் சோழ குலத்து மன்னர்களின் புகழைத் தாங்கள் விரித்துரைத்தீர்கள். அவையெல்லாம் இந்தப் புராதன குலத்தில் பிறக்கும் பாக்கியம் பெற்ற எனக்கு எவ்வளவு பொருத்தமோ, அவ்வளவு என் சிறிய தந்தையும் மகான் கண்டராதித்த சோழரின் உத்தமத் திருப் புதல்வருமான மதுராந்தகத் தேவருக்கும் பொருத்தமாகு மல்லவா?"

புலவர் "ஆம்" என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். சபையிலிருந்தவர்கள் அத்தனை பேரின் கண்களும் சுந்தர சோழரின் மறு பக்கத்தில் அடக்க ஒடுக்கத்துடன் அமர்ந்திருந்த மதுராந்தகத் தேவரின் மீது திரும்பின. இப்போதுதான் புதிதாகப் பார்ப்பது போல் மதுராந்தகரைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினார்கள். முன்னமே மிக்க கூச்சத்துடன் அமர்ந்திருந்த மதுராந்தகர் இப்போது மேலும் சங்கோசம் அடைந்தவராகிப் பூமாதேவியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டு குனிந்த தலை நிமிராம லிருந்தார்.

** ** **

இதற்கிடையில் மாறுவேடம் பூண்டிருந்த ஆழ்வார்க்கடியான் மண்டபத்தின் ஒரு மூலைக்கு அவனை அழைத்துச் சென்ற சின்னப் பழுவேட்டரையரிடம் கவலைதரும் ஒரு செய்தியைக் கூறினான். பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளைச் சேர்ந்தவளும் படகோட்டி முருகய்யனின் மனைவியுமான ராக்கம்மாள் என்பவளை மகுடாபிஷேக வைபவத்துக்காக வந்து கூடியிருந்த ஜனத்திரளிடையே அவன் கண்டான். எதற்காக இங்கே அவள் வந்திருக்கிறாள் என்பதை அறியும் பொருட்டுப் பின்தொடர்ந்து சென்றான். சின்னப் பழுவேட்டரையரின் அரண்மனைக்கு அருகில் ஜனக் கூட்டத்தில் அவள் மறைந்து விட்டாள். ஆழ்வார்க்கடியான் அங்கேயே நின்று அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தபோது அவள் மறுபடியும் காணப்பட்டாள். அவளுடன் இன்னொரு பெண் இடுப்பில் ஒரு குழந்தையுடன் சென்றாள். அந்த இன்னொரு பெண் சின்னப் பழுவேட்டரையரின் மகளைப்போல் தோன்றவே ஆழ்வார்க்கடியான் இன்னது செய்வது என்று தெரியாமல் சிறிது நேரம் திகைத்தான். சின்னப் பழுவேட்டரையரின் மகள்தான் என்று நிச்சயமாகச் சொல்லவும் முடியவில்லை. கொஞ்ச தூரம் அவர்களுடன் போய் உறுதி செய்து கொள்ளலாம் என்று போனான். கூட்டத்தில் அவர்களைப் பின்தொடர்ந்து போவது எளிய காரியமாக இல்லை. அவன் பின்தொடர்ந்து வருகிறான் என்பதை ராக்கம்மாளும் கவனித்திருக்க வேண்டும். அவள் திடீரென்று கூட்டத்துக்கு மத்தியில் "ஐயையோ! இந்த ஆள் எங்களைத் தொந்தரவு செய்கிறான். பெண்களைத் தொடர்ந்து வந்து தொல்லை கொடுக்

கிருன்!" என்று கூச்சலிட்டாள். உடனே அங்கு நின்ற ஜனங்களில் பலர் ஆழ்வார்க்கடியானைச் சூழ்ந்து கொண்டு அவனைக் கண்டிக்கத் தலைப்பட்டார்கள். அவர்களிடம் ஆழ்வார்க்கடியான் அப்படியொன்றும் தான் செய்யவில்லை யென்றும், அவர்கள் எல்லாரையும் போல் தானும் மகுடாபிஷேகக் காட்சிகளைப் பார்க்க வந்தவன் என்றும் சத்தியம் செய்து கூறினான். அவனைச் சூழ்ந்து கொண்ட ஜனத் திரளைச் சமாதானப் படுத்தி விட்டு அவன் வெளியேறுவதற்குள் ராக்கம்மாளும் இடுப்பில் குழந்தையோடு கூடிய மற்றொரு பெண்ணும் மறைந்து விட்டார்கள். ஆழ்வார்க்கடியான் கோட்டை வாசல் வரையில் அவர்களைத் தேடிக் கொண்டு சென்றான். கோட்டை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு மூடு பல்லக்கில் குழந்தையுடன் கூடிய பெண் ஏறிக் கொண்டிருப்பதைக் கண்டான். பல்லக்கைச் சூழ்ந்து நாலு குதிரை வீரர்கள் நின்றார்கள். பல்லக்கில் அப் பெண் ஏறியதும், பல்லக்கும் குதிரைகளும் விரைந்து போகத் தொடங்கின. மேலும் அவர்களைத் தொடர்ந்து போகலாமா என்று யோசிப்பதற்குள் மகுடாபிஷேகத்தைப் பார்ப்பதற்காக வந்து கொண்டிருந்த ஒரு பெரிய ஜனக் கும்பல் ஆழ்வார்க்கடியானை இடித்துத் தள்ளிக் கொண்டு வந்து வெகு தூரம் கோட்டைக்குள்ளே கொண்டு வந்து சேர்த்து விட்டது. அந்தச் செய்தியைக் கோட்டைத் தளபதியிடம் உடனே தெரிவிப்பது முக்கியமானது என்று கருதி ஆழ்வார்க்கடியான் பட்டாபிஷேக மண்டபத்துக்கு வந்து சேர்ந்தான். அருள்மொழி வர்மரின் கட்டளையின் பேரிலேயேதான் இவ்வாறு மாறு வேடம் பூண்டிருப்பதாயும், ஜனக் கூட்டத்தில் அங்கு மிங்கும் திரிந்து ஜனங்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை அறிந்து வந்து தம்மிடம் சொல்லும்படி பொன்னியின் செல்வர் பணித்ததாயும், அந்தக் கடமையை நிறைவேற்றி வரும் சமயத்திலேயே மேற்சொன்ன நிகழ்ச்சியைத்தான் காணும்படி நேர்ந்ததென்றும் ஆழ்வார்க்கடியான் விளக்கிய பிறகு, சின்னப் பழுவேட்டரையர் அவனுடைய வார்த்தைகளில் பூரண நம்பிக்கை கொண்டார். தன்னுடைய மகளாகிய பழைய மதுராந்தகன் மனைவியைப் பற்றி அவருக்கு முன்னமே கவலை இருந்து வந்தது. திருமலை கூறிய செய்தி அவருக்குத் திகிலை விளைவித்து மனக் குழப்பத்தையும் உண்டாக்கி விட்டது. தாம் தம் அரண்மனைக்குச் சென்று உண்மையை அறிந்து வருவதாகவும், தாம் அவசரமாகப் போக நேர்ந்ததைப் பற்றி முதன் மந்திரி அநிருத்தர் மூலம் சுந்தர சோழருக்கும் பொன்னியின் செல்வருக்கும் அறிவிக்கும் படியும் பணித்து விட்டுச் சின்னப் பழுவேட்டரையர் அந்த மண்டபத்தில் இருந்து வெகு வேகமாக வெளியேறினார்.

ஆழ்வார்க்கடியான் வந்து பொன்னியின் செல்வரிடம் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கவில்லை. தமிழ்ப் புலவர் நல்லன் சாத்தனாரிடம் பேசிக் கொண்டிருந்தபோதே இளவரசர் சின்னப் பழுவேட்டரையர் மீதும் கவனம் செலுத்தி வந்தார். அவர் மண்டபத்தை விட்டு அகன்றவுடன் பொன்னியின் செல்வருடைய திருமுகம் முன்னைக் காட்டிலும் ஒளி பொருந்தியதாயிற்று. சக்கரவர்த்தியின் பக்கம் திரும்பி நின்று அவர் கம்பீரமான குரலில் கூறலுற்றார் :—

"தந்தையே! நம் கோட்டைத் தளபதி சின்னப் பழுவேட்டரையர் ஏதோ மிக அவசர காரியமாக வெளியே செல்லுகிறார். அது காரணமாக இந்த மகுடாபிஷேக வைபவம் தடைப்பட வேண்டியதில்லை. இந்தச் சபையில் இன்னும் பல பெரியோர்கள் இருக்கிறார்கள். வீர மறக் குலத்து முதல்வர்கள் இருக்கிறார்கள். வேலும் வாளும் ஏந்தி எத்தனையோ போர்க்களங்களில் போர் செய்து விழுப்புண் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரேனும் தங்கள் வீரத் திருக்கரத்தினால் இந்தப் புராதன சோழ குலத்தின் மணி மகுடத்தை எடுத்துச் சூட்டலாம். அவ்வளவு பேரும் இந்தப் பொற் கிரீடத்தையும் உடை வாளையும் செங்கோலையும் தங்கள் ஆய்வந்த கரத்தினால் தொட்டு ஆசி கூறியிருக்கிறார்கள். ஆகையால் இனி என் கரத்தினால் நானே எடுத்து இம் மணி மகுடத்தைச் சூடிக் கொண்டாலும் தவறு ஒன்றுமில்லை. ஆனால், அப்படிச் செய்வதற்கு முன்னால், தந்தையே! தங்களிடத்தும் இங்கே விஜயம் செய்திருக்கும் பெரியோர்களுக்கும் மறக் குலத்தவர்களுக்கும் விண்ணப்பம் ஒன்று செய்து கொள்ள விரும்புகிறேன். புறாவின் உயிரைக் காப்பதற்காகச் சதையை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியின் பரம்பரையில் வந்தவன் நான். அதனால் நம் குலத்தவர் அனைவரையும் போல் 'செம்பியன்' என்ற



குலப்பெயர் பெற்றிருக்கிறேன். கன்றுக் குட்டியை இழந்த பசுவுக்கு நீதி வழங்கும் பொருட்டு மகனுக்கு மரண தண்டனை விதித்த மனு நீதிச் சோழரின் வம்சத்தில் வந்தவன் நான். நம் குலத்து முன்னோர்கள் அனைவரும் போர்க்களத்தில் புறமுதுகிடாத வீரர்கள் என்ற புகழ் பெற்றது போலவே, நீதி நெறியிலிருந்து அணுவளவும் தவறாதவர்கள் என்ற புகழையும் அடைந்து வந்திருக்கிறார்கள். அவர்களுடைய வழியில் வந்தவனாகிய நான் நீதி நெறிக்கு மாறாக நடக்கலாகுமா? இன்னொருவருக்கு நியாயமாக உரிய பொருளையோ, பதவியையோ அபகரிக்கலாமா? நம் ஆஸ்தானப் புலவர் நம் குல முன்னோர்களைப் பற்றி அழகான சந்தக் கவியில் பாடி வந்த போது அவர்கள் அனைவரும் என் மனக் கண் முன்னால் வந்து தரிசனம் அளித்தார்கள்.

இராஜ கேசரிகளும் பர கேசரிகளும் வரிசை வரிசையாக நின்று காட்சி தந்தார்கள். நலங்கிள்ளியும் நெடுங்கிள்ளியும் பெருங்கிள்ளியும் கோச்செங்கணாரும் என்னைக் கருணை ததும்பும் கண்களால் நோக்கி 'எங்கள் குலத்தில் உதித்த மகனே! இந்தச் சிங்காதனம் உனக்கு உரியதா என்று சற்று சிந்தித்துப் பார்!' என்றார்கள். விஜயாலயரும் ஆதித்தரும் பராந்தகரும் இராஜாதித்தரும் என்னை வீரத் திரு விழிகளால் பார்த்து, 'குமாரா! நீ இந்தச் சிங்காதனத்தில் ஏறுவதற்கு உரியவனாக என்ன வீரச் செயல் புரிந்தாய்? சொல்!' என்று கேட்டார்கள். நான் அவர்களுக்கு மறு






மொழி சொல்லத் தயங்கினேன். பின்னர் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அவர்களைக் கைகூப்பி வணங்கி விண்ணப்பித்துக் கொண்டேன். 'சோழ குலத்து முதல்வர்களே! நீங்கள் செய்த அரும் பெரும் செயல்களில் ஆயிரத்தில் ஒன்று கூட நான் செய்யவில்லை. ஆனால் உங்கள் ஆசியுடன் இனிமேல்தான் அத்தகைய காரியங்களைச் செய்யப் போகிறேன். நீங்கள் நிலைநாட்டிய சோழ குலத்துப் புகழ் மேலும் வளர்ந்தோங்கி நீடூழி நிலைத்திருக்கும் படியான காரியங்களைச் செய்யப் போகிறேன்.' செயற்கரிய செயல்களைச் செய்யப் போகிறேன். உலகம் வியக்கும் செயல்கள் புரியப் போகிறேன். வீராதி வீரர்களாகிய நீங்களே பார்த்து மெச்சும்படியான தீரச் செயல்களைப் புரிந்து உங்கள் எல்லாருடைய வாழ்த்துக்களையும் பெறப் போகிறேன்!' என்று இவ்விதம் என்னுடைய குலத்து முன்னோர்களிடம் நான் தெரிவித்தேன். அவர்களும் முகமலர்ந்து எனக்கு அன்புடன் ஆசி கூறினார்கள்......"



ஆவேச உணர்ச்சி ததும்புமாறு பொன்னியின் செல்வர் கூறி வந்த சொற்களைக் கேட்டுக் கொண்டு இருந்த அச்சபையில் உள்ளோர் எல்லாரும் ரோமாஞ்சனம் அடைந்தார்கள்.

அவர்களில் ஒருவர் "வீரவேல்! வெற்றி வேல்!" என்று முழங்கினார். உடனே சபையில் இருந்த அத்தனை பேரும் சேர்ந்து "வீரவேல்! வெற்றி வேல்!" என்று முழங்கிய ஒலி பட்டாபிஷேக மண்டபத்துக்கு வெளியிலும் கேட்டது. அங்கே கூடியிருந்த மக்களிடையே பெருங் கிளர்ச்சியை உண்டாக்கிற்று.

பொன்னியின் செல்வர் எல்லாருடனும் சேர்ந்து தாமும் "வெற்றி வேல்! வீரவேல்!" என்று முழங்கினார். முழக்கம் அடங்கியதும் கூறினார் :—"தந்தையே! சோழ நாட்டு வீரர்களுக்குரிய இந்த முழக்கம் ஒருசமயம், தங்கள் பாட்டனார் பராந்தக சக்கரவர்த்தியின் காலத்தில், வட பெண்ணைக்கு அப்பால் துங்கபத்திரை — கிருஷ்ணா நதி வரைக்கும் கேட்டது. அந்த நதிகளுக்கு அப்பாலுள்ள வேங்கி நாட்



டாரும் கலிங்க நாட்டாரும் கல்யாண புரத்தாரும் மானிய கேடத்தாரும் அந்த முழக்கத்தைக் கேட்டு நடு நடுங்கினார்கள். இன்னும் மேற்குத் திசையிலும் தெற்குத் திசையிலும் கிழக்குத் திசையிலும் நூறு நூறு மரக்கலங்களில் ஆயிரம் பதினா யிரம் சோழ நாட்டு வீரர்கள் சென்று இந்த நாட்டு வர்த்தகத்தைக் காப் பாற்றி வந்தார்கள். தந்தையே! தாங்கள் நோய்வாய்ப்பட்டுப் படுத்த நாளிலிருந்து சோழநாட்டு வீர முழக்கத்தின் தொனி குறைந்திருக்கிறது. நாலா புறமும் பகை வர்கள் தலையெடுத்து வருகிறார்கள். வேங் கியும் கலிங்கமும் கல்யாணபுரமும் மானிய கேடமும் நம்மை வலுச் சண் டைக்கு அழைக்கின்றன. வடக்கே இமய மலைக்கு அப்பாலிருந்து இந்தப் பழம் பெரும் பாரத தேசத்துக்கு வந்து கொண் டிருக்கும் பகைவர்களின் பேராபத்தைப் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. சோழ நாட்டின் வளத்தைப் பார்த்துப் பொறா மைப் பட்டுப் புழுங்கிக் கொண்டிருக்கி றார்கள். இலங்கையில் மகிந்தன் இன்ன மும் படை திரட்டிச் சேர்த்துக் கொண் டிருக்கிறான். வீர பாண்டியன் இறந்து விட்டாலும் அவனுடைய குலத்தைச் சேர்ந்தவன் என்று யார் தலையிலாவது பாண்டிய நாட்டு மணி மகுடத்தைச் சூட்டிக் கலகம் உண்டாக்க முயன்று கொண்டிருக்கிறான். மகிந்தனும் பாண் டிய நாட்டு ஆபத்து உதவிகளும் சேர்ந்து சதி செய்து, வீரத்திலே அபிமன்யுவை யும் அரவானையும் நிகர்த்த என் அரு மைத் தமையனார் ஆதித்த கரிகாலரின் உயிருக்கு இறுதி தேடி விட்டார்கள். மேற்கே சேர மன்னன் பெரியதோர் யானைப் படையையும் மரக்கலப் படை யையும் சேகரித்துக் கொண்டிருக்கிறான். சேரனுக்கு மரக்கலப் படையைத் தயா ரித்துக் கொடுப்பதில் மேற்குத் திசையி லிருந்து புதிதாகக் கிளம்பி யிருக்கும் ஒரு முரட்டுக் கூட்டத்தார் உதவி செய்கி றார்கள். சோழ நாட்டைச் சூழ்ந்திருக்கும் புதிய பேரபாயம் இது. தந்தையே! நெடுங் காலமாக அரபு தேசத்தவர்கள் கப்பல் தொழிலில் சிறந்து விளங்கு கிறார்கள். சீன தேசம் வரையில் சென்று வர்த்தகம் நடத்தி வருகிறார்கள். நமது நாட்டுத் துறைமுகங்களுக்கும் அவர்கள் அடிக்கடி வந்து செல்வதுண்டு. நாக ரிகத்தில் சிறந்த அந்தப் பழைய அராபி யர்களை அடக்கி ஒடுக்கி விட்டு, புதிய அராபியர்க் கூட்டம் ஒன்று இப்போது கிளம்பி யிருக்கிறது. அவர்கள் அராபி யர்கள்தானா அல்லது அக்கம் பக்கத்து நாட்டவர்களோ, நாம் அறியோம். ஆனால் மூர்க்கத்தனத்தில் அவர்களை மிஞ்சியவர் களை எங்கும் காண முடியாது. நானே அவர்களுடைய செயல்களை நேரில் பார்க் கும்படி நேரிட்டது. என்னைச் சிறைப் படுத்தி அழைத்துக் கொண்டு வருவதற் காகத் தங்கள் கட்டளையின் பேரில் நம் கோட்டைத் தலைவர் சின்னப் பழுவேட் டரையர் இரண்டு கப்பல்களில் வீரர் களை அனுப்பி வைத்திருந்தார்......"

சுந்தர சோழர் இந்தச் சமயம் குறுக் கிட்டுத் தழதழத்த குரலில், "மகனே! அப்படி நான் அனுப்பிய காரணத்தை நீ அறியாயா?" என்று கேட்டார்.

"தந்தையே! அதை நான் நன்கு அறிந் துள்ளேன். இங்கே அரசியல் உரிமை பற்றிக் குழப்பம் நேர்ந்திருந்தது; பாண் டிய நாட்டு ஆபத்து உதவிகளைப் பற்றி யும் கேள்விப் பட்டிருந்தீர்கள்; ஆகை யால் என்னைப் பத்திரமாகத் தங்களிடம் கொண்டு சேர்ப்பதற்காகவே சிறைப் படுத்திக் கொண்டுவரச் சொன்னீர்கள். என் மீது தங்களுடைய அளவில்லாத அன்பும் பரிவுந்தான் அத்தகைய கட்டளை இடும்படி செய்தது. எல்லாருக்கும் அது நன்கு தெரியட்டும் என்றுதான் இங்கே சொல்கிறேன். அப்படி என்னைச் சிறைப் படுத்த வந்த நம் வீரர்கள் நூற்றுக் கணக்கானவர்கள். ஈழ நாட்டுக் கடற் கரையில் உடைந்த கப்பலிலிருந்து வந்து ஒதுங்கியிருந்த அராபியர்களோ பத்து பேருக்கு மேலிருக்க மாட்டார்கள். நம் வீரர்களில் எத்தனை பேரை அவர்கள் திடீரென்று தாக்கிக் கொன்று விட் டார்கள் என்பதைப் பார்த்த நான் அடைந்த வேதனை இன்னமும் என் மனத்தை விட்டு அகலவில்லை. அந்தப் புதிய அராபிய சாதியார் சேர மன்ன னுக்குக் கப்பல் கட்டுவதில் உதவி செய்கிறார்கள். அது மட்டுமல்ல; கலிங்க நாட்டாருடனும் தொடர்பு கொண்டு இருக்கிறார்கள். மூன்று நாட்டாரும் சேர்ந்து சோழ நாட்டுக் கடல் வாணி பத்தை அடியோடு அழித்துவிடத் தீர்மா னித்திருக்கிறார்கள். கடல் கொள்ளைக் காரர்கள் அரபு நாட்டாரா யிருந்தால் தானென்ன, அல்லது நம்முடன் எத் தனையோ விதத்தில் தொடர்பு கொண்ட சேர தேசத்தாராயிருந்தால் தானென்ன? நம் கடல் வாணிகத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால், நமது கடற் படையைப் பெருக்கிக் கொள்ள வேண்

டும். ஆயிரமாயிரம் புதிய மரக்கலங்களைக் கட்ட வேண்டும். புதிய புதிய மாலுமிகளைப் பழக்க வேண்டும். கப்பலில் இருந்து கொள்ளைக் காரர்களுடன் போரிடக் கூடிய வீரர்களைச் சேர்க்க வேண்டும். கீழைக் கடலில் உள்ள தீவுகளில் எல்லாம் புலிக் கொடியை நாட்டி, ஆங்காங்கே நம் வீரர்களை நிறுத்தி வைக்க வேண்டும். தந்தையே! இந்தக் காரியங்களை யெல்லாம் செய்வதாக நம் குலத்து முன்னோர்களுக்கு நான் வாக்குறுதி அளித்திருக்கிறேன். அதை நிறைவேற்றுவதற்குத் தங்களுடைய அநுமதி வேண்டும். இந்தச் சபையிலுள்ள பெரியோர்களின் சம்மதியும் வேண்டும்!"

இவ்வாறு பொன்னியின் செல்வர் கூறி நிறுத்தியவுடன் சுந்தர சோழர், "மகனே! சோழ குலத்து வீரப் புகழை நீ வளர்ப்பதற்கு நான் தடை செய்வேனா? சோழ நாட்டுக் கடல் வாணிபத்தைப் பாதுகாப்பதற்கு இந்த மகா சபையிலுள்ள பெரியவர்கள்தான் தடை சொல்லப் போகிறார்களா?" என்றதும், மீண்டும் அச் சபையில் "வீரவேல்! வெற்றி வேல்!" என்ற முழக்கம் எழுந்தது.

"தந்தையே! தாங்களும் இச் சபையோரும் தடை சொல்ல மாட்டீர்கள். நான் ஏற்கும் காரியங்களில் வெற்றியடைய வேண்டும் என்று ஆசி கூறியும் அனுப்புவீர்கள். தங்கள் ஆசி நிறைவேறி நான் எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்க வேண்டும் என்றால், முதலில் என் உள்ளத்தில் நிம்மதி ஏற்பட வேண்டும். 'நேர்மையற்ற காரியம் எதையும் நான் செய்யவில்லை. என் குலத்து முன்னோர்கள் அங்கீகரிக்க முடியாத செயல் எதுவும் நான் புரியவில்லை. பிறருக்கு உரியதை நான் ஆசையினால் அபகரித்துக் கொண்டு விடவில்லை' என்ற உறுதியை நான் அடைய வேண்டும். குல தர்மத்துக்கு ஒவ்வாத காரியத்தை இங்கே நான் செய்து விட்டுப் புறப்பட்டேனானால், என் உள்ளம் என்னை வருத்திக் கொண்டேயிருக்கும். பகைவர்களிடம் போரிட்டு எப்படி வெற்றி கொள்வேன்? தர்மத்தை நிலைநாட்டப் போராடுகிறோம் என்ற நம்பிக்கை என் மனத்தில் எப்படி ஏற்படும்? முன்னொரு தடவை இலங்கைச் சிங்காதனத்தை நான் கவர்ந்து கொள்ள ஆசைப்பட்டதாக ஒரு பெரும் வதந்தி ஏற்பட்டது......"

"குழந்தாய்! அதை யாருமே நம்பவில்லையே! நீ அத்தகைய குற்றத்தைச் செய்யக் கூடியவன் என்று எவரும் எண்ணவில்லை" என்றார் சக்கரவர்த்தி.

"தாங்கள் நம்பியிருக்க மாட்டீர்கள், தந்தையே! ஆனால் அத்தகைய பேச்சு என் காதில் விழுந்ததும் என் மனம் எவ்வளவோ வேதனைப்பட்டது. ஈழநாட்டுப் பிக்ஷுக்கள் எனக்கு அளித்த மணி மகுடத்தை நான் வேண்டாம் என்று மறுதளித்ததை என் நண்பர்கள் இருவர் அறிவார்கள். அவர்கள் அப்போது என் அருகிலேயே இருந்தார்கள்......"

சபையில் இருந்த புத்த பிக்ஷுக்களின் தலைவர் "ஆம், ஆம்! நாங்களும் அதை அறிவோம்" என்று சொன்னார்.

"ஒரு பொய்யான அவதூறு என் உள்ளத்தில் அவ்வளவு வேதனையை உண்டாக்கியது. அதைத் தாங்கள் நம்பவில்லையென்றால், நம்பியவர்கள் சிலரும் இருந்தார்கள். உண்மையாகவே நான் இப்போது இன்னொருவருக்கு உரிமையாக வேண்டிய சிங்காதனத்தை அபகரித்துக் கொண்டேனென்றால், அதனால் இந்தச் சோழ குலத்துக்கு எத்தனை அபகீர்த்தி உண்டாகும்? என் வாழ்நாளெல்லாம் அதைப் பற்றி வேதனைப் பட்டுக் கொண்டிருப்பேன். வேறு எந்தப் பெரிய காரியத்திலும் மனத்தைச் செலுத்த முடியாது; உற்சாகமாகச் செய்யவும் முடியாது..."

வெகு நேரம் குனிந்த தலை நிமிராமலிருந்த மதுராந்தகத் தேவர் இப்போது பொன்னியின் செல்வரை அண்ணாந்து பார்த்து ஏதோ சொல்வதற்குப் பிரயத்தனப் பட்டார். பொன்னியின் செல்வர் வந்தியத் தேவனைப் பார்த்துச் சமிக்ஞை செய்யவே அவ்வீரன் மதுராந்தகத்தேவர் பக்கத்தில் போய் நின்று கொண்டான். அவர் காதில் மட்டும் கேட்கும்படியான மெல்லிய குரலில், "நண்பா! சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய முதல் தேவாரத்தின் முதல் அடி என்ன?" என்று கேட்டான். இந்தச் சமயத்தில் இது என்ன கேள்வி என்ற வியப்புடன் மதுராந்தகர் "பித்தா! பிறைசூடி!" என்றார். வந்தியத் தேவன் கள்ளக் கோபத்துடன் "என்ன, ஐயா, என்னைப் பித்தன் என்கிறீர்? நீர் அல்லவோ பெண் பித்துப் பிடித்து அலைகிறீர்? அதோ, பாரும்! உமது தர்ம பத்தினி பூங்குழலி உம்மைப் பார்த்துச் சிரிப்பதை!" என்றான். இது என்ன? இந்த நல்ல சிநேகிதன் இப்படித் திடீரென்று வலுச் சண்டைக்கு வருகிறானே என்ற எண்ணத்துடன் மதுராந்தகர் பெண்மணிகள் வீற்றிருந்த

இடத்தை நோக்கினர். உண்மையில், அப்போது பூங்குழலி இவர் பக்கம் பார்க்கவேயில்லை. பூங்குழலி, குந்தவை, வானதி, செம்பியன் மாதேவி, வானமாதேவி ஆகிய அரண்மனைப் பெண்மணிகள் யாவரும் அளவில்லாத ஆர்வம் கண்களில் ததும்பப் பொன்னியின் செல்வரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மறுபடி மதுராந்தகர் பொன்னியின் செல்வரைப் பார்த்தபோது அவர் சோழ குலத்தின் புராதன மணி மகுடத்தைத் தமது கரங்களில் தாங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்.

"தளபதி சின்னப் பழுவேட்டரையர் இன்னும் திரும்பி வரவில்லை. அதனால் என்ன? குறிப்பிட்ட வேளையில் முடி சூட்டு விழாவை நானே நடத்தி விடுகிறேன்! தந்தையே! விஜயாலய சோழர் முதல் நம் முன்னோர்கள் அணிந்து வந்த இந்த மணி மகுடத்தைத் தாங்கள் எனக்கு அளிக்க உவந்தீர்கள். சாமந்தர்கள், தளபதிகள், கோட்டத் தலைவர்கள், பொது மக்கள் அனைவரும் அதை அங்கீகரித்தார்கள். ஆகையால், இந்தக் கிரீடம் இப்போது என் உடைமை ஆகிவிட்டது. என் உடைமையை நான் என் இஷ்டம் போல் உபயோகிக்கும் உரிமையும் உண்டு அல்லவா? என்னைவிட இந்தக் கிரீடத்தை அணியத் தகுந்தவர் இங்கே ஒருவர் இருக்கிறார். அவர் என்னை விடப் பிராயத்தில் மூத்தவர். இந்தச் சோழ இராஜ்யத்துக்கு என்னைவிட அதிக உரிமை அவருக்கு நியாயமாக இருந்த போதிலும் அவர் அதைக் கோரவில்லை. நான் முடி சூட்டிக் கொண்டு சிங்காதனத்தில் அமர்வதைப் பார்த்து மகிழச் சித்தமாக இங்கு வந்திருக்கிறார். அவர் என் உயிரை ஒரு தடவை காப்பாற்றினர். என் உயிரினும் இனியவரான என் நண்பரைக் காப்பாற்றினர். இந்தச் சோழ குலத்துக்கு நேர்வதற்கு இருந்த பெரும் விபத்து நேரிடாமல் தடுத்தார். இப்படிப்பட்ட சிறப்பான காரியம் எதுவும் நான் இது வரையில் இந்நாட்டுக்குச் செய்தேனில்லை. ஆகையால் இந்த மணி மகுடத்தை மகான் கண்டராதித்தரின் குமாரரும் என் சிறிய தந்தையுமான மதுராந்தகத் தேவரின் தலையில் சூட்டுகிறேன்!"

இவ்விதம் பொன்னியின் செல்வர் சொல்லிக் கொண்டே சக்கரவர்த்தியின் மறு பக்கத்தில் வீற்றிருந்த மதுராந்தகரின் அருகிலே சென்று அவர் சிரஸில் கிரீடத்தை வைத்தார்.

மகுடத்தை வைக்குங்கால் மதுராந்தகர் அதைத் தடுக்காமலிருக்கும்பொருட்டு வந்தியத்தேவன் முன் ஜாக்கிரதையாக அவர் பின்னால் நின்று அவருடைய தோள்கள் இரண்டையும் நட்புரிமையுடன் இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தான்.

ஆனால் மதுராந்தகரோ அப்படி ஒன்றும் செய்ய முயலவில்லை. அவர் மெய் மறந்து தன் வசமிழந்து உண்மையிலேயே பித்துப் பிடித்தவர் போல் நாலு புறமும் வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்.

மணி மகுடத்தைச் சூட்டியதும் பொன்னியின் செல்வர் "கோப்பரகேசரி மதுராந்தக உத்தமச் சோழதேவர் வாழ்க!" என்று முழங்கினர். "சோழ சாம்ராஜ்ய சக்கரவர்த்தி உத்தமச் சோழர் வாழ்க! வாழ்க!" என்று வந்தியத் தேவன் பெருங் குரலில் கூவினன்.

இத்தனை நேரமும் பிரமித்துப் போய் நின்ற முதன் மந்திரி அநிருத்தர் முதலியவர்கள் அனைவரும் இப்போது "கோப்பரகேசரி மதுராந்தக உத்தமச் சோழர் வாழ்க!" என்று முழங்கினர்கள்.

சுந்தர சோழச் சக்கரவர்த்தி உணர்ச்சி மிகுதியால் பேசும் சக்தியை அடியோடு இழந்திருந்தபடியால் தம் கையிலிருந்த பல நிற மலர்களை மதுராந்தக உத்தமச் சோழர் மீது தூவினர்.

அரண்மனைப் பெண்மணிகளும் சக்கரவர்த்தியைப் பின்பற்றி மதுராந்தகர் மீது மலர் மாரி பொழிந்தார்கள்.

மதுராந்தகர் சிறிது திகைப்பு நீங்கியதும் எழுந்து நேரே செம்பியன் மாதேவியிடம் சென்று கும்பிட்டு நின்றார். அந்த மூதாட்டியின் கண்களிலிருந்து கண்ணீர் அருவிபோலப் பொங்கிப் பொழிந்து கொண்டிருந்தது.

"மகனே! இறைவனுடைய திருவுள்ளம் இவ்வாறு இருக்கிறது! நீயும் நானும் அதற்கு எதிராக நடப்பது எப்படிச் சாத்தியம்?" என்றார்.

பொன்னியின் செல்வர் சபையில் கூடியிருந்த மற்றப் புலவர் பெரு மக்கள், பட்டர்கள், பிக்ஷுக்கள் ஆகியவர்களைப் பார்த்து, "நீங்கள் இனி உங்கள் வாழ்த்துக் கவிதைகளை உசிதப்படி மாற்றிக் கொண்டு படியுங்கள்!" என்றார்.

அவர்களும் அவசர அவசரமாக வாழ்த்துக் கவிதைகளை மாற்றி அமைத்துக் கொண்டு பாடத் தொடங்கினர்கள்.

** ** **

மதுராந்தக உத்தமச் சோழருக்கு மணி மகுடம் சூட்டப் பட்ட சிறிது நேரத்துக் குள்ளே அந்தச் செய்தி தஞ்சை வீதிகளில் கூடியிருந்த மக்களிடையில் பரவி விட்டது. அது விரைவாகப் பரவுவதற்கு வந்தியத் தேவனும்

ஆழ்வார்க் கடியானும் பெரிதும் காரணமாக இருந்தார்கள். பொன்னியின் செல்வர் கட்டளைப்படி அவர்கள் வீதிகளில் ஆங்காங்கே ஆட்களை நிறுத்தியிருந்தார்கள். அவர்களிடமெல்லாம் அவசரமாகச் சென்று சொல்லி, "கோப்பரகேசரி உத்தமச் சோழ தேவர் வாழ்க!" என்று முழங்கச் செய்தார்கள். இளவரசர் அருள்மொழி வர்மர் தமக்கு அளிக்கப்பட்ட இராஜ்யத்தைத் தம் சிறிய தந்தை மதுராந்தகருக்கு அளித்து விட்டார் என்றும், கடற் கொள்ளைக்காரர்களை அடக்குவதற்காகப் பெரிய கப்பல் படை சேர்த்துக் கொண்டு சீக்கிரம் புறப்படப் போகிறார் என்றும் வாய்மொழியான செய்தி மக்களிடையே விரைந்து பரவிக் கொண்டிருந்தது. சிலர் இதை உடனே நம்பினார்கள். பொன்னியின் செல்வரின் பெருங் குணத்துக்கு இது உகந்ததே என்று அவர்கள் கருதினார்கள். இன்னும் சிலர் "கையில் கிடைத்த பேரரசை யார்தான் இன்னொருவருக்குக் கொடுப்பார்கள்?" என்று ஐயுற்றார்கள். ஏக காலத்தில் பலவாறு பேசிய பதினாயிரக் கணக்கான குரல்களும், "வாழ்க! வாழ்க!" என்னும் முழக்கங்களும் சேர்ந்து புயற் காற்று அடிக்கும்போது அலைகடலில் கிளம்பும் பேரொலியைப் போல் ஒலித்தன.

கொஞ்ச நேரத்துக் கெல்லாம் அலங்கரிக்கப்பட்ட பட்டத்து யானையின்மீது அமைத்த பொன் மயமான அம்பாரியில் அமர்ந்து மதுராந்தக உத்தமச் சோழர் பவனி கிளம்பியதும் எல்லாச் சந்தேகங்களும் மக்களுக்குத் தீர்ந்து விட்டன. யானையின் கழுத்தில் யானைப் பாகனுடைய பீடத்தில் அமர்ந்திருப்பவர் பொன்னியின் செல்வர் என்பதைக் கண்டதும் மக்களுடைய உற்சாகம் எல்லை கடந்ததாயிற்று. "கோப்பரகேசரி மதுராந்தக உத்தமச் சோழர் வாழ்க!" என்று மக்களின் குரல்கள் முழங்கின. ஆனால் அவர்களுடைய உள்ளங்களில் பொன்னியின் செல்வரின் செயற்கருஞ் செயலே குடிகொண்டிருந்தது. அதை எண்ணியதனால் அவர்களுடைய அகங்களைப்போல் முகங்களும் மலர்ந்திருந்தன. பொன்னியின் செல்வர் மணி மகுடம் சூட்டிக் கொண்டு பவனி வந்தால் மக்கள் எவ்வளவு குதூகலம் அடைந்திருப்பார்களோ, அதை விடப் பன்மடங்கு அதிகமான குதூகலத்தை இப்போது வெளியிட்டார்கள்.

இமயமலைச் சிகரத்தில் புலி இலச்சினையைப் பொறித்த கரிகால்பெருவளத்தானைப் பொன்னியின் செல்வர் மிஞ்சி விட்டார் என்றும், தியாக சிகரத்தில்

இவர் தமது இலச்சினையை என்றும் அழியாத வண்ணம் பொறித்து விட்டார் என்றும் அறிஞர்கள் மகிழ்ந்தார்கள்.

சாதாரண மக்களோ, அப்படியெல்லாம் அணி அலங்காரங்களையும் உபமான உபமேயங்களையும் தேடிக் கொண்டிருக்கவில்லை. மதுராந்தகர் தலையில் மணி மகுடத்தைச் சூட்டி விட்டுப் பொன்னியின் செல்வர் பட்டத்து யானையை ஓட்டிக் கொண்டு செல்லும் காட்சி அவர்கள் உள்ளத்தைப் பரவசப் படுத்தி விட்டது. ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் வாழ்த்திக் கொண்டும் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக் கொண்டும் மலர்களைத் தூவிக் கொண்டும் மஞ்சள் நிற அட்சதையை வாரி இறைத்துக் கொண்டும் மக்கள் ஒரே கோலாகலத்தில் தங்களை மறந்து ஆழ்ந்திருந்தார்கள்.

இவ்விதம் குதூகலத்தினால் மெய்மறந்து கூத்தாடிக் கொண்டிருந்த மாபெரும் ஜனக் கூட்டத்திடையே பட்டத்து யானையைச் செலுத்திக் கொண்டு போவது எளிய காரியமாயில்லை. பொன்னியின் செல்வரும் அவசரப் படாமல் ஜனங்களின் குதூகலத்தைத் தாமும் பார்த்துக் களித்துக் கொண்டு, அங்கங்கே அறிமுகமான முகம் தென்பட்டபோதெல்லாம் ஏதேனும் வேடிக்கையாகப் பேசிக் கொண்டு, மெள்ளமெள்ள யானையைச் செலுத்திக் கொண்டு போனார். வீதி வலம் முடிந்து அரண்மனைக்குத் திரும்புவதற்குள் மாலை மயங்கி முன்னிரவு வந்து விட்டது. வானத்து விண் மீன்களுடன் வீதிகளில் ஏற்றிய தீபங்கள் போட்டியிட்டுப் பிரகாசித்தன. அரண்மனை மேலேயிருந்து மலர் மாரி பொழிந்தது. "யானைப் பாகா! யானைப் பாகா!" என்று ஓர் இனிய குரல் கேட்டது. பொன்னியின் செல்வர் அண்ணாந்து பார்த்தபோது வானதியின் புன்னகை மலர்ந்த முகம் அங்கே தோன்றியது.

"பெண்ணே! அஞ்ச வேண்டாம்! மதுராந்தக உத்தமச் சோழரின் தர்ம இராஜ்யத்தில் யானையும் புலியும் கலந்து உறவாடும்; பூனையும் கிளியும் கொஞ்சிக் குலாவிக் கூடி விளையாடும்!" என்றார் பொன்னியின் செல்வர். (தொடரும்)

---

## அவர் கோரிக்கை!




பாகிஸ்தான் மந்திரி சபையிலிருந்து ஸர் ஸபருல்லாகானும் ஜனாப் குருமானியும் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று பெருங் கிளர்ச்சி எழுந்திருக்கிறது. ஆனால் எந்த மந்திரியும் ராஜினாமாச் செய்வதைப் பிரதம மந்திரி முகம்மதுஅலி விரும்பவில்லையாம்!

# எச்சரிக்கை

# "'HAZELINE' SNOW"

(TRADE MARK)

## "'ஹாஸலீன்' ஸ்னோ" (டிரேட் மார்க்)

கடைகளில் போலித் தயாரிப்புச் சரக்குகள் ஏராளமாக குவிந்திருப்பதாகத் தெரிகிறது. இவைகளினின்று உங்களைப் பாதுகாக்கும் பொருட்டு எங்களால் உற்பத்தி செய்யப்படும் எல்லா "'ஹாஸலீன்' ஸ்னோ" (டிரேட் மார்க்) "'HAZELINE' SNOW" TRADE MARK தயாரிப்புகளிலும் பாட்டில் மூடியின் பேரில் ஆறு காப்ஸ்யூல் வெள்ளி நிற அலுமினிய ஜரிகை காகிதத்தால் அழுந்த மூடப்பட்டிருக்கும்.

நீங்கள் சரக்கு வாங்கும்போது அலுமினிய ஜரிகை மூடி கலையாமலிருக்கிறதா என்று கவனியுங்கள்.

மூடியின் மேற்புறத்தில் நீல நிறத்தில் இந்த டிசைன் இருக்கும்.




**பர்ரோஸ் வெல்கம்**

அண்ட் கம்பெனி (இந்தியா) லிமிடெட்,

தபால் பெட்டி 290, பம்பாய்

"'HAZELINE' SNOW" "'ஹாஸலீன்' ஸ்னோ" என்பது லண்டனிலுள்ள தி வெல்கம் பவுண்டேஷன் லிமிடெட் ரிஜிஸ்தர் செய்துகொண்டுள்ள டிரேட் மார்க். அதை இந்தியாவில் உபயோகிக்க ரிஜிஸ்தர் செய்து கொண்டவர்கள் பர்ரோஸ் வெல்கம் அண்ட் கம்பெனி (இந்தியா) லிமிடெட் ஸ்தாபனம் ஒன்றுதான். எனவே அதிகாரமில்லாமல் இந்த டிரேட் மார்க்கை உபயோகிப்பவர்களும், போலிச் சரக்குகளை அசல் "'HAZELINE' SNOW" TRADE MARK "'ஹாஸலீன்' ஸ்னோ" டிரேட் மார்க் போன்ற தோற்றமளிக்கும்படி தயாரிப்பது, வர்த்தகம் செய்வது, விற்பது, விற்க முயற்சி செய்வது போன்ற செயலில் ஈடுபட்டுள்ளவர்களும் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

# சோதிட அநுபவங்கள்

சோதிடம் வேதங்களின் ஆறு அங்கங்களில் ஒன்று. ஆகவே வேதங்கள் எப்படி உண்மையோ அப்படியே சோதிடமும் உண்மைதான். இந்த ஆறு அங்கங்களில் சோதிடம், அந்தப் பெயரின் பிரகாரமே, வேதத்துக்கு நேத்திரமாகும்.

பராசரர், வராஹ மிஹிரர், ஜைமினி முதலான மகான்கள் அந்தச் சாஸ்திரத்துக்குக் கிரந்த கர்த்தர்கள் என்றால் சாஸ்திரம் வெறும் கதையாகாது. சோதிடம் நான்கு லக்ஷம் சூத்திரங்கள் அடங்கியது. ஒரு பெரும் ஸாகரம். அபிப்பிராய பேதங்கள் பல உள. சோதிடத்தை இக்காலத்தில் அநேகர் கையாண்டு வரும் முறை மிகப் பிசகாயிருக்கிறது. சாஸ்திரத்தின் கௌரவம் கையாளுபவரைப் பொறுத்திருக்கிறது.

ஜோதிஷம் விவாகத்துக்கோ, சுப முகூர்த்தங்கள் பார்க்கவோ, யாத்திரைகளுக்கோ, ஒரு ஸ்தாபனம் அல்லது பிரவர்த்தி ஆரம்பிக்கவோ, பொதுவாக தசா புத்திகளை அநுசரித்து நற்காலம், கெட்ட காலம் சுமாராகத் தெரிந்து கொள்ளவோ அதற்குத் தகுந்தபடி நடவடிக்கைகளைப் புத்திசூக்ஷ்மத்துடன் நடத்திக் கொள்ளவோ உதவும் ஓர் உபாயமான சாஸ்திரம். போலி ஆட்களிடம் ஜோஸ்யம் கேட்டு, அழகான இயற்கை வாழ்க்கையைக் கெடுத்துக் கொள்வது போல் பிசகான காரியம் ஒன்றும் இல்லை. எனக்கும் ஜோதிஷத்தில் கொஞ்சம் பரிச்சயம் உண்டு. எவ்வளவோ தவறுதல்களைப் பார்த்திருக்கிறேன். ஆயினும் சில திருஷ்டாந்த ஜாதகங்களின் பலாபல அநுபவங்களைக் கவனிக்கும்போது சாஸ்திரம் உண்மையென்றே நம்ப வேண்டியிருக்கிறது.

பம்பாய்
[illegible]—2—54 டி. எஸ். கிருஷ்ணய்யர்

●

சுமார் மூன்று வருடங்கள் இருக்கும். அப்பொழுது நான் ரங்கூனிலிருந்தேன். நான் குடியிருந்த வீட்டின் அடுத்த பகுதியில் வங்காளி ஒருவர் குடியிருந்தார். கை ரேகை சாஸ்திரத்தில் நிபுணர் என்று பெயர் வாங்கியிருந்தார். ஆபீஸில் வேலை செய்த நேரம் தவிர மற்ற சமயங்களில் ஜோஸ்யம் பார்ப்பதுதான் அவர் தொழில். ஜோஸ்யத்தைத் தவிர மற்றவிஷயங்களில் நாங்கள் இருவரும் அத்யந்த நண்பர்கள்.

அன்று விஜயதசமி. என் நண்பர் வங்காளியாதலால் அன்று மிகவும் முக்கிய தினம். வழக்கப்படி பூஜையை முடித்துக் கொண்டு, என்னைத் தேடி வந்தார். "இன்று எங்களுக்குப் பெருநாள். ஆதலால் நான் காளி கோவிலுக்குச் செல்கிறேன். நீங்களும் வருகிறீர்களா!" என்று என்னைக் கேட்டார். அன்று எனக்கும் விடுமுறையாதலாலும், எனக்கும் சற்று வெளியில் சென்று வரலாம் என்று தோன்றியதாலும், நானும் தயங்காமல் அவருடன் கோவிலுக்குப் புறப்பட்டேன். காளி கோவில் நாங்கள் இருக்கும் இடத்திலிருந்து சுமார் இரண்டு மைல்கள் இருக்கும். காலை வேளையாதலாலும், வெய்யில் அதிகமில்லாமல் வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்ததாலும் நடந்தே சென்றோம். எங்கள் சம்பாஷணைக்கிடையே அன்றைய ஜோஸ்ய பலா பலன்களையும் கேட்டு வைத்தேன். அவர் கூறியதாவது: அன்று அவருக்கு ஏதாவது வாகனங்களினால் விபத்து ஏற்படலாம் என்றும், அதிலிருந்து தப்பித்துக் கொள்ளுவது சிரமம் என்றும் கூறினர்.

நாங்கள் கோவிலையடைந்தோம். பூஜையை முடித்துக் கொண்டு வெளியில் வந்தோம். மழை பெய்து கொண்டிருந்தது. வெகு நேரம் மழை நிற்கும் என்று காத்துக் கொண்டிருந்தோம். ஆனால் மழைக் காலமாகையால் மழை நிற்கவேயில்லை. எங்கள் இருவருக்கும் பசி மிகவும் எடுத்ததால், குதிரை வண்டியில் சென்று விடலாம் என்று என் நண்பரைப் பார்த்துக் கூறினேன். அவருக்கு வண்டியில் செல்ல இஷ்டமில்லாத போதிலும் பசியின் வேகம் அவரை வண்டியில் செல்லச் சம்மதிக்க வைத்தது.

இருவரும் வண்டியில் ஏறிச் சற்று நேரம் சென்றிருப்போம். எங்கள் வண்டிக்கு எதிரே ஒரு ஜீப் மோட்டார் வேகமாக வந்து கொண்டிருந்தது. ஜீப் கார் சற்று வண்டியை நெருங்கியவுடன், என் நண்பர் திடீரென வண்டியிலிருந்து ஜீப் வரும் பக்கத்தில் ரஸ்தாவில் குதித்து விட்டார். காயங்கள் பல அவருக்கு ஏற்பட்டு விட்டன.

பக்கத்திலிருந்த ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று சிகிச்சை செய்த பின் அவருக்குச் சுய உணர்வு வந்தது.

"நான் எங்கு இருக்கிறேன்! என் நண்பன் உயிருடனிருக்கிறானா! வண்டி என்ன கதியாயிற்று!" என்றெல்லாம் பிதற்ற ஆரம்பித்து விட்டார் என் நண்பர்.

"ஒருவருக்கும் ஆபத்து ஒன்றும் நேரவில்லை. பீதியினால் தாங்கள் வண்டியினின்றும் குதித்து விட்டதால் தங்களுக்கு மாத்திரம் காயம் ஏற்பட்டிருக்கிறது" என்று நான் கூறினேன்.

நேரே வீட்டுக்கு வந்தவுடன் வெறி பிடித்தவர் போல் தன்னிடமுள்ள ஜோஸ்ய புத்தகங்களையெல்லாம் எரித்து விட்டார். என்ன என்று நான் வினவ அவர் அளித்த பதில் என்னைத் தூக்கி வாரிப் போட்டது. "இன்றைய ஜோஸ்ய பலனில் நம்பிக்கை கொண்டு நான் தற்கொலை செய்துகொள்ள இருந்தேன். ஜோஸ்யம் பொய்த்தது என்று இன்று முதல் பிரசாரம் செய்வேன்" என்று பதிலளித்தார்.

எனக்கு ஜோஸ்யத்தில் இருந்த சொற்ப நம்பிக்கையும் போய் விட்டது.

புதுடில்லி
7—2—54 எஸ். கிருஷ்ணமூர்த்தி

●

நான் 1948ம் ஆண்டு மார்ச்சு மாதம் டி.எஸ். எல். சி. பரீட்சை எழுதி முடித்துவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். என் தந்தையார் பரீட்சையில் பாஸ்செய்துவிடுவாயா என்றுஎன்னைக் கேட்டார். நான் பாஸ் செய்துவிடுவேன் என்று நம்பிக்கையோடு சொன்னேன். என் வார்த்தையை நம்பாத என் தந்தை சோதிடரிடம் என் ஜாதகத்தைக் காட்டி 'பாஸ் செய்துவிடுவானா?' என்று கேட்டார். சோதிடர் இந்த ஆண்டு பாஸ் செய்ய மாட்டான் என்று நிச்சயமாகச் சொல்லிவிட்டார். என் தந்தை என்னைப் பலவிதமாகத் திட்டி என்னை வருத்தும்படி செய்து விட்டார். பின்னர் வேறு சோதிடரைப் பார்த்தார். அவரும் முன்னவர் சொன்னமாதிரியே சொல்லி விட்டார். ஏற்கெனவே நான் சோதிடத்தில் அதிக நம்பிக்கை

வைத்திருந்தேன். அதனால் நான் சோதிடர்களின் வார்த்தையை நம்பி மிகவும் வருத்தமுற்றுத் தற்கொலை செய்து கொள்ளுகின்ற அளவுக்குத் துணிந்து விட்டேன்.

பரீட்சையின் முடிவு தெரிந்து விட்டது. நான் பாஸ் செய்து விட்டேன். கொஞ்சம் அவசரப்பட்டிருந்தால் என் வாழ்க்கையின் கதி என்னவாகியிருக்கும்! இந்தச் சோதிடத்தை நம்பினால் என்னைப் போல இளம் வாலிபர்களின் கதி என்னவாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அவளூர்ப்பேட்டை
2—2—54 ஆர். பாலசுப்ரமணியன்

●

நான் பிறந்து ஒரு வருடத்தில் என் தந்தை மாரடைப்பால் காலமானார். என் ஜாதகத்தால் தான் இந்தத் துரதிர்ஷ்டம் ஏற்பட்டதென்று சோதிடர் சொன்னாராம். ஆதலால் என் தாயைத் தவிர எல்லாரும் என்னை வெறுத்தனர். "ஜன்ம நட்சத்திரம் சுவாதி, ஆதலால் 'சுவாதி சோதிக்கும்' இந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் ஆவது மிக கஷ்டம்; கல்யாணத்தின் பின் 'குசேலர்' வாழ்வு போல நிறைய குழந்தை குட்டிகளுடன் தரித்திரப்படுவாள்" என்று ஒரு ஆங்கிலம் படித்த சோதிட நிபுணர் கூறினார். மிகவும் துக்கமாக இருந்த எனக்கு, ஒருவரும் வரன் தேடி அலையாமல், எதிர்பாராமல் பதினாறு வயதில் திருமணம் நடந்தேறியது. அதன் பின் என் கணவருக்கு மேலும் மேலும் உத்தியோகம் உயர்வு பெற்றது. நாங்கள் பதின் மூன்று வருடங்களாக நல்ல நிலைமையில் இருக்கிறோம். வேண்டிய செல்வத்தைத் தந்தும் கடவுள் ஒரு குழந்தைகூடத் தரவில்லை.

என் விதவையான அத்தை ஏதோ கணவர் வைத்துப்போன பணத்தின் வட்டியை வாங்கிக் காலம் கழித்து வந்தார். அவர் கஷ்ட காலத்துக்கு ஒரு 'ராஜ' சோதிடர் எங்கள் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். சோதிடம் பார்த்து, "அம்மா, உங்களுக்கு ஒரு வருஷம், மூன்று மாதம், ஏழு நாட்களுக்குள் கட்டாயம் மரணம் சம்பவிக்கும்; கிரஹங்கள் அப்படிச் சொல்கின்றன; செய்ய வேண்டிய தான தருமங்களைச் சீக்கிரம் செய்யுங்கள்" என்றார். பாவம், கர்நாடகமான அத்தை தம்மிடமிருந்த பணத்தை யெல்லாம் திரட்டித் தீர்த்த யாத்திரை செய்து, தான தர்மங்கள் கொடுத்துக் கிராமம் திரும்பினார். அவர் பணமும் தீர்ந்து விட்டது. பின்னர் எட்டு வருட காலம் காசில்லாமல் திண்டாடிச் சோதிடரைச் சபித்துக் கொண்டே காலமானார்.

சோதிடம் பார்ப்பதால் மனக் கவலையைத் தவிர வேறு பலன் இல்லை.

பம்பாய்
4-2-54 பத்மாவதி அம்மாள்

●

எனக்கு இப்பொழுது நாற்பத்திரண்டு வயது ஆகிறது. என் கணவர் ஜோஸியத்தில் ரொம்பவும் நம்பிக்கையுள்ளவர். என் கணவர் ம ட்டல் வைத்து நடத்தி வந்தார். எப்பொழுது பார்த்தாலும் சோதிடர்கள் என் கணவர் கூடச் சுற்றிக் கொண்டே யிருப்பார்கள். அவர்களுக்கெல்லாம் என் கணவர் இலவசமாகச் சாப்பாடு போட்டு அனுப்புவார். பணமும் கொடுப்பார். நான் எப்பொழுதாவது என் கணவரிடம் "ஏன் இப்படிப் பணத்தை அனாவசியமாகச் செலவு செய்கிறீர்கள்!" என்று கேட்பேன்.

"போனால் போகிறது. கொஞ்ச நாளையிலே நான் பெரிய பணக்காரனாகி விடுவேன். இந்த ஊரில் எத்தனை வீடுகள் வாங்கப் போகிறேன், பார். என் ஜாதகம் பெரிய யோக ஜாதகம். எனக்கு ஒரு குறையும் இல்லை" என்பார்.

என் கணவர் சில வருஷங்களில் படுத்த படுக்கையாகி விட்டார். டாக்டர் கூடப் பிழைக்க மாட்டார் என்று சொல்லி விட்டார். இம்மாதிரியான சமயத்தில் ஒரு அனுமார் சோதிடன் வந்து குதித்தான். அவன் என் கணவரிடம் "நூறு ரூபாய் பணம் கொடுங்கள். உங்களுக்கு இன்னும் ஒரு வாரத்தில் சரியாகிவிடும். உங்கள் ஜாதகப்படி உங்களுக்கு இப்பொழுது மரணமே கிடையாது. ஒரு தாயத்துப் பண்ணி மந்திரித்துத் தருகிறேன்" என்று சொன்னான்.

நூறு ரூபாயைக் கை நீட்டிப் பெற்றுக்கொண்ட சோதிடன் ஒரு தாயத்தைப் பண்ணிக் கொடுத்து விட்டு ஒரு வாரத்தில் திரும்பி வருவதாகச் சொன்னான். என் கணவர் மறுநாளே இறைவனடி சேர்ந்து விட்டார். கடைசி வரையிலும் என் கணவர் சோதிடத்தில் நம்பிக்கை வைத்துப் பணத்தை நூற்றுக் கணக்காகச் செலவு செய்தார். நூறு ரூபாயைப் பெற்றுக் கொண்டு போனவன் என் கணவர் இறந்த பத்தாவது தினம் வந்து, "அந்த ஐயா எப்படி இருக்கிறார்! உடம்பு குணம் ஆகிவிட்டதா!" என்றான். கடைசியில் அவனை எல்லோரும் அடித்துத் துரத்தி விட்டார்கள். என் கணவர் சென்ற பிறகு எனக்குச் சோதிடத்தில் அறவே நம்பிக்கை விட்டு விட்டது.

திருவல்லிக்கேணி
5—2—54 தி. ஆ. லக்ஷ்மி

●

நான் கொஞ்சம் பங்கு (ஷேர்) வியாபாரத்தில் ஈடுபட்டவன். அவ்வப்போது பங்குகளை வாங்கி லாபம் வந்தவுடன் விற்று விடுவது வழக்கம். அதன் பிரகாரம் ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் என்ற கம்பெனியில் 100 பங்குகளைப் பங்கு ஒன்றுக்கு ரூ 4-1-0 வீதம் வாங்கினேன். அது சிறிது காலத்துக்கெல்லாம் விலை ஏறி வந்தது. உடனே ஒரு சோதிடரை 'இன்னும் விலை ஏறுமா அல்லது விற்று விடுவதா!' என்று கேட்டேன். அவர் உடனே விற்று விடும்படியும் பிறகு விலை இறங்கும் என்றும் சொன்னார். அப்படியே நானும் சென்னையிலுள்ள ஒரு கம்பெனிக்கு விற்று விடும்படி எழுதினேன்.

அவர்களும் 19–11–53 ல் பங்கு ஒன்று ரூ 4-9-( வீதம் விற்றதாகவும் அதனுடைய ஒப்பந்தத்தையும் எனக்கு அனுப்பினார்கள். நானும் விலை இனி இறங்கப் போகிறது என்று சந்தோஷமா

அட்டைப் படம்

## தேன்மொழியாள்

தேன்மொழியாள் கதையில் அடுத்து வரும் ஒரு நிகழ்ச்சி இந்த இதழ் அட்டைச் சித்திரமாகத் திகழ்கிறது.

இருந்தேன். ஆனால் அதற்கு நேர்மாறாக விலை ஏறிக் கொண்டு வந்தது. டிஸம்பர் மாதத்தில் பங்கு ஒன்றுக்கு விலை ரூ 5-4-0 க்கு வந்து விட்டது. மறுபடி சோதிடரிடம் விலை ஏறின விவரத்தைச் சொன்னேன். அவர் இன்னும் கொஞ்சம் பொறுக்கும்படி சொன்னார். ஆனால் நான் கண்ட பலன் இன்னும் விலை ஏறி ஜனவரி மாதத்தில் ரூ. 6-9-0 க்கு வந்து விட்டது. இப்படியாக பங்கு 1-க்கு ரூ. 2 விலை ஏறி விட்டது. அதாவது நான் ரூ. 4-9-0 க்கு விற்ற பங்கை வாங்கவேண்டுமானால் ரூ. 6-9-0 கொடுத்து வாங்க வேண்டும்.

திருக்காட்டுப்பள்ளி
8—2—54

வி. நாராயணன்

●

எனக்குச் சோதிடத்தைப் பற்றி அதிகம் தெரியாது. ஆனால் என் தந்தையோ ஒரு சோதிடப் பித்து என்றுதான் சொல்ல வேண்டும். அவர் வெளியூர்களில் முகாம் போடப் போனால்கூட நாள், நட்சத்திரம் பார்க்காமல் செல்லமாட்டார். மேலும் வீட்டிலிருந்து வெளியில் சென்றாலும் சகுனம் சரியில்லை என்று மறுபடியும் திரும்பி வந்து விடுவார். சில சமயங்களில் நான் அவரைக் கேலியும் செய்வேன்.

என் தந்தைக்கு மூன்று பெண்கள். நான்தான் மூத்த பெண். எனக்கு வயது இருபது. சுமாரான குடும்பம்தான். என் தந்தைக்கு இதுவரை ஆண் குழந்தை கிடையாது. தன் ஜாதகத்தைப் பல சோதிடரிடம் காண்பித்ததில் ஆண் குழந்தை கிடையாது என்று சொல்லி விட்டார்கள். அதையும் என் தந்தை நம்பி இருந்தார். ஆனால் நடந்ததோ—மிகவும் அழகான ஒரு மகன் பிறந்து இப்போது வயதும் இரண்டு ஆகிறது.

இரண்டாவது என் கலியாணம். என் சிறிய தந்தையின் டெல்லி விஜயத்தினால் எனக்குக் கலியாணம் செய்ய அவசரப்பட்டார்கள். வரும் நல்ல வரன்களெல்லாம் ஜோஸ்யப் பித்தால் தள்ளப்பட்டது. கடைசியில் என் அத்தை மகனுக்கே மணம் முடிக்க ஆசைப்பட்டார்கள். என் தந்தைக்கு இஷ்டமில்லா விட்டாலும் இந்த ஜாதகப் பொருத்தம் நடத்தி விட்டது. ஜாதகம், இராமாயணச் சகுனம், கோவிலுக்குச் சென்று பூச்செண்டினுள் சீட்டு வைத்துப் பார்ப்பது இந்த மாதிரியான பலவகையிலும் பொருத்தம் பார்த்ததில் என் எதிர் காலத்தில் நான் நல்லபடியாக வாழ்க்கை நடத்துவேன் என்று கலியாணம் செய்து வைத்தார்கள். ஆனால், நடந்ததோ எதிரிடையாகத்தான்.

எனக்குக் கல்யாணம் நடந்தபோது வயது பதினான்கு. இப்படிச் சோதிடம் பார்த்துக்கொடுத்த நான் இன்று வரையிலும் என் தந்தை வீட்டில் தான் இருக்கிறேன்.

நிற்க. என் தங்கையின் கலியாணமோ ஜாதகம், பொருத்தம் ஒன்றுமே பாராமல் கலியாணம் செய்தோம். இப்போது அவர்களுக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது. ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் அவர்கள் குடும்பம் நடத்துகிறார்கள்.

நம் முன்னோர்களில் சிலர் குறித்த காலத்தில் மழை பெய்யும் என்று கூறினால், அந்த வார்த்தை பொய்யாகக் கூடாது என்று அப்படியே பெய்ததாக நாம் கேட்டிருக்கிறோம். ஏன், என் சொந்த கிராமம்கூட அந்த மாதிரி மழையைப் பெய்ய வைத்துத்தான் இன்றும் சுரோத்திரியமாக யிருக்கிறது. இந்தக் காலத்தில் அப்படி யிருப்பது எங்கே என்றே தெரியவில்லை.

ஆயிரம் காலத்துப் பயிர் என்று சொல்லும் கலியாணத்துக்கே சோதிடம் பொய்யாகப்போகும் போது, அன்றாட வாழ்க்கைக்கு எப்படிப் பொருந்தும்! வருவது வந்தே தீரும். அதைச் சமாளித்து வாழத் தெரிய வேண்டும். அதுவே என்னுடைய முடிவான எண்ணம்.

வேலூர்
6—2—54

எஸ். கமலா

வெள்ளித் திரை

# ஒரு நல்ல ஹிந்திப் படம்


ஸோமாஸ்

ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன், அவ்வனாதைக் குழந்தைகளையும் தன்னைப் போல் படைத்து விட்டான். சிறுவன் போலாவும் அவன் தங்கை பேலுவும் வீடு வாசல் அற்ற, தாய் தந்தையரற்ற, உற்றார் உறவினர் அற்ற அனாதைச் சிறுவர்கள்; உலகம் தெரியாதவர்கள்.

அறுந்த தாம்புக் கயிற்றுக்குப் பொத்தல் தோண்டி துணை சேர்ந்தது போல், அனாதைக் குழந்தைகளுக்கு ஆதரவாக, இரக்கம் என்பதையே அறியாத, அரக்க குணம் படைத்த கமலா வந்து சேருகிறாள். அவள் அவர்களுக்குச் சித்தி. அவள் அவர்களை அடித்து இம்சித்துப் பல விதத்திலும் கொடுமைப் படுத்திப் பிச்சை யெடுக்கும் வாழ்க்கைக்குத் தயார் செய்கிறாள். குழந்தைகள் இருவரும் அவளது கொடுமைக்குப் பயந்து பம்பாய்ப் பட்டண வீதிகளிலும், ஸ்டேஷன் பிளாட்பாரங்களிலும் ரயில் வண்டிகளிலும் பிச்சை யெடுக்கிறார்கள்.

ஜான் என்ற பிராயம் முதிர்ந்த ஒருவர் அந்தக் குழந்தைகள் இருந்த பேட்டையில் வசித்து வந்தார். அவரிடம் வறுமை யிருந்தது. ஆனால், ஏழைகளுக்கு இரங்கும் அருங்குணமும், குழந்தைகளிடம் பரிவு காட்டும் பெருங் குணமும் கூட இருந்து பிரகாசித்தன. சிறுவன் போலாவையும் சிறுமி பேலுவையும் அவர் பிச்சையெடுக்கும் இழிந்த வாழ்க்கையிலிருந்து மீட்டு, உழைத்து ஊதியம் பெறும் உண்மை வாழ்க்கைக்குத் திருப்ப முயன்றார். அந்த முயற்சியின் காரணமாக அவர் சிறை புக நேர்ந்தது.

குழந்தைகள் இருவரும் பகட்டும் படாடோபமும் நிறைந்த பம்பாய்ப் பட்டணத்தில் வயிறு வளர்க்கப் பட்ட கஷ்டம் கொஞ்சமல்ல. ஜான் தாத்தாவின் போதனை அவர்கள் உள்ளத்தில் நன்கு பதிந்து விட்டது. பிச்சை யெடுக்கும் வாழ்க்கையை விடுத்து ஏதேனும் தொழில் செய்து பிழைக்க ஆவல் கொண்டனர். எந்தத் தொழிலைச் செய்வது? யார் தொழில் கற்றுக் கொடுப்பார்கள்? குழந்தைகள் கடைசியில் பூட்ஸுக்குப் 'பாலிஷ்' போடும் தொழிலை மேற்கொண்டனர். அதில்தான் எத்தனை கஷ்டம்! தொழிலில் அநுபவம் இல்லாததால் எத்தனை பேர்களிடம் அடி உதைகள் வாங்க வேண்டியிருந்தது! அப்படிப்



தமிழ்ப் புத்தாண்டின் ஆரம்பத்தில் புதிய முறையில் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்ட ஏ. வி. எம்.மின் ''அந்த நாள்'' சென்னையில் வெலிங்டன், பாரத், உமா முதலிய தியேட்டர்களில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது. ஆடலும் பாடலும் இல்லாத ''அந்த நாள்'' படத்தில் ஓர் இனிய காட்சி.

பல கஷ்டங்களுக்கு இடையில் நடைபெற்று வந்த அவர்கள் தொழிலும் இயற்கையின் காரணங்களால் தடைப்பட்டது.

கொட்டும் மழையில் சொட்ட நனைந்து கொண்டு வரும் ஜனங்களைப் பார்த்து, ''பாபு, 'பாலிஷ்' போட்டுக் கொள்ளுகிறீர்களா !'' என்று அந்தக் குழந்தைகள் ஏக்கத்தோடு கேட்ட காட்சி, ''பூட் பாலிஷ்'' படம் பார்ப்பவர்களின் இதயத்தைத் தொட்டு, கண்களைக் கலங்கச் செய்கின்றன.

**ப**ரந்த பாரத நாட்டில் பல்லாயிரக் கணக்கில் போலாவையும் பேலுவையும் போன்ற அனாதைக் குழந்தைகள், கல்வி வசதியில்லாமல், உணவு, உடை, வாசஸ்தலம் முதலிய வசதிகள் ஏதும் இல்லாமல் நலிகின்றனர். இந்த உண்மை நிலை, படம் பார்க்கும்போது நம் மனக் கண்முன் வந்து விடுகின்றன. படத்தில் நிறைந்து ததும்பும் சோக உணர்ச்சி காரணமாக, ஹிந்திப் படம் பார்க்கிறோம் என்னும் நினைவே இல்லை. வறுமை நிலையை வெளியிட, அனாதைக் குழந்தைகள் படும் அவதிகளை வெளியிட, உள்ளத்தைத் தொடும் சோக சம்பவங்களை வெளியிட எந்த மொழியா யிருந்தாலென்ன ! மனத்தில் பதிவது உணர்ச்சியே தவிர, மொழியல்லவே !

''பூட் பாலிஷ்'' படத்தில், காதலைப் பற்றிய பேச்சே இல்லை ; அடுத்துக் கெடுக்கும் 'வில்ல'னோ 'வில்லி'யோ இல்லை ; வயிற்றை வலிக்கும்படி சிரிக்கப் பிரமாதமான ஹாஸ்ய கட்டங்கள் இல்லை ; நெஞ்சம் குடலும் அஞ்சும்படியான கோரக் கொலைகள் இல்லை ; வாலிபன் எவனும் தன் இளங் காதலியுடன் ஓடிப்போக வில்லை.

பின்பு படத்தில் என்னதான் இருக்கிறது என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா ! ஆம், நிறைய இருக்கிறது. அகிலப் பிரபஞ்சத்தையும் அனாதிகாலம் தொட்டு ஆட்டி வைக்கும் அரும் பெரும் சக்தி வாய்ந்த அன்பு இருக்கிறது ; மனித குலத்தில் உருக்கம் பொருந்திய உள்ளத்தில் உதிக்கும் இரக்கம் என்னும் இறைமைக் குணம் இருக்கிறது ; அன்பில் பிணைந்த இரு இளம் உள்ளங்கள் காலகதியால் பிரிய நேர்ந்தபோது ஏற்பட்ட தாபம் இருக்கிறது.

பூட்ஸுக்குப் பாலிஷ் போடும் தொழில் நடக்காமற் போகவே, சிறுவன் போலா சோர்ந்து விடவில்லை. வயிறு வளர்க்கப் பிச்சை எடுப்பதை அவன் அறவே வெறுத்தான். சந்தர்ப்ப விசேஷத்தால் போலாவும் பேலுவும் பிரிந்து விடுகின்றனர். பசியால் ரயில் வண்டியில் களைத்து விழுந்துவிட்ட சிறுமி பேலுவை, குழந்தைப் பேறில்லாமல் ஏங்கிய ஒரு பணக்காரத் தம்பதிகள் பார்த்து இரங்கி, தங்கள் இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர். அவள், தன் அண்ணன் போலாவையே நினைத்து ஏங்குகிறாள்.

போலா, தங்கை பேலுவைத் தேடிக் கொண்டு ஊரெல்லாம் சுற்றுகிறான். பசியின் கொடுமை அவனை மீண்டும் பிச்சை எடுக்கத் தூண்டுகிறது. அந்தச் சமயத்தில் அவன் மனம் அநுபவித்த வேதனையைச் சொல்லி முடியாது. கடைசியில், அவன் பணக்காரர் வீட்டில் வளரும் தங்கை பேலுவிடமே கை நீட்டி விடுகிறான். ஆகா, அப்பொழுது உண்மையை அறிந்ததும் அந்தக் குழந்தைகள் முகங்களில் உண்டான உணர்ச்சியை என்னவென்று சொல்லுவது ! முன்பு ஒரு சமயம் பசியின் கொடுமையால் இரக்கத் துணிந்த தங்கையின் கன்னத்தில் அறைந்த அண்ணன், இப்பொழுது அதே தவறை அவளிடமே தான் செய்ததை நினைத்து உள்ளங் குன்றி, உடல் குன்றிக் கண்ணீரும் கம்பலையுமாக அந்த இடத்தை விட்டே ஓடி விடுகிறான். (ஆனால், படம் பார்க்கும் ரஸிகர்களின் உள்ளங்களிலிருந்து அவனால் ஓட முடிய வில்லை !) ஜான் தாத்தா சமயத்தில் குறுக்கிட்டு, அவனையும் அவன் தங்கையையும் சேர்த்து வைக்கிறார். குழந்தைகளின் முகங்களில் சிரிப்பு பொங்குகிறது. படம் பார்ப்பவர்களின் உள்ளங்களும் நிறைந்து விடுகின்றன.

போலாவாக நடிக்கும் சிறுவன் ரத்தன் குமாரும், பேலுவாக நடிக்கும் பேபி நாஜுவும் பிரமாதமாக நடித்திருக்கிறார்கள் என்று கூறினால் போதாது ; சினிமாப் பாத்திரங்களாகவே மாறி விட்டனர் என்றுதான் கூற வேண்டும். ஜான் தாத்தா உணர்ச்சிப் பிழம்பாகவே இருந்து படத்துக்கு உயிர் தருகிறார்.

உழைப்பினால் உயர விரும்புவதுதான் மனித குலப் பண்பு என்னும் சிறந்த கருத்து கதையினூடே செறிந்து நின்று முடிவில் படம் பார்ப்பவர்களைப் பரவசப் படுத்துகிறது.

எண்ணிக்கையற்ற பூட்ஸுகளுக்குப் 'பாலிஷ்' போட்டு அவற்றின் மாசுகளை நீங்கச் செய்த அனுபவத்தைச் சிறுவனும் சிறுமியும், மனித குலத்தின் உள்ளங்களில் படிந்து கிடக்கும் மாசுகளையும் மறைமுகமாகத் துடைத்து விடுகின்றனர்.

V. 9244



# மூன்று விதங்களில் பணி செய்யும்

## **மோபிலாயில்** உங்கள் பணத்தை 3 வழிகளில் மிச்சப்படுத்துகிறது!


1 **மோட்டாரின் உறுப்புகள் விரையமாகாதபடி காப்பாற்றுகிறது.** எப்படியென்றால் அது எல்லா வித சீதோஷ்ண நிலைக்கும் அனுசரித்து சரியான படி எண்ணெயைப் படியவைக்கிறது.

2 **பழுதுருவண்ணம் இஞ்சினைக் காப்பாற்றுகிறது.** இஞ்சினில் கெடுதலை விளைவிக்கும் கார்பன் படிமானம் ஏற்படாதபடி உதவுகிறது.

3 **பெட்ரோலை சிக்கனமாய்ச் செலவழிக்க உதவுகிறது.** உலோகங்களினாலான உறுப்புகளை அவைகள் சாப்பிட்டு இஞ்சினில் சக்திக்குறைவு ஏற்படக்காரணமின்றி செய்கிறது.




# மோபிலாயில்




எங்கெல்லாம் பறக்கும் செங்குதிரையின் அடையாளத்தைப் பார்க்கிறீர்களோ அங்கு அசல் மூன்று விதங்களில் பணி செய்யும் மோபிலாயில் கிடைக்கும்.

ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி
(கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)



# வேணுகானம்

**விஜயம்**

## 7. அபாயம் வந்தது!

சுமதி மறைந்ததும் பூபதியும் அவ் விடத்தை விட்டு, தான் இருக்கும் இடத் துக்குப் போய்ச் சேர்ந்தான்.

கப்பல் ஆழ்கடலில் இப்படியும் அப்படியு மாக அசைந்து கொண்டு சென்றது. அவன் படுத்திருந்த சின்ன அறை கப்ப லின் ஓரமாக அமைந்திருந்தது. அந்த அறைக்கும் சாளரம் இருந்தது. சாளரத் தின் வழியாகச் சமுத்திரக் காற்று 'ஓ' வென்ற சத்தத்துடன் உறுமிக் கொண்டு உள்ளே நுழைந்தது. அதன் வழியாக நிலவொளியும் வந்தது.

சுமதியைச் சந்தித்துச் சம்பாஷித்ததி லிருந்து பூபதி தன் நினைவையே மறந்து விட்டான். அன்று காலை குழல் ஊதும் போதுதான் அவன் அவளை முதன் முத லாகச் சந்தித்துப் பேசினான். ஆனால் பூபதியின் மனத்தில் சுமதியும் தானும் எத்தனையோ நாட்கள் சந்தித்துப் பேசி வருவதுபோலப் பிரமை ஏற்பட்டிருந்தது.

இரவு சுமார் இரண்டு மணியிருக்கும். பூபதிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. சுமதி யின் நினைவிலேயே அவன் மனம் லயித் திருந்தது. 'பூரண சந்திரன் போன்ற அவள் முகத்தில்தான் எத்தனை காந்தி! அவள் ஒரு ராஜகுமாரியா? ஆகா, நம் அதிர்ஷ்டம்தான் அவளைச் சந்தித்தது!'

இத்தகைய எண்ண அலைகளின் இடையே சுழன்று கொண்டிருந்த பூபதி யின் செவிகளில் 'டக் டக்' என்று நாலைந்து பேர்கள் மாடிப் படியில் ஏறும் சத்தம் கேட்டது. ஏதோ ஒரு சந்தேகம் அவன் மனதில் தோன்றி எழுந்து அவர்கள் யார் என்று போய்ப் பார்க்கும்படி தூண்டியது.

உடனே பூபதி படுக்கையை விட்டு எழுந்து யாரும் அறியாமல் மெதுவாக வெளியே வந்து, அவர்களுக்குந் தெரியா மல் தொடர ஆரம்பித்தான்.

அவர்கள் வேறு யாரும் இல்லை. சேனா பதியும் அவனைச் சேர்ந்தவர்களும்தான். முன்னால் சென்ற ஒருவன் மின்சார விளக் குப் பொத்தான்களை அமுக்கி விளக்குகளை ஏற்றிக் கொண்டே போனான். அவர்கள் சென்ற வழி மேலும் கீழுமாகச் சென்றது. இடையிடையே சிறு இரும்பு ஏணிகளில் சர்வ ஜாக்கிரதையாக ஏறவும் இறங்கவும் வேண்டியிருந்தது. வழி வளைந்து வளைந்து சென்றது. பூபதி மிகவும் தைரியத்தோடு அவர்களைப் பின் தொடர்ந்தான். அந்தக் கூட்டத்தினரில் கடைசியில் சென்ற ஒரு வன், 'டக்டக்' கென்று மின்சார விளக்கு களை அணைத்துக் கொண்டே சென்றான். அதுதான் பூபதிக்கு மிகவும் சிரமமாயிருந் தது. வழியில் தட்டுத் தடுமாறிப் பல இடங்களில் அவன் கீழே விழுந்தான். ஆயினும் சமாளித்துக் கொண்டு தைரிய மாக அவர்களைப் பின் தொடர்ந்தான்.

சேனாபதியும் கூட்டத்தினரும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே சென்றனர். அந்தமாதிரி சமயங்களிலெல்லாம் பூபதி தடுக்கத்தோடு சுவரோடு சுவராக ஒட்டிக் கொள்ள நேர்ந்தது. ஏதோ பயங்கரச் சதியாலோசனை நடக்கப் போகிறது என் பது அவனுக்கு நிச்சயமாகத் தெரிந்தது.

அவர்கள் எல்லோரும் ஓர் அறையில் நுழைந்தனர். மறு நிமிஷம் அறைக் கதவு சாத்தப்பட்டது. பூபதிக்கும் பெருத்த ஏமாற்றமாய்ப் போய் விட்டது. ஆனால் அதற்காகப் பூபதி அப்படியே இடிந்து போய்விடவில்லை. மெதுவாக ஓசைப் படாமல் அந்த அறையைச் சுற்றி வெளிப்புறமாக நோட்டம் பார்த்தான். ஒரு சாளரம் இருப்பது தெரிந்தது. அங்கேயே கீழே உட்கார்ந்து கொண்டான். கப்பலில் தான் பார்க்காத இடங்களும் பல இருக்கின்றன என்பது அவனுக்கு அப்பொழுதுதான் தெரிய வந்தது.

அறையின் உள்ளே சேனாபதியின் கடுமையான குரல் கேட்டது.

"அந்தப் பையன் நமக்கு ரொம்பக் காரியங்களுக்கு உபயோகப் படுவான். நான் ஏற்கெனவே சொன்னபடி எல்லாம் நடந்திருக்கிறதா?"

"எல்லா ஏற்பாடுகளும் ஒழுங்காக நடந்திருக்கின்றன. அந்தப் பையன் பூபதியும் முதலில் முரட்டுத்தனமாக இருந்தான். இப்பொழுது அடங்கி விட்டான். இன்றைக்குப் பதினைந்தாம் நாள் நாம் புதுத் தீவை அடைந்து விடுவோம். அங்கே அந்தப் பெண் சுமதியையும் பூபதியையும் நம் தலைவரிடம் ஒப்படைத்து விட்டால் நம் காரியம் பூர்த்தியடைந்ததாகவே நாம் தீர்மானித்துக் கொள்ளலாம்!"

உடனே சேனாபதி தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "சுமதியைக் கைது செய்து வைத்திருப்பதனால் அவள் தகப்பனாரை வழிக்குக் கொண்டுவர நம் தலைவர் முயலுகிறார். அதன் மூலம் நமக்குப் பெருஞ் செல்வம் கிடைக்கும். மேலும் நம் கொள்ளைக் கூட்டத்துக்கு அநுகூலமாக ஒரு அரசன் இருக்கிறார் என்றால் அது நமக்குப் பெரிய பக்க பலம். இந்தப் பையன் பூபதியை எப்பொழுதும் நம்முடனேயே வைத்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். அத்துடன் அவனுக்கு அந்தப் புது வாத்தியமான புல்லாங்குழல் நன்றாக வாசிக்கத் தெரிந்திருக்கிறது. அந்த இசையைக் கொண்டு அந்தப் பெண் சுமதியையும் நம் வழிக்குக் கொண்டு வந்து, அவளிடம் அன்பிருப்பது போல் நடித்து, அவளை நம் தீவுக்குக் கொண்டு போய் விடவேண்டியது. அது வரையில் நம் திட்டம் வெளியாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஜாக்கிரதை, பூபதிக்கு இது தெரியக் கூடாது!" என்றான் சேனாபதி.

இந்தச் சமயம் பார்த்துப் பூபதிக்குத் தும்மல் வந்து விட்டது. 'அச்சீ' என்று அவன் பலமாகத் தும்மினான்.

அடுத்த நிமிஷம் அறைக் கதவைத் திறந்து கொண்டு ஒருவன் வெளியே வந்து "அடே, யாரது?" என்று கேட்டுக் கொண்டே பூபதியின் கையை 'டக்' கென்று இறுகப் பிடித்துக் கொண்டான். பூபதி பயத்தால் நடுங்கினான். (தொடரும்)

போட்டிக்கதை 4

# உலகிலும் உள்ளத்திலும்



வேப்பு கிருஷ்ணமூர்த்தி

"ராஜா, ஜாக்கிரதையாக இருடா, கண்ணு! பிரேமா, குழந்தையைப் பத்திரமாகப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துப் போ, அம்மா! கிண்ணத்தில் தயிர் சாதம் வைத்திருக்கேன். எடுத்துச் சாப்பிடுங்கள்! ஜாக்கிரதை!...நான் சாயங்காலம் வந்து விடுவேன்..." என்று கூறிக்கொண்டே தயங்கித் தயங்கி நின்றாள் லக்ஷ்மி.

"அம்மா, நாங்கள் சமத்தா யிருக்கோம்! 'பெப்பர்மிண்ட்' வாங்கிவா அம்மா!" என்று ராஜா மலர்ந்த முகத்துடன் அன்னைக்கு விடையளித்தான். பெற்ற மனம் விம்மியது!

"அம்மா, சீக்கிரம் வந்து விடம்மா! இருட்டினா எனக்குப் பயமாக இருக்கும்! எனக்கு ஸ்லேட் பென்ஸில் மட்டும் வாங்கி வந்துவிடு...எனக்கு ஸ்லேட் பென்ஸில் கூட வேண்டாம். நீ சுருக்க வந்துவிடு!" பெண் குழந்தை யாதலால், மனத்தில் உரமின்றிக் கண் கலங்கினாள் பிரேமா.


"எல்லாம் வாங்கிக் கொண்டு சாயங்காலம் வந்து விடுகிறேன்! ஜாக்கிரதை...... வரட்டுமா?" கடல் கடந்து பிரயாணம் செய்யப் போவது போன்ற திகைப்புடன், குழந்தைகளைப் பிரிய மனமின்றிப் புறப்பட்டு விட்டாள் லக்ஷ்மி.

காட்டு இலாக்காவில் வேலை பார்க்கும் புருஷனுடன் குடித்தனம் செய்ய முடியாமல், குழந்தைகளின் படிப்புக் குறுக்கிட்டது. குழந்தைகளுக்குக் கல்வி யறிவளிப்பதே தன் கடமைகளில் முக்கியம் என்று கிராமப் பள்ளியில் படிக்க வைத்துக் கொண்டு, சிறு

ஜாகை ஒன்றில் தனி வாழ்க்கை நடத்திக் கொண்டு வந்தாள் லக்ஷ்மி.

பதினைந்து மைலுக் கப்பாலுள்ள பட்டணத்துபாங்கிலிருந்து பணமெடுத்துவர மாதம் ஒருமுறை செல்லவேண்டியிருந்தது. அன்றும் அவ்விதம் வழக்கம்போல் வீட்டை விட்டுப் புறப்பட்டாள். ஒரு மைல் மாட்டு வண்டியிலும், ஐந்து மைல் பஸ்ஸிலும், சென்று ரயில் நிலையத்தை அடைந்தால் பிறகு ரயிலில் சுலபமாகப் போய் விடலாம். அன்றைக்கு மாட்டு வண்டி கிடைக்கவில்லை. கிராமத்திலிருந்து நடந்து சென்று பஸ்ஸில் ஏறினாள். வானம் இருண்டு மழை பிடித்துக் கொண்டது.

இப்படி மழை பெய்கிறதே...குழந்தைகள் நனைவார்களோ? என்று லக்ஷ்மியின் சிந்தனை ஓடியது. மழையும் வலுத்தது. ரயில் புறப்பட இரண்டு நிமிஷம்தான் இருந்தது. பிடித்தடித்து டிக்கெட் வாங்கிக் கொண்டு ஏறி விட்டாள்! பிரயாணிகளின்பேச்சு லக்ஷ்மியின் கவனத்தைக் கவர்ந்தது.



"இதென்ன காலமில்லாக் காலத்தில் மழை இப்படிக் கொட்டுகிறது? பயிர் பச்சையெல்லாம் வீணாகிப் போய் விடும் போலிருக்கே?" என்றார் ஒருவர்.

"ரேடியோவில்கூடச் சொன்னார்களாம்! புயல் வீசலாம் என்று!" என்றார் மற்றவர்.

"புயலா? இங்கே ஏதுங்க புயலும், மழையும்! அதுதான் ஐந்து வருஷமாகப் பூமி காய்ந்து கிடக்குதே!"

லக்ஷ்மியின் மனத்தில் சஞ்சலம் புகுந்தது. புயல் வீசினால் குழந்தைகளின் கதி? ஐயோ, இன்றைக்கென்று புறப்பட்டேனே! தேவபுரியில் வண்டி நின்றது. பரக்கப் பரக்க இறங்கி விட்டாள். புடவையும் ரவிக்கையும் சொட்டச் சொட்ட நனைந்து விட்டது. நகரத்துக்குள் கால் நடையாகவே செல்லத் தொடங்கினாள்.

"அம்மா வண்டி வேணுங்களா?" "ஏறுங்க அம்மா, எங்கே போகணும்?" என்று பல குரல்கள் எழுப்பிய ஓசை அவள் செவியில் விழவில்லை. தன் போக்கில் நடந்தாள்! பாங்கிக்குப் போனாலும் வேலை உடனே முடிந்து விடுகிறதா? விநாடிக்கு விநாடி புயலின் வேகம் உக்கிரமாய் ஏறிக் கொண்டிருந்தது! பாங்கியிலும் கும்பல் கரகரவென்று குறைந்து விட்டது! அவள் பணத்தைப் பெற்றுக் கொண்டாள். தெருவிலிருந்த கடைகள் ஒவ்வொன்றாக மூடப்பட்டன. "சீக்கிரம் பத்திரமான இடத்துக்குப் போங்க, அம்மா! இங்கே நிற்பதுகூட ஆபத்து! அதோ பாருங்க, அடாடா!" என்று பாங்கி சிப்பந்தி காட்டிய திசையில் வேருடன் பிடுங்கப்பட்ட பிரும்மாண்டமான மரம் படீரென்று விழுந்தது! 'ஐயோ, குழந்தைகளின் கதி?' என்ற ஒலி அவள் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து பொங்கி எழுந்தது.

"அம்மா, பெப்பர்மிட் வாங்கிவாம்மா!" ராஜாவின் குரல் அவள் இதயத்துள் ஒலித்தது. மூளையில் சம்மட்டியால் தாக்கப்படும் வேதனை எடுத்தது! அங்கு ஈ காக்கையில்லை. கதவைப் பலமான இரும்புப் பூட்டால் பூட்டிவிட்டு, காவற்காரன் உள்பட எல்லாரும் போய் விட்டார்கள்! மின்னல் கண்ணைப் பறித்தது. காற்று சுழன்று சுழன்று 'ஹோ'வென்ற பயங்கர ஓசையுடன் வீசியது. எங்கிருந்த கூரைகளோ ஆகாயத்தில் விமானங்களைப் போலப் படுவேகமாகப் பறந்தன. தடதடவென்ற ஒரு சத்தத்துடன் மின்சாரக் கம்பிகள் சிதறி விழுந்தது. பாங்கியின் முன்புறம் அழகாகப் படர்ந்திருந்த முல்லைக் கொடி பிய்த்துக் கொண்டு ஓடியது! சவுக்கு மரங்கள் சடசடவென விழுந்தன. என்ன பயங்கரமான புயல்!

"என் கண்மணிகளைத் தனியே விட்டு வந்து விட்டேனே! அறியாக் குழந்தைகள்."

"இருட்டி விட்டால் எனக்குப் பயமா இருக்கும் அம்மா!" நீர் மல்கிய பிரேமாவின் கண்கள் தோன்றி, லக்ஷ்மியின் இதயத்தைப் பிழிந்தது. காற்றையும் மழையையும் லட்சியம் செய்யாது வீதியில் இறங்கி விட்டாள். அவள் முன் வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் பின்னால் எண்ணற்ற மரங்கள் அடியோடு விழுந்தன! மின்சாரக் கம்பங்கள் கம்பிகளுடன் சாய்ந்தன. திரும்பிப் பாராமல் ரயில் நிலையத்தை நோக்கி நடந்தாள்.

வானம் இருண்டு நேரம் காலம் புரியாத ஊழிக்காலப் பிரளயம் போல் குமுறியது! உலகில் வீசிய புயலின் கோரத்தைக் கண்கள் தெளிவாகக் காட்டியது. ஆனால், அவள் உள்ளத்தில் வீசிய புயல்?......அப்பப்பா! அவள் ஒவ்வொரு நரம்பையும் உலுக்கி, இதயத்தைக் கசக்கி, இடைவிடாது "என் செல்வங்கள்...என் கண்மணிகள்..." என்ற குரல் அவள் வாயிலிருந்து வெளிப்பட்டன. அப்படியே ரயில் நிலையத்துக்குள் நுழைந்தாள். அங்கு ரயில் போக்குவரத்துச் செய்யும்படியாகவா இருந்தது? கண்ணாடிக் கதவுகள் இருந்த இடத்தில் கற்குவியல்கள்! தின்பண்டம் விற்குமிடத்தில் நொறுங்கிய கண்ணாடித் துண்டுகள்! கைகாட்டி மரங்கள் கையொடிந்து புரண்டன! முதல் வகுப்புப் பிரயாணிகள் தங்கும் அறையில், பிச்சைக்காரர் முதல் பலதரப்பட்ட மனிதர்களும் ஒண்டிக் கொண்டிருந்தனர்.

"ஏன் ஐயா, இன்று ரயிலே போவாதா? மகளுக்கு உடம்பு சரியில்லை என்று தந்தி வந்தது. இலுப்பூரிலிருந்து ஓடி வருகிறேன்! ரயிலை இங்கே போட்டுட்டாங்களே இப்படி!" என்று ஐம்பது வயது கிழவியின் கவலை தோய்ந்த குரல் கேட்டது.

"புயல் எப்படி வீசுது! தெரியாமல் தான் கேட்கிறாயா, கிழவி! ரயிலை விட்டால் பறந்து விடும் காத்துலே! காத்து நிக்கற மட்டும் ரயிலேது, பஸ்ஸேது? அப்படி அப்படியே நொறுக்கிப் போட்டாச்சு!" என்று தைரியமாகப் பேசினான் ஒரு யுவன்.


"சாமி பிள்ளை பசியாலே துடிக்குது, ஏதாச்சும் கொடு தர்மராசா!" என்ற பிச்சைக்காரியின் இறைஞ்சும் குரலுடன், நாலு வயதுக் குழந்தையின் குரல் "ஊம்ம்ம்" என்று சுருதி கூட்டியது!

"சனியன்! இந்தப் புயலிலும் கூடப் பீடை ஒழியிடுகிறதே! சே, சே, பிச்சைக்காரர்களை எப்படித்தான் ஒழிக்கப் போகிறார்களோ! நான்ஸென்ஸ்..." என்று சில்க் ஜிப்பாக்காரர் முகத்தைச் சுளுக்கினார்.

"அது எங்கே ஒளியப் போவுது? புயல் ஓய்ந்தா பத்துப் பங்கு ஈசல்போலக் கிளம்பிடும் பாருங்க!" என்று தீர்க்க திருஷ்டியுடன், 'வைரக் கடுக்கனைத் துடைத்தபடி' கூறினார் இளங் தொந்திக்காரர். ஒரு மூலையில் உட்கார்ந்து உடைந்த ஜன்னல் வழியாக வெளியில் நடக்கும் பயங்கர அழகை ரஸித்துக் கொண்டிருந்தார் இளம் எழுத்தாளர். அவர் உள்ளத்தில் உற்சாகப் புயல் வீசியது—அடுத்த கதையில் அடித்து நொறுக்கி விடமாட்டாரா? அவர் பேனாவுக்கு முன் இந்த வெறும் காற்று எம்மாத்திரம்?

"ஐயா, இன்று ரயில் ஒன்றுமே கிளம்பாதா?" வேதனை சொட்டும் குரல், எழுத்தாளரின் கவனத்தைத் திருப்பியது. ஈரத் துணிகள் உடம்போடு ஒட்டிக் கொள்ளத் 'துயரம் தேங்கிய' கண்களுடன் நடு வயதினளான லக்ஷ்மி நின்று கொண்டிருந்தாள்.

"அம்மா, இன்று வண்டி ஒன்றும் புறப்படாது! அதோ பாருங்கள், தந்திக் கம்பங்களின் கதியும், அருகிலிருக்கும் காலிப் பெட்டிகள் நொறுங்கிக் கிடக்கும் கோலமும்!" எழுத்தாளர் வினயமாகப் பேசினார்.



"நான் இப்பொழுதே ராசாப்பேட்டைக்குப் போக வேண்டுமே! என் குழந்தைகள் தனியாகத் தவிப்பார்களே!" என்று வாய் விட்டுச் சொன்னாள் லக்ஷ்மி தன் துன்பத்தை.

"ராசாப்பேட்டையா? பதினைந்து மைல் எப்படிப் போவீர்கள்? சிறிது நேரத்தில் புயல் அடங்கிவிடும், சௌகரியமாகப் போகலாம்" என்றார் ஒருவர். சிறு குழந்தையுடன் நின்றிருந்த பிச்சைக்காரிக்கு அருகில், பத்து வயதுச் சிறுமியும் சேர்ந்து கொண்டாள். அவள் முகத்தில் சந்தோஷம் பொங்கியது. "ஆயா, அந்த சாமி கொடுத்தது!" என்று ஒரு "ரொட்டித் துண்டை" அழுது கொண்டிருந்த குழந்தையிடம் கொடுத்தாள். ரொட்டியை ஆவலுடன் விழுங்கிய குழந்தைக்கு விக்கல் எடுத்து விட்டது. தண்ணீர் கொடுக்கக் குழந்தைகளுடன் வெளியே சென்றாள் பிச்சைக்காரி. அவ்வளவுதான்! மேலேயிருந்த தகரத் தகடுகள் பிடுங்கிக் கொண்டு அவர்கள்மேல் விழுந்து விட்டன! லக்ஷ்மி கண்களை மூடிக் கொண்டாள். அவள் கண்களுக்கெதிரே பிரேமாவும், ராஜாவும், பயத்துடன் ஒண்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். கிராமாந்தரத்தின் பழங்காலச் செங்கல் சுவரும், கலகலத்த ஓட்டுக் கூரையும் காற்றுடன் கடும்போர் புரிந்து தோற்றன. தடதட வென்ற சப்தம்! குழந்தைகளின் "அம்மா" என்ற அலறல் யாவும் தெளிவாகக் கேட்டன. கையால் கண்களை மூடிக் கொண்டு கதறிய லக்ஷ்மி, அங்கிருந்து புறப்பட்டு விட்டாள்! ரயில் பாதையோடு தடுக்கி விழுந்து கொண்டு நடந்தாள், ஓடினாள்! மலைபோல் விழுந்து கிடந்த மரங்களின் மேல் ஏறி இறங்கி நடந்தாள். இடிந்து கிடந்த குடிசைகளைக் கடந்து ஓடினாள். காற்று அசுர வேகத்துடன் உந்தித் தள்ளியது! பித்துப் பிடித்தவள் போல் ஓடிக் கொண்டிருந்த லக்ஷ்மி, 'தடா' லென்று வேரற்ற மரம்போல் கீழே விழுந்தாள்!

எங்கும் மரண அமைதி! உள்ளத்தில் சிறிது உணர்வு தட்டியது. தான் மறு உலகில் இருப்பதுபோல் தோன்றியது! "ஐயோ, என் குழந்தைகளைப் பார்க்காமலே இறந்து விட்டேனா?" என்று தீனமாக முனகினாள்.

"லக்ஷ்மி, இதோ பார்! நீ இறந்துவிடவில்லை! நான் யார் தெரிகிறதா?"

"பிரேமா ... ராஜா ... என் கண்களா!" முகத்தில் ஜில்லென்ற தண்ணீர் பட்டது. சூடான பானம் வாயில் விழுவதை உணர்ந்து 'மடக்' மடக்கென்று விழுங்கினாள். கண்ணைத் திறக்க முடிந்தது. முதலில் தென்பட்டது யார்? அவள் அன்புக் கணவனா? அதோ, குழந்தைகள்! உண்மைதான்! உண்மையாகவே அவளுடைய செல்வங்கள்தான்!

"லக்ஷ்மி, நல்ல வேளையாக நீ பிழைத்து வந்தாயே! கார்த்திகைக்கு உங்களுடன் குதூகலமாக இருக்க வேண்டும் என்று லீவு எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். தேவபுரிக் கடைத்தெருவில் சாமான் வாங்கும்பொழுது 'இன்று கடுமையான புயல் வீசலாம்' என்ற ரேடியோச் செய்தியைக் கேட்டேன்! எனக்குக் கலவரமாகி விட்டது! அங்கிருந்தே வாடகைக் காரில் சென்று வீட்டை அடைந்தால், குழந்தைகள் மட்டும் தனியாக இருந்தார்கள்! விஷயம் தெரிந்ததும், உன்னை அழைத்து வரக் காரிலேயே எல்லாரும் புறப்பட்டோம். பாதி தூரம் சென்றதுமே மரங்கள் விழுந்து பாதை அடைபட்டு விட்டது. மிகுந்த பிரயாசையுடன் 'சின்னப்பட்டி' ஸ்டேஷன் மாஸ்டர் வீட்டை அடைந்தோம்! இரவெல்லாம் உன்னைப் பற்றிய கவலையுடன் வீதியைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருந்தேன். நிழல் போன்ற ஒரு உருவம் ரயில் பாதையிலிருந்து உருண்டு விழுவது, காரிருளை வெறித்து நோக்கிய என் கண்களுக்குப் புலப்பட்டது! வீட்டுக்குள் தூக்கி வந்து பார்த்தால் நீ!" கணவனின் பேச்சுக்கள் லக்ஷ்மியின் காதுகளில் விழவேயில்லை! குழந்தைகளை மாறி மாறி முத்தமிட்டபடி கண்ணீர் விட்டாள்!

"பிரேமா...ராஜா...!" என்று விம்மினாள்.

"அம்மா, அந்தக் கோவில் மட்டுந்தான் விழாது இருக்கு! நீ எப்படி அம்மா வந்தே?" பிரேமாவின் குரல் அமுதமாகப் பாய்ந்தது லக்ஷ்மியின் செவிகளில்.

"கோவிலிலே சாமி இருக்கு, அதுதான் விழல்லே! நம்ம அம்மாவும் சாமிதானேடி? அதான் வந்துட்டா! எங்க டீச்சர் கூடச் சொன்னாரே!" ராஜா கம்பீரமாகப் பேசினான். புயல் ஓய்ந்து உலகம் பெரு மூச்சு விட்டது! உள்ளத்தில் புயல் ஓய்ந்து விச்ராந்தியாகப் பெருமூச்சு விட்டாள் லக்ஷ்மி!

P. [illegible]

# அன்றாடம் 2 நிமிஷங்கள் செலவழித்தால் போதும் .... நீங்கள் பூரண எழிலுடன் திகழலாம்



பிரதி இரவிலும் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை உங்கள் சருமத்தில் தடவி நன்கு தேயுங்கள்—ஓரே ஒரு நிமிஷம் தான் ஆகும். அதிலுள்ள எண்ணெய்கள் சருமத்தில் ஊடுருவிச்சென்று, மயிர்க் கால்களில் படிந்திருக்கும் சிறு சிறு தூசியையும் அழுக்கையும் வெளியேற்றி விடுகிறது. சருமத்தை மெதுவாகத் துடைத்து, அது எவ்வளவு பரிசுத்தமாக விளங்குகிறதென்பதைப் பாருங்கள்.


இவ்வற்புத க்ரீமை இன்னும் கொஞ்சம் எடுத்து முகத்திலும் கழுத்திலும் பூசிக்கொள்ளுங்கள். இரவு முழுவதும் அது அப்படியே இருக்கட்டும். காலையில் எழுந்தவுடன் உங்கள் மேனி மிக துல்லியமாயும் பூரண பொலிவுடனும் விளங்குவதைக் கண்டு அதிசயிப்பீர்கள்.



பிரதிதினம் காலையிலும் ஒரு நிமிஷம் உங்கள் முகத்தில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை மெதுவாகத் தடவுங்கள். அது பூரணமாக மறைந்துவிடும். சருமம் பட்டுப்போன்று மழமழப்பாகவும் அற்புதச் சோபையுடனும் விளங்கும்.

கண்ணுக்குப் புலப்படாத வகையில் முகத்தில் மறைந்துள்ள இந்த பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் திரைப்படலம் பகல் முழுவதிலும் உங்கள் எழிலைப் பாதுகாக்கும். உங்கள் மிருதுவான சருமத்திற்கு இந்த பாதுகாப்பு அவசியம்—முக்கியமாக வரட்சைக் காற்றிலும் சூரிய கிரணங்களின் வெப்பத்தாலும் சருமம் துவண்டு போகாமல் காப்பாற்றிவர அத்யாவசியம்.

உங்கள் சருமத்திற்கு இவ்விரட்டைப் பராமரிப்பு ஒவ்வொரு நாளும் தேவை. பாண்ட்ஸ் க்ரீம்கள் இரண்டையும் அன்றாடம் தவறாமல் உபயோகித்து உங்கள் அழகிற்கு அழகு கூட்டுங்கள்!






உலகில் எங்குமே பெண்மணிகள் தங்கள் எழிலை புதுமை குன்றாமல் பாதுகாக்க பாண்ட்ஸ் க்ரீம்கள் இரண்டையுமே உபயோகிக்கின்றனர். அவர்கள் இயற்கை அழகின் இரகசியம் அதுதான்.

முக சிங்காரிப்புக்குத்தான், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவிக்கொண்டால் அதன்மேல் பௌடர் பூசுவது மிக எளிது அழகாயுமிருக்கும், ஞாபகமிருக்கட்டும்.

**பாண்ட்ஸ்**




அஜீரணம் வாழ்க்கையே துன்பமயமாக்கி விடுகிறது; வயதுக்கு மிஞ்சிய வயோதிகத் தோற்றமும் உண்டாக்கிவிடுகிறது. மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் துரிதமான நிவாரணம் தருகிறது. ஏனெனில் அது ஒரு அபூர்வச் சிறப்புடைய பௌடர்; சாஸ்திரீகமான தயாரிப்புத் திட்டப்படி பக்குவமான பொருட்சேர்க்கையுள்ள இந்தப் பௌடர் மூன்று வேலைகள் செய்கிறது—மிருதுவான இரைப்பைக்குச் சமனமூட்டுகிறது; வயிற்றுப் புளிப்பை மாற்றுகிறது; வலியையும் நிறுத்துகிறது.

மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் என்று பெயரைச் சொல்லிக் கேளுங்கள். ஒவ்வொரு பாக்கெட்டிலும் Alex C. Maclean "அலெக்ஸ் ஸி. மக்ளீன்" என்ற உண்மைக் கையெழுத்தும் தத்ரூபமாக அச்சிடப் பட்டுள்ளதா என்று நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள்.




# மக்ளீன்

## பிராண்ட் ஸ்டமக் பவுடர்

**எப்பொழுதும் கையில் ஒரு பாட்டில் வைத்திருங்கள்.**

**ஒரு டோஸ்**

அஜீரணத்தாலேற்படும் வயிற்று வலி, உடற்பருமன், இருதய எரிச்சல், வயிற்று மந்தம், வாந்தி இவற்றை சடுதியில் குணப்படுத்தும்.

ஜே. எல். மாரிஸன் ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்,
தபால் பெட்டி 6527, பம்பாய் 26. தபால் பெட்டி 357, கல்கத்தா.
தபால் பெட்டி 1370, சென்னை.

MSY.

# லட்சியச் சிதைவு

விஜயஸ்ரீ

"அம்மா! உன் பிடிவாதத்தை விட்டு விடு. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் நான் உன் சொல்படி கேட்க முடியாது. உனக்காக என் லட்சியத்தைத் தியாகம் செய்து விடவும் முடியாது. ஆமாம், கட்டாயமாக முடியாது!"

"ராஜு! இளங்கன்று பயமறியாது என்பது போல், படபடப்புடன் பேசுகிறாய். உலகத்தில் லட்சியமெல்லாம் எங்கேயடா இருக்கிறது! வீணாக அடம் பிடிக்காதே! தலை நரைத்த நான் உன் நன்மைக்குத்தான் சொல்வேன் என்பதை மறந்து உளறாதே. நம் குலப் பெருமை என்ன, நீ செய்யவிருக்கும் காரியமென்ன!"

"உனக்கென்னம்மா தெரியும், உலகத்திலுள்ள சில பணக்காரர்களால், முதலாளித்துவத்தால், ஏழை பாழைகள் படும் அவதி யெல்லாம்! ஏழை மக்களுக்காகச் சேவை புரியத் துடிக்கும் எனக்குக் குலப் பெருமையைப் பற்றி அளக்க ஆரம்பித்து விட்டாய். நீ ஒற்றைக் காலில் தவம் செய்தாலும், என் தீர்மானம் மாறப் போவதில்லை. நான் பொதுவுடைமை வாதியாகப் போவது நிச்சயம்!"

இச் சமயத்தில்தான் கிருஷ்ண சாஸ்திரியார் உள்ளே வந்தார். "பாருங்களேன் உங்கள் பிள்ளையின் பிடிவாதத்தை" என்று காமு அம்மாள் முறையிட்டுக் கொண்டாள்.

"காமு, இம்மாதிரி விஷயங்களி லெல்லாம் நீ தலையிடுவதே தவறு. நம்முடைய காலம் எல்லாம் மலையேறி விட்டது என்பதை மறந்து விடாதே! காலம் மாறுவது போல் நம் மனப்பான்மையும் மாற வேண்டும். ஆகையினால், அவன் இஷ்டப்படி விட்டு விடு! அப்படி யொன்றும் தப்பான காரியத்தில் அவன் புகவில்லையே! இக்காலத்திய அரசியலில் கலந்து கொள்ளவன்றோ போகிறான் ராஜு" என்றார் அவர்.

"சரி, நீங்களும் ஜாம்பி விட்டீர்களா பிள்ளைக்குப் பரிந்து கொண்டு! லட்சணமாய்க் காலா காலத்தில் உத்தியோகத்தில் அமர்ந்து, கல்யாணம் செய்து கொண்டு, குடியும் குடித்தனமுமாய் இருப்பதை விட்டு, ஊரார் தொல்லை யெல்லாம் தலையில் ஏற்றிக் கொள்ளட்டும்" என்று ஆத்திரத்துடன் கூறி விட்டு, தன் வேலையைக் கவனிக்கச் சென்று விட்டாள் அவள்.

ராஜு கல்லூரிப் படிப்பை முடித்து, பட்டம் பெற்றவன். கார்ல் மார்க்ஸ், லெனின், டிராட்ஸ்கி முதலியவர்களின் புரட்சி வாழ்வு அவனைக் கவர்ந்து விட்டது. பொதுவுடைமை இலக்கியத்தைக் கரைத்துக் குடித்த அவனுக்கு இந்தியாவிலும் ஏழை பணக்காரன் என்ற வித்தியாசத்தை வேரறுக்க வேண்டுமென்ற தீவிர ஆர்வம் இருந்தது. பொதுவுடைமைக் கட்சியினர் சிலரைச் சந்தித்துப் பேசினான். அவர்கள் அவன் மனத்தில் சிறு பொறியாயிருந்த லட்சியத்தை விசிறி விசிறிப் பெரும் நெருப்பாக்கினார்கள். அவ்வக்கினி பணக்காரக் கும்பலைக் கண்டால் மேலும் கொழுந்து விட்டெரிந்தது.

அவன் தந்தை கிருஷ்ண சாஸ்திரி, அரசாங்க உத்தியோகத்தில் இருந்து சமீபத்தில் ஓய்வு பெற்றவர். அவருக்கு நிலம் சொத்து சுதந்திரங்களிருந்தன. அவர் பழைய சம்பிரதாயங்களையும் எண்ணங்களையும் கொண்டவராயினும், தன் மகனின் மனதைப் பளிங்கென உணர்ந்தார். ஒன்றிரண்டு தடவை அவன் மனதை மாற்ற முயன்றார், முடியவில்லை. ராஜு ஒரு லட்சியத்துக்காகப் பாடுபடப் பிறந்தவன் என்ற எண்ணம் அவரிடம் நாளடைவில் தலை தூக்கியது. எனவே அவன் போன போக்கிலேயே விட்டார். ஆனால் காமு அம்மாள் அவ்வளவு சுலபமாகத் தன் மகனின் எண்ணத்துக்குப் பிடி கொடுக்கவில்லை. கடைசியில் தான் என்ன சொன்னாலும் அவன் கேட்கப் போவதில்லை என்றறிந்து, வாளா விருந்தாள்.

ராஜு தன் இலட்சியத்துக்காக எளிய வாழ்க்கை நடத்தினான். சேரிகளில் அஞ்ஞான இருளைப் போக்கி ஞான தீபத்தை ஏற்றப் பெரும் பாடு பட்டான். பாட்டாளி மக்களின் துன்பத்தைத் துடைக்க, அவர்களிடம் ஒற்றுமையை நிலை நாட்ட அவன் செய்த முயற்சிகள் யாவராலும் போற்றப் பட்டன. பொதுவுடைமைக் காரர்களுக்கு உண்மை உழைப்பாளி ஒருவன் அகப்பட்டு விட்டதில் பரம சந்தோஷம். ராஜுவின் நேரம் முழுவதும் பொதுவுடைமைப் பிரசாரத்துக்காகவே கழிந்ததால், அவன் வீட்டுக்கு அநேகமாக வருவது கிடையாது. வந்தாலும் சற்று நேரத்துக்கெல்லாம் வெளியே போய் விடுவான். அவன் பெற்றோர்களும் தாமரை இலைத் தண்ணீர் போன்ற ஞான வாழ்க்கை நடத்தி வந்தனர்.

அச்சமயத்தில்தான், சென்னை சர்க்கார், பொதுவுடைமைக் கட்சி சட்ட விரோதமானது என்று பிரகடனம் செய்தனர். பல 'தோழர்கள்' கைது செய்யப்பட்டனர். தப்பித்துக் கொண்டவர்கள், போலீஸார் கையில் அகப்படாமல் காடுகளிலும் மலைகளிலும் ஒளிந்திருந்து, அரசாங்கத்துக்கு எதிராக வேலை செய்வதில் முனைந்தார்கள். இந்த அமர்க்களத்தில் ராஜு என்ன ஆனான் என்றே தெரியவில்லை. கைது செய்யப்பட்டவர் ஜாபிதாவில் அவன் பெயர் வரவில்லை. ஆகவே தப்பித்துக் கொண்டுதான் போயிருக்க வேண்டும் என்று சமாதானப்படுத்தினார் கிருஷ்ண சாஸ்திரி, தன் மனைவி காமு அம்மாளை. தாய் மனம் அச்சமாதானத்துக்கு ஒவ்வாமல் சஞ்சலப்பட்டது.

"என்ன பைத்தியக்காரப் பிள்ளை. ஜோராக வீட்டில் இருந்து கொண்டு சுக வாழ்க்கை நடத்தாமல், வெய்யிலிலும் பனியிலும் குளிரிலும் மிருகங்களைப் போல் அலைகிறானே, நான் சொன்னதைக் கேட்காமல் பிடிவாதம் பிடித்து அவஸ்தைப் படுகிறானே. இது என்ன லட்சிய வாழ்க்கை!" என்று அங்கலாய்த்துக் கொண்டாள்.

தினமும் திடுக்கிடும் செய்திகள் பத்திரிகைகளில் வெளி வந்த வண்ணமாக இருந்தன. "இந்தக் கிராமத்தில் பத்து பொது உடைமைக்காரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த ஊரில் இருபது பொதுவுடைமைவாதிகள் கைது செய்யப்பட்டனர். தண்டவாளத்தை விட்டு எக்ஸ்பிரஸ் கவிழ்ந்தது. நூறு பேர்கள் மாண்டனர். இவ் விபத்து கம்யூனிஸ்டுகளின் விஷமத்தால் நேர்ந்தது என்று போலீஸ் வட்டாரங்கள் நம்புகிறார்கள்" என்றெல்லாம் படித்த கிருஷ்ண சாஸ்திரியின் மனம் அவலைப்பட்ட புழுப்போல் துடித்தது. தன் மனப் பாரத்தைக் காமு அம்மாளிடம் பகிர்ந்து கொள்

வார். இருவரும் சேர்ந்து முருகனையும், வேங்கடாசலபதியையும் வேண்டிக் கொள்வார்கள், ராஜுவுக்கு ஒருவித ஆபத்தும் நேரக் கூடாது என்று.

நாளுக்கு நாள் பயங்கரவாதிகளின் அக்கிரமங்களைப்பற்றியும் போலீஸாரின் அடக்குமுறையைப் பற்றியும் செய்திகள் அதிகரித்தனவே ஒழியக் குறையவில்லை. காமு அம்மாள் எவ்வளவோ தைரியமாகத்தான் இருந்தாள். இருப்பினும், அவளுக்குச் சாப்பாடு பிடிக்கவில்லை. தூக்கம் வரவில்லை. உடம்பு இளைத்தது. பிரமை பிடித்தவள்போல் ஆகிவிட்டாள் அவள். பெற்ற மனம் அல்லவா! அவள் பெற்ற ஒரே மகனின் அருமை அவளுக்குத்தானே தெரியும்!

கணவனுடன்கூட அதிகம் பேசுவதில்லை. எப்பொழுது பார்த்தாலும் "ராஜு, என் கண்ணே, எங்கேடா போய் விட்டாய் என்னை விட்டுவிட்டு!" என்று முணு முணுத்துக் கொண்டே இருப்பாள். கிருஷ்ண சாஸ்திரி அவளைத் தேற்றுவதை விட்டு விட்டார். பாவம் தம்மைத் தேற்றிக் கொள்ளுவதற்கே அவரால் முடியவில்லையே!

ஒரு நாள், இரவு கிருஷ்ண சாஸ்திரி சாப்பிட்டு விட்டு ஊஞ்சலில் அமர்ந்து இருந்தார். அப்பொழுது ரேடியோவில் தமிழ்ச் செய்தி படித்துக் கொண்டிருந்தார்கள். "………விஜயவாடாவுக்கு அருகில் பதின்மூன்று கம்யூனிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர்" என்று வாசிக்கப் பட்டது. அதைத் தொடர்ந்து ரேடியோவில் "படார்" என்று ஓசை ஏற்படவே, கிருஷ்ண சாஸ்திரி திடுக்கிட்டு அங்கு விரைந்தார்.

"பதின்மூன்று பேர்களையா கொன்றீர்கள்! என் பிள்ளையையும் கொன்றீர்களா! இதோ உடைக்கிறேன் உன் வாயை" என்று பயங்கரமாகக் கத்திக் கொண்டு, தன் கையில் இருந்த பாத்திரத்தை ரேடியோ மேல் விட்டெறிந்திருந்தாள் காமு அம்மாள். ரேடியோ சுக்கு நூறாக உடைந்து கிடந்தது. பேய்ச் சிரிப்புடன் நின்று கொண்டிருந்த தன் மனைவியைக் கண்டு பயந்து போய் விட்டார் கிருஷ்ண சாஸ்திரி.

"என்ன இது காமு!" என்று அவளை அடக்குவதற்கு எழுந்தார்.

"என்னைத் தொடாதீர்கள். தூரப் போங்கள். ராஜுவை வீட்டை விட்டுத் துரத்திவிட்டு, இங்கே உங்களுக்கென்ன வேலை!" என்று இரைந்தாள்.



கிருஷ்ண சாஸ்திரி விழித்தார். ராஜுவும் சுடப்பட்டவர்களில் ஒருவன் என்று அறிவிக்கப் படவில்லை. இருப்பினும் பல மாதங்களாக இருந்த மனப் பாரத்தாலும், குழப்பத்தாலும், மிதமிஞ்சிய தாயன்பினாலும் காமு அம்மாளின் மனம் சுடப்பட்டவர்களில் தன் மகனும் ஒருவன் என்று எண்ணி விட்டது. பாவம். அவளுக்கு அந்த அதிர்ச்சியினால் மனக் கலக்கம் ஏற்பட்டு விட்டது!

வெகு சிரமப்பட்டுத் தம் மனைவியைப் படுக்க வைத்து விட்டுக் கிருஷ்ண சாஸ்திரி தூக்க மருந்து ஒன்றைப் புகட்டினார் அவளுக்கு. சட்டென நித்திரையில் ஆழ்ந்து போன அவளைக் கண்டு நீண்ட பெருமூச்செறிந்தார். "இந்த மாதிரி ஏடாகூடமாக ஆகும் என்று தெரிந்திருந்தால், ராஜுவின் இலட்சியத்துக்கு என்றைக்கோ முற்றுப்புள்ளி வைத்திருப்பேன்!" என்று தலையில் அடித்துக் கொண்டு கண்ணீர் சிந்தினார்.

மனிதர்களின் சுக துக்கங்களைக் கண்டு காலம் ஸ்தம்பித்து நின்று விடுகிறதா! காலதேவன் தன் அம்பறாத் தூணியிலிருந்து நாட்கள், மாதங்கள் என்ற அம்புகளை எய்து கொண்டே இருந்தான். சில அம்புகள் மலர் மாரி பொழிந்தன. வேறு சில நெருப்பைக் கக்கின. காமு அம்மாள் முற்றும் குணமடையவில்லை. ஆனால் முன்பிருந்த உக்கிரமும் ஆவேசமும் குறைந்து தனக்குத்தானே பேசிக் கொள்வதும் முணுமுணுப்பதுமாக இருந்தாள். ஆச்சரியப் படத்தக்கவாறு சில சமயங்களில் சித்த சுவாதீனத்துடன் நடந்து கொள்வாள். சரி. அவள் முற்றும் குணமாகி விட்டாள் என்று கிருஷ்ண சாஸ்திரி கருதிச் சந்தோஷப்படும் போது தனக்குத் தானே பேசிக்கொள்வாள்.

காமு அம்மாள் புத்தி சுவாதீனத்துடன் நடந்து கொண்ட சமயங்களில், அவளுடைய மனத்தில் ராஜு இன்னும் உயிரோடுதான் இருக்கிறான், ஒரு நாள் திரும்பி வந்து விடுவான் என்று நம்பிக்கை யுண்டாக்கும் வண்ணம் அவனிடமிருந்து ரகசியமாக வந்தமாதிரி சில கற்பனைக் கடிதங்களை வாசித்துக் காண்பிப்பார் கிருஷ்ண சாஸ்திரி.

"இதோ பார் காமு! இதை யாரிடமும் சொல்லாதே. இப்பொழுதுதான், பிச்சைக்காரன் மாதிரி நம் வீட்டுக்குள் வந்த ஒருவன், ராஜு நமக்கு எழுதிய கடிதத்தைக் கொடுத்து விட்டுப் போனான். வாசிக்கிறேன் கேள்...'அப்பா அம்மாவுக்கு அநேக நமஸ்காரம். நான் க்ஷேமம். நீங்கள் என்னைப் பார்க்கா விட்டாலும் நான் உங்களைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். மாறு வேஷம் பூண்டு எவ்வளவோ தடவை நம் வீட்டெதிரே நின்றிருக்கிறேன். உங்களைக் கண்ணாரக் கண்டிருக்கிறேன். அப்படியே உங்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற வேண்டும் என்று துடிப்பேன். ஆனால் அத்தகைய செய்கையினால் நான் யாரென்று வெளிப்பட்டு, எனக்கு ஆபத்து சேர்ந்து விடுமே என்ற எண்ணத்தால் என் ஆசையைக் கட்டுப் படுத்தி வைத்திருக்கிறேன். வெகு சீக்கிரம் உங்களைச் சந்திப்பேன்" என்று தம் சாமர்த்தியத்தை யெல்லாம் ஒன்று சேர்த்துக் கதைப்பார்.

"ஹா, என் ராஜு உயிரோடு இருக்கிறானா, அதுவே போதும்!" என்று காமு அம்மாள் ஆச்சரியத்துடன் சொல்லுவாள். மெல்ல மெல்ல ராஜு இறக்கவில்லை, ஒரு நாள் திரும்பி விடுவான் என்று அவள் மனம் நினைக்கத் தொடங்கியது. திடீரெனச் சில நாட்கள், விடியற் காலையிலேயே எழுந்து "என்னா! ராஜு ரயிலில் வந்து இறங்குவது போலக் கனவு கண்டேன். ஸ்டேஷனுக்குப் போய் அவனை அழைத்து வாருங்கள். விடியற் காலையில் கனவு கண்டால் பலிக்கும் என்பார்கள்" என்று தன் கணவனுக்கு உத்தரவிடுவாள். கிருஷ்ணசாஸ்திரி

சிவனே யென்று, நடுக்கும் குளிரில் கொஞ்ச தூரம் போய்விட்டுச் சற்று நேரம் கழித்துவிட்டு ஒரு கற்பனையுடன் வீடு சேருவார். "ஏன் காமு, நீ சொன்னது ரொம்ப சரி. இன்றைக்கு அவன் ரயிலில் வரவேண்டும் என்றுதான் இருந்தானாம். ஏதோ காரணத்தால் வர முடியவில்லையாம். அவன் சிநேகிதன் ஒருவனிடம் ரகசியமாகச் சொல்லி அனுப்பினான்" என்பது போன்ற புளுகுகளை, தலைசிறந்த எழுத்தாளரும் வெட்கப்படும்படி உண்மைபோல் உரைப்பார். அவளும் சமாதானம் அடைவாள்.

ஒரு நாள், காமு பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்து விட்டாள். "என்ன, ராஜு வருகிறேன், வருகிறேன் என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறானே. ஆனால் வரவேயில்லையே! அவன் எங்கிருக்கிறான்!" என்று கேட்டாள். ஏதோ யோசனையில் மூழ்கியிருந்த கிருஷ்ண சாஸ்திரி, "ராஜு இப்போது மதுரையில் இருக்கிறான்" என்று சட்டென யோசியாமல் சொல்லிவிட்டார். உடனே காமு அம்மாள் அதைப் பிடித்துக் கொண்டு விட்டாள்.

"அப்படியானால், நாம் இருவரும் மதுரைக்கு இன்றைக்கே கிளம்ப வேண்டும். ராஜுவை உடனே பார்த்தால்தான் ஆச்சு!" என்று கட்டளையிட்டு விட்டு, மூட்டை கட்டுவதற்கும் ஆரம்பித்து விட்டாள்.

கிருஷ்ண சாஸ்திரி தம் பிழையை உணர்ந்தார். என்ன செய்வது என்றறியாமல் தலையைச் சொறிந்து கொண்டார். தற்செயலாக அவர் கையில் இருந்த பத்திரிகையின் விளம்பரமொன்று அவர் கண்களைக் கவர்ந்தது.— "புத்தி சுவாதீனம் இழந்தவர்களைக் குணமாக்க, மதுரையில் இருக்கும் நாகரத்தின கனபாடிகளை இன்றே காணுங்கள். சமஸ்தானபதிகளிடமும் மந்திரிகளிடமும் நற்சாட்சிப் பத்திரங்கள், பதக்கங்கள் பெற்றவர். இன்றே சந்தித்து உங்கள் கவலையை ஒழியுங்கள். அவரது விலாசம்: 999—சாலை, மதுரை" என்ற வாக்கியங்கள் அவர் மனதைக் குளிரச் செய்தன.

'அப்பாடி! எப்படியாவது நாகரத்தின கனபாடிகளிடம் காமு அம்மாளைக் காட்டிக் குணப்படுத்தி விட்டால், தம் கவலைகளில் ஒன்று தீர்ந்துவிடும்' என்று கிருஷ்ண சாஸ்திரி பெருமூச்செறிந்தார். மதுரை செல்ல ஆயத்தமானார். தெய்வமே தோன்றி வழிகாட்டியது என்று நினைத்த அவருக்கு, விதி அவருக்கென வகுத்திருந்த மற்றொரு பாதை கண்ணில் படாதது இயற்கைதானே!

......ரயிலைக் கண்டவுடன் காமு அம்மாள் சிறு குழந்தையைப் போல் குதூகலமடைந்து, வண்டியில் ஏறிக்கொண்டாள். அவளுடைய முகம் பிரகாசம் அடைந்திருந்தது. அவள் மனதில்தான் என்னென்ன நம்பிக்கைகள், எண்ணங்கள் சுழன்றனவோ, யாருக்குத் தெரியும்!

ரயில் புறப்பட்டது. ஜன்னல் வழியே காமு அம்மாள் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். கிருஷ்ண சாஸ்திரியின் எண்ணம் முழுவதும் மதுரை வைத்தியரிடத்தில் லயித்திருந்தது. தம் வாழ்க்கைத் துணைவியின் மனக் கலக்கத்தைப் போக்குவதிலேயே அவர் கவனம் சென்றது. இரவில், காமு அம்மாள் கண் அயர்ந்தாள்.






''லொடக், லொடக், லொடக், லொடக்!'' என்று ரயில் அசைந்தாடிக் கொண்டு போய்க் கொண்டிருந்தது. அச் சத்தத்தால் தாலாட்டப்பட்டுக் கிருஷ்ண சாஸ்திரியும் கண்ணயர்ந்தார்.

கனவில், சாஸ்திரியார் தம் மனைவியைக் குணப்படுத்தி விட்டது போலக் கண்டார். மெதுவாக அசைந்தாடிக் கொண்டு சென்ற ரயில், வேகமாக ஆடவே, திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். மறு நிமிஷம் அவர்களிருந்த வண்டி தண்டவாளத்தை விட்டு இறங்கிக் கீழே சாய்ந்தது. கிருஷ்ண சாஸ்திரி மடேர் என்று கீழே விழுந்தார். பலத்த ஊமைக் காயம் பட்டும் பொருட்படுத்தாமல் தன் மனைவிக்கு என்ன ஆபத்தோ என்று அவளிடம் விரைந்தார்.

தலையில் அவளுக்குச் சரியான காயம். ரத்தம் 'கடகட'வென்று வழிந்து கொண்டிருந்தது. அதிர்ச்சியினால் அவள் மூர்ச்சையடைந்திருந்தாள். சட்டென்று ரத்தம் நிற்பதற்கு முதற் சிகிச்சை செய்தார். பிறகு தம் மேல் துண்டைக் கிழித்து, காயத்துக்குக் கட்டினார். சிரமப்பட்டு அவளைத் தூக்கிக் கொண்டு மெதுவாகக் கவிழ்ந்திருந்த வண்டியிலிருந்து வெளியே வந்தார்.

அவர் அங்கே கண்ட காட்சி அவரை மிகவும் கலக்கி விட்டது. இன்ஜின் தரையில் அழுந்திக் கிடந்தது. பல ரயில் பெட்டிகள் சுக்கல் சுக்கலாகச் சிதறிக் கிடந்தன. குற்றுயிரும் குலை உயிருமாக ஜனங்கள் கீழே விழுந்து கிடந்தார்கள். நல்ல வேளையாகத் தமக்கும் தம் மனைவிக்கும் அத்தகைய ஆபத்து ஒன்றும் நேரிடவில்லை. அது வரையில் பகவான் காப்பாற்றினார்.

உதவிக்கு எங்கே போவது! கடுங்காடு. அர்த்த ராத்திரி. சந்திரனும் மேகத்துள் மறைந்திருந்தது. மெதுவாக காமு அம்மாளைப் புல் தரையில் படுக்க வைத்துவிட்டுத் தலை நிமிர்ந்தார்.

''அம்மா! அப்பா!'' என்று சற்று தூரத்திலிருந்து யாரோ கூப்பிடவே திரும்பிப் பார்த்தார். தம் கண்களை அவராலேயே நம்ப முடியவில்லை. அங்கிருந்து தம் அருமை மகன் ராஜு ஓடி வருவதைக் கண்டார்! வந்த மறுநிமிடம் அவன் காமு அம்மாளின் கால்களைப் பிடித்துக் கொண்டு விம்மி விம்மி அழ ஆரம்பித்தான்.

''அம்மா! அம்மா! இதோ ராஜு வந்துவிட்டேன். எழுந்திரும்மா, சீக்கிரம் எழுந்திரும்மா!'' என்று தீனமாகக் கதறினான். காமு அம்மாள் கண்ணைத் திறக்கவில்லை. ஏதோ பயங்கர எண்ணம் அவன் நினைவை ஆக்கிரமிக்கவே, பரிதாபத்துடன் தன் தந்தையைப் பார்த்தான்.

''அப்பா! அம்மா வந்து, வந்து......''

''அம்மாவுக்கு ஒன்றுமில்லை. காயம் பலமாகப் பட்டிருக்கிறது. உயிருக்கு ஹானி இல்லை. ரத்தம் நிறைய வெளியேறி விட்டதால் பலவீனமாக இருக்கிறாள். அத்துடன் அதிர்ச்சி வேறு.''

தந்தையின் சொல் தனயனைத் தேற்றியது. குழ்நிலையைச் சிறிது கண்ணோட்டம் விட்டான்.

''என்னடா ராஜு, இது! ரயிலைக் கவிழ்த்து உயிர்ச்சேதம் விளைவிப்பதுதானா உன் லட்சியம்! ஏழை மக்களுக்கு நீ உதவுவது இவ்வாறுதானா! உன்னைப் பெற்று வளர்த்த பெற்றோரை எமனுலகு அனுப்புவதுதான் உன் லட்சியத்தின் சிகரமா!'' என்று படபட வென்று பொரிந்து தள்ளினார் கிருஷ்ண சாஸ்திரி.

''அப்பா! இன்னமும் சொல்லுங்கள், கேட்டுக் கொள்கிறேன். ரயிலைக் கவிழ்ப்பது என் லட்சியமல்ல. பொது உடைமைக் கட்சியின் லட்சியமும் அல்ல. பொது உடைமைக் கட்சிப் போர்வை போர்த்து உலவும் சில பயங்கரவாதிகளின் செயலே இது. எங்கள் கட்சியில் பெரும்பாலோர் காந்திமகானின் அஹிம்சா மார்க்கத்தைப் பின்பற்றியவர்கள், நானும் அப் பிரிவைச் சேர்ந்தவனே. ஆயினும் பயங்கரவாதிகள் சிலரும் எங்கள் கட்சியில், மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல், இருக்கிறார்கள். எங்கள் உபதேசம் அவர்கள் செவியில் ஏற மறுத்துவிட்டது. அதன் விளைவே இது போன்ற உயிர்ச்சேதமும் பெரும் பொருள் நஷ்டமும்...இன்று கூட இந்த ரயிலைக் கவிழ்க்க அவர்கள் ஆலோசனை கூறியபோது, நாங்கள், அதாவது பெரும்பாலோர், அதனை நிராகரித்தோம். எங்கள் வழிக்கு வருவதுபோல் பாசாங்கு காட்டிவிட்டு, நாங்கள் எதிர் பாராவிதத்தில், இந்த ரயிலைக் கவிழ்த்துவிட்டனர். தற்செயலாக இப் பக்கம் வந்த நான், விபத்தைக் கண்டு மனமுருகி ஓடிவந்தேன். உங்களையும் கண்டேன்'' என்று ராஜு விளக்கி விட்டு, ''ஆமாம், நீங்கள் ஏன் இந்த ரயிலில் வந்தீர்கள்!'' என்று கேட்டான்.

கிருஷ்ண சாஸ்திரி சுருக்கமாகக் காமு அம்மாளின் மனோவியாதியைப் பற்றிச் சொன்னார். அதைக் கேட்ட ராஜு மனம் நெகிழ்ந்து, ''என் லட்சியத்தால் உங்களுக்கு எவ்வளவு துன்பம் சம்பவித்து விட்டது! நானும், லட்சியத்தில் வெற்றி பெறாமல், தோல்வியே அடைந்திருக்கிறேன். இனிமேல் கட்சிப் பற்றற்று, பொது ஜன ஊழியம் செய்வதெனத் தீர்மானித்து விட்டேன். அதற்கு உங்கள் இருவரின் ஆசியையும் கோருகிறேன்'' என்று சொன்னான்.


காமு அம்மாள் அசைந்து கொடுக்கவே, இருவரும் அவள் அருகில் சென்றனர். கண் திறந்த அவள் தன் மகனைக் கண்டவுடன் ''ராஜுவா! ஸ்டேஷனுக்கு நீயே வந்து விட்டாயா!'' என்று கனிவுடன் கேட்டாள்.

உணர்ச்சிவசப்பட்டவனாய் ராஜு தன் தாயைப் பார்த்து, ''ஆமாம் அம்மா. நானே வந்து விட்டேன். இனிமேல் உங்களை விட்டு எங்கும் போக மாட்டேன்'' என்றான்.

அதிர்ச்சியால் மனக் கலக்கம் நீங்கப் பெற்ற காமு அம்மாளின் முகத்தைப் போல், மேகத்தினின்று வெளிவந்த சந்திரன் பிரகாசித்து, தன்னுடைய அமுத மயமான கிரணங்களை அவர்கள் மூவர் மீதும் பொழிந்தான்.


அல்லிக்குளத்தின்...!
அருந் தென்றல்!
CHARI
Phoenix
போனிக்ஸ் விசிறிகள்
EWI
RM.S. & CO. LTD., 16. BROADWAY. MADRAS-1.
BRANCHES: 5. WEST TOWER ST., MATHURAI ... 10/75. PARK RD., VIJAYAWADA-1.

# அவர்கள் வளரும் பருவத்தில்...




## ஞாபகமிருக்கட்டும்

உபரி விடமின்களுடன் கூடிய பிரிட்டானியா பிஸ்கட்டுகள் குழந்தைகளால் விரும்பப்படுகின்றன. அவர்களுக்கு வேண்டிய விசேஷ போஷாக்கைத்தரும் இதையே வாங்கிக்கொடுங்கள்.

ஜூ மற்றும் ஸர்க்கஸ் வகைகள் குழந்தைகளுக்கென்றே ஏற்பட்டவை.

சிறந்த பிஸ்கோத்துகள்

# பிரிட்டானியா

FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

BBX 2TM




அம்மா ரொம்பவும் பரிவுடன் சொல்லிக் கொண்டிருந்தாள் :

"இந்தப் பசங்கள் தான் எங்கேயோ கிளம்பிப் போய் விட்டார்களே, அந்த 'ஸபா' டிக்கட் அநாதை போல் கிடக்கிறது. நீதான் போய்விட்டு வாயேன் லலிதா!"

இதற்கு லலிதா அசுவாரசியமாகப் பதில் அளித்தாள்.

"என்னம்மா கச்சேரி வேண்டிக் கிடக்கிறது! எனக்கு அந்த ஆசையெல்லாம் போய் அதிக நாளாகிறது. நீ மட்டும் வேண்டுமானால் போகிறது தானே!" என்று அம்மாவிடம் சொன்னாள் அவள். தாய்க்கு அவள் குரலில் ஒலித்த வேதனையைப் புரிந்து கொள்ளத் தெரியாமல் இல்லை. அவள் லலிதாவின் பேச்சைக் கண்டு வியந்தாள். முன்பெல்லாம் சினிமா டிக்கெட் வீட்டுக்கு வந்தவுடன் லலிதாவின் உத்தரவின்றி அதை யாரும் தொடக் கூடாது. அந்தத் துடிதுடிப்பும் ரஸனையும் எங்கேதான் மாயமாக மறைந்ததோ? மறைந்ததா?

லலிதா அந்த ஆர்வத்தை மறைத்துக் கொண்டு விட்டாள் என்று அம்மா உணராமல் இல்லை. லலிதாவுக்குச் சங்கீதத்தில் இருந்த தேர்ச்சிதான் அளவிடக் கூடியதா? அவள் பாடினால் அலுக்காமல் நாள் முழுவதும் கேட்டுக் கொண்டிருக்கலாம். எங்கே அத்தனை சங்கீதமும்?

புகுந்த இடத்தில் லலிதா பாடுவதையோ, யாரும் தடை செய்ய வில்லை. ஆயினும் அவளுக்குத்தான் நேரம் இருப்பதில்லை. அநுசரணையும், அன்பும் கொண்ட அழகுக் கணவனுக்குச் சிசுருஷை, மாமியார் மாமனாருக்குப் பணிவிடை, 'மன்னி மன்னி' என்று வாய் ஓயாமல் கூறிக் கொண்டு வளைய வரும் இளம் மைத்துனன், மைத்துனிமார்களுக்கு விசேஷ பராமரிப்பு, முதலிய குடும்ப விஷயங்களுக்கு அப்பால்தான் அவள் சங்கீத சாதகம் இருந்தது. அந்த அரைகுறை சாதகத்தைக் [illegible]க் கொள்வதை விடப் புக்ககத்தில் பொறுப்புகளை ஏற்று நடத்தும் லட்சிய மருமகளாகவே அவள் விளங்க எண்ணினாள்.

கலியாணத்துக்கு முன்பு, லலிதாவின் அப்பா அவளுக்கு எட்டு வருஷம் சங்கீத சிட்சை சொல்லி வைத்திருந்தார்.

அவளுக்கிருந்த சங்கீத ஆர்வத்தையும், ஞானத்தையும் கண்டு அவள் பெற்றோர் இதே சங்கீத ரஸனை புகுந்த இடத்திலும் குறையாமல் இருக்கக் கூடிய சம்பந்தம் கிடைக்க வேண்டுமே என்றுகூடக் கவலைப் பட்டனர். கவலை மாத்திரம் அப்படியே தங்கித்தான் போய்விட்டது.

அவ்வப்போது பிறந்தகம் வரும் போது அம்மா கெஞ்சுவாள். நீண்ட நேர மௌனத்துக்குப் பின் லலிதா தன் அம்மாவின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியே பாடுவாள். தாய் மனத்திற்கு இதில் ஒரு ஆறுதல். இந்தத் தடவை அந்த ஆறுதலைக்கூட வைக்கவில்லை லலிதா. குழந்தை நல்ல கச்சேரியாவது கேட்கட்டுமே என்று ஸபாவுக்குச் செல்ல அவளை நச்சரித்தாள். அம்மாவின் கட்சி ஜெயித்து விட்டது. லலிதா கச்சேரிக்குக் கிளம்பினாள். அந்த ஸபாவுக்கு அவள் ஆறு வருஷம் கழித்து முதன் முறையாக இப்போதுதான் கிளம்பினாள்.

லலிதாவுக்குக் கல்யாணமாகி ஆறு வருஷங்கள் கழிந்து விட்ட பிறகும் அவள் வாழ்க்கையில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டு விட்டதைப் போல அந்த ஊர் ஸங்கீத சபையின் வளர்ச்சியில் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. இன்னமும் அந்தப் பழைய பள்ளிக்கூடக் கட்டிட ஹாலில்தான் கச்சேரிகள் நடந்து வந்தன. சபையின் நிர்வாகிகள் சிரத்தை குறையாமல், வருவாய் அதிகமில்லாத போதும் சங்கீத உணர்ச்சியைக் கை விட்டுவிட வில்லை.

லலிதா சபையினுள் நுழைந்து மேடைக்கருகே உள்ள பெண்கள் பகுதியில் அமர்ந்த போது. அவளை இனம் கண்டு கொண்டு சில நாரீமணிகள் புன்முறுவல் செய்தனர். லலிதாவுக்குப் பெருமையாக இருந்தது. ஹாலில் கூட்டம் பெரும் அளவில் சங்கீதம் கேட்கத் திரண்டிருந்தது. அன்றைய நிகழ்ச்சியில் கூட லலிதாவுக்கு எல்லாம் பிடித்தம்தான். தாரா, சரஸ்வதி சகோதரிகள் பாட்டு என்றாலே லலிதாவுக்கு உயிர். சங்கீத சகோதரிகள் மேடை மீது அமர்ந்து, அந்தச் சபையின் கான வளர்ச்சிக்குச் சாட்சியாக விளங்கும் உயரே உள்ள தியாகப் பிரும்மத்தின் படத்தை வணங்கி விட்டு, சுருதி சுத்தமாக இழையும் மோகனக் குரல்களில் கச்சேரியை ஆரம்பித்து வைத்

தனர். லலிதா மெய்மறந்து பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

கல்யாணி ராக ஆலாபனையின் மிகச் சுவாரஸ்யமான கட்டத்தில், லலிதாவின் பார்வை ஒரு முறை சபையினரின் மேல் விழுந்தது. யதேச்சையாக அவள் திருஷ்டி சற்றுத் தொலைவிலுள்ள வெளித் தூண் அருகில் விழுந்தது. அங்கே அவன்தான் நின்றுகொண்டு நாதவெள்ளத்தில் சிந்தையைப் பறி கொடுத்தவனாக மெய்மறந்து நின்று கொண்டிருந்தான்.

நிச்சயமாக 'அவன்தான்' என்று தீர்மானித்துக் கொண்டாள் லலிதா. சுருள்சுருளாக அமைந்த அந்தக் கிராப்புத் தலை; ஜிப்பாவுக்கே பெருமை தரும் வகையில், தூய வெள்ளை மல் ஜிப்பா அணிந்து கொண்டு நின்ற அவனுடைய அந்தக் கம்பீரத் தோற்றம்; நல்ல சங்கீதத்தைக் கேட்பதனால் அகம் மகிழ்ந்து, அந்த மலர்ச்சியில் பொலிவுற்று விளங்கும் களையான அந்த முகம்; இவ்வளவையும் ஆறு வருஷங்களுக்குப் பிறகு லலிதா பார்க்கையில் அந்த உருவம் அவனையன்றி வேறு யாராகவும் இருக்க முடியாது என்று அவளுக்குத் தோன்றியது.

அவனை ஏன் பார்த்தோம் என்று ஒரு கணம் லலிதாவின் உள்ளம் தடுமாறியது. அவனைப் பற்றிய சிந்தனைகளுக்கே மனத்தில் இடம் அளிக்க விரும்பவில்லை அவள். கட்டாயமாக அவள் நினைவுகளை ஒதுக்க முயலுகையில், திரும்பத் திரும்ப வரும் அலைகளைப் போல, மனத்தில் அந்தச் சம்பவங்கள் இடைவிடாது இழைத்தன.

லலிதாவின் தகப்பனார் அப்போது அவள் விவாக விஷயத்தில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருந்தார். வீட்டில் கட்டுக் கட்டாக ஜாதகங்கள் குவிந்திருந்தன. லலிதாவின் அப்பாவுக்குச் சோதிடத்தில் அபார நம்பிக்கை. அம்மா கூடப் பரிகாசம் செய்வாள்.

“ஜாதகங்களை இப்படி வைத்துக்கொண்டு மாப்பிள்ளையைச் சல்லடை போட்டுத் தேர்ந்தெடுப்பதற்குள் லலிதா கிழவியாகக்கூட ஆகிவிடுவாள் போல இருக்கே!” என்பாள். ஆனால் அவள் அம்மா ஜோஸ்யம் பொய் என்று சொன்னவளில்லை. ஆயினும் ஜாதகங்களை அணு அணுவாக ஆராய்ச்சி செய்யும் விஷயம் அவளுக்குப் பிடிக்காது. லலிதாவுக்கு அப்பாவின் செய்கை சிரிப்பைத்தான் உண்டு பண்ணும். அவள் உள்ளத்தில் அப்போது ஜாதகக் கிரகங்களின் ஆட்சிக்கு இடம் இருக்கவில்லை.

பருவத்தின் பூரிப்பில் உடல் புது எழிலுடன் விகசிக்கும் பிராயம் அது சங்கீத நினைவும், எதிர்கால இல்லற வாழ்க்கை அவள் ரஸனைக்கு ஏற்றதாக அமைய வேண்டுமே என்ற எண்ணமும்தான் லலிதாவின் மனத்தில் சதா குடிகொண்டிருந்தன.

அவள் நல்ல அழகி. நிலவு போன்ற முக லாவண்யமும், பட்டுப் போன்ற மேனியும், முத்துப் பற்களும், படபடவென்று அடித்துக் கொள்ளும் இமைகளின் கீழ் அமைந்த அழகிய கண்களும் கொண்டு எழிலரசியாக இருந்தாள் அவள். வறுமையின் வாடை படாத செல்லப் பெண் அவள். போதாக் குறைக்கு அவளுக்கு நல்ல சங்கீத ஞானம்; மிதமான படிப்பு.

கடைசியில் அவள் அப்பா ஜாதக மலைக் குவியல்களில் ஒன்றைப் பொறுக்கி எடுத்தார். யார் செய்த புண்ணியமோ, அதுவும் உள்ளூர் வரன்தான். பையன் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்று, கண்ணியமான உத்தியோகத்தில் இருந்தான். நல்ல குடும்பம். லலிதாவின் அப்பா ஜாதக மூலமாகவும், நேரிடையாகவும் விசாரித்து அந்த இடத்தை லலிதாவுக்கு முடித்து விடுவதற்குத் தீர்மானித்திருந்தார்.



ஒரு நாளைக்குப் பெண் பார்க்கப் பையனும் வந்து சேர்ந்தான். லலிதாவுக்கு அது புது அனுபவமாக இருந்தது. இனம் தெரியாத படபடப்பில் அவள் உள்ளம் உழன்று கொண்டிருந்தது.

அன்று வீடு முழுவதும் உற்சாகத்தில் ஆழ்ந்து கிடந்தது. பெண் பார்க்க வருகிற இளைஞனும், அவன் வீட்டாரும் வந்து விட்டனர். சம்பிரதாய உபசரிப்புகள் பலமாக நடந்தேறின. லலிதா பொங்கும் எழிலுடன் அடக்கமாக நமஸ்கரித்து எழுந்திருக்கும்போது, தனக்கு வரப்போகும் கணவனை ஒரு முறை பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற நினைவில், ஒரு கணம் அவள் திருஷ்டியை அந்த இளைஞனின் மேல் படர விட்டாள். அவளுக்கு ஏற்பட்ட அதிசயம் வார்த்தைகளில் அடங்காது.


லலிதா அவனை ஏற்கெனவேயே பலமுறை பார்த்திருக்கிறாள் என்பதை உணர்ந்து கொண்டாள். அவள் பாக்கியசாலிதான்.

சங்கீத சபாவுக்குக் கச்சேரி கேட்கச் செல்லும்போதெல்லாம் அவனைக் கவனிக்கத் தவறியதில்லை அவள். ரஸிக மகா சபையின் முதல் வரிசையில்தான் அவன் எப்போதும் அமர்ந்திருப்பது வழக்கம்.

நல்ல ரஸிகன் அவன். வெறும் ரஸிகனாக மட்டும் இல்லாமல், கவர்ச்சி பொருந்திய தோற்றமும் உடையவனாக அவன் விளங்கினான். தன்னைப் போல அவனும் சங்கீதத்தில் மிகுந்த ஈடுபாடு உடையவனாக இருக்கிறானே என்பதற்காகவாவது சபாவின் நிகழ்ச்சிகளின்போது ஆர்வத்துடன் லலிதா அவனை உற்று நோக்கியிருக்கிறாள். அவனிடம் அவளுக்கு நல்ல மதிப்பு இருந்தது.

இளைஞன் அன்று அவள் கானத்தை மிகவும் ரஸித்துக் கேட்டான். தனக்கு வரப்போகிறவளின் சங்கீதத் தேர்ச்சியை நன்கு பரீட்சித்துப் பார்த்து விட வேண்டும் என்ற நினைப்பில், தனக்குப் பிடித்த பாடல்களையெல்லாம் அவளைச் சுவாதீனமாகப் பாடச் சொல்லி அனுபவித்தான்.

லலிதா மனம் விட்டுப் பாடினாள். பையனின் பெற்றோரும் மிக மகிழ்ச்சி கொண்டனர். லௌகீக விஷயங்கள் திருப்திகரமாகப் பேசப்பட்டு முடிவு செய்யப்பட்டன. லலிதாவின் மனம் ஆனந்தத்தால் துள்ளியது. இந்தச் சம்பந்தம் அவளுக்கு மிகவும் பிடித்திருந்தது. முகூர்த்தத்துக்கு நாள் வைக்க வேண்டியதுதான்.



அந்தச் சமயம் ஊருக்கு ஒரு பிரபல ஜோதிடர் வந்திருந்தார். அகில இந்தியப் புகழ் கொண்ட அவரைக் காணவும், அவர் மூலமாகத் தங்கள் எதிர்காலத்தைத் தெரிந்து கொள்ளவும் ஜனங்கள் விரைந்தனர். லலிதாவின் அப்பாவுக்கு அந்தப் பிரபல ஜோசியரிடம், தன் மகளின் ஜாதகத்தையும் மாப்பிள்ளையாக வரப்போகிறவனின் ஜாதகத்தையும் கொண்டு போய்க் காட்டி ஆசி பெறவேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று.

பிரபல ஜோசியரின் வாக்கில் என்ன சக்திதான் இருந்ததோ, அவர் வெகு நேரம் கணக்குகள் முதலியவை போட்டு, ஜாதகங்கள் அவ்வளவாகப் பொருந்தவில்லை என்று கூறிவிட்டார். அவர் அப்படிச் சொன்ன பிறகு லலிதாவின் அப்பாவுக்கு இந்தக் கலியாணத்தில் உற்சாகமில்லாமல் போய் விவாகம் தடைப்பட்டு விட்டது.

லலிதா அதிர்ச்சியடைந்து போனாள். அவள் மனத்தைப் பயங்கர இருள் கப்பிக் கொண்டது. எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடன் அவள் கட்டியிருந்த ஆசைக் கோட்டைகள் சரிந்து போய்விட்டன. எனினும் காலம் அவள் மன இருளைப் போக்காமல் இல்லை.

சங்கரன் அவளுக்கு மணாளனாக வந்து அவள் கரம் பற்றி அக்னி சாட்சியாக ஏற்றுக் கொண்டபோது, அவள்

குதூகலமாகவே இருந்தாள். சங்கரன் அவளுக்குப் பொருத்தமான கணவன். அவன் அழகு, படிப்பு, வகிக்கும் உத்தியோகம் எல்லாம் லலிதாவுக்குப் பெருமை தரக்கூடிய விஷயங்களாகவே இருந்தன. ஆனால்...?

சங்கரனுக்குச் சங்கீதத்தில் அவ்வளவாக ஈடுபாடே கிடையாது. இந்த அம்சம்தான் லலிதாவின் மனத்துக்கு வேதனையை அளித்தது. இந்த வேதனை கூடக் கொஞ்ச நாட்களுக்குத்தான். சங்கரனுடைய அன்பில் அவள் திணறிப்போய் வேறு எந்தக் குறையையும் பற்றி நினைக்காத அளவுக்கு, அவனிடம் லயித்துப் போய்விட்டாள் அவர்களுடைய மண வாழ்க்கை எவ்வித சலனமுமின்றிச் சென்று கொண்டிருந்தது.

★

லலிதாவின் நினைவுகள் திடீரென்று விடுபட்டன. சங்கீத சகோதரிகள் ஆனந்த பைரவியில் ஜாவளி ஒன்றைப் பாடிக் கொண்டிருந்தனர். அதில் அவள் கவனம் செலுத்த முயன்றாள். மீண்டும் மீண்டும் அந்த ரஸிகனைப் பற்றிய ஞாபகம் அவளுக்கு வந்து கொண்டேயிருந்தது.

கச்சேரி முடிய இன்னும் பத்து நிமிஷங்கள் தான் இருந்தன. பாட வேண்டிய துக்கடாக்கள்கூட அநேகமாய்த் தீர்ந்து போயின. கும்பலுக்கு முன் சென்றுவிட எண்ணம் கொண்டு லலிதா கிளம்பினாள். அவளுக்குத் தாகமாக இருந்தது. வெளியே செல்லும் வாசலுக்கு அருகில் குடி தண்ணீர் அறை இருந்தது. உள்ளே போய்த் தண்ணீர் குடித்து விட்டுத் திரும்ப யத்தனித்த போது, அறையின் வெளியே சுவரோரத்தில் நின்று கொண்டு இருவர் மெல்லிய குரலில் பேசிக் கொண்டிருந்தனர். லலிதாவின் செவிகளில் அந்தப் பேச்சு நன்கு விழுந்தது.

"புறப்படலாமா, விசாலம்! பாவம், எனக்காக வேண்டி உனக்கு அவ்வளவாக ஈடுபாடில்லாத கச்சேரிக்கு அழைத்து வந்து விட்டேன்! கும்பலுக்கு முன்னாலே போய்விடலாமே என்றுதான் கிளம்பினேன்" என்று ஆண் குரல் சொல்லியது.

லலிதா ஸ்தம்பித்துப் போய் நின்றாள். அவ்வறையிலிருந்து, பேசும் குரலை அவள் தெரிந்து கொண்டாள். அந்த ரஸிகன் தான் பேசிக் கொண்டிருந்தான். பக்கத்தில் இருந்தது அவன் மனைவி என்று ஊகித்துக் கொண்டாள் அவள். சற்று நேரம் அங்கு நின்று அவர்கள் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர். பெண் குரல் இப்போது கேட்டது.

"உங்களை ஒன்று கேட்க வேண்டும் என்று நினைத்தேன். இன்றையக் கச்சேரியில் வெகு அழகாக ஒரு பெண் வந்திருந்தாள். அவள் கட்டிக் கொண்டிருந்த அந்தப் புடவைமாதிரி எனக்குக் கூட ஒன்று வாங்கிக் கொள்ள வேண்டும் என்று ஆசையாயிருந்தது."

"கருப்புப் பட்டில், நக்ஷத்திரப் பூபோட்ட புடவைதானே?"

"ஓ! நீங்களும் அவளைப் பார்த்தீர்களா? ரொம்ப அழகாக இருந்தாள் அவள்."

"விசாலம்! உனக்கு ஒரு ஆச்சரியமான செய்தி சொல்லப் போகிறேன். எனக்கு முதலிலே அந்தப் பெண்ணைக் கொடுக்கிறதாக இருந்தது. நான்கூட உன்னிடம் சொல்லியிருக்கிறேனே, பிரமாத அழகும், வெகுநன்றாகப் பாடக் கூடிய ஒருத்தியை நான் 'பெண் பார்த்து விட்டு வந்தேன்' என்று......"

"ஹும், இந்தப் பெண்தானா அவள்! சங்கீதத்தில் உங்கள் மாதிரி ரஸனையில்லாத என்னை நீங்கள் கலியாணம் பண்ணிக் கொண்டது என் பாக்கியம்தான். ஆனால் சகல சௌந்தர்யமும் கூடிய ஒரு ரூபவதிக்குக் கிடைக்காத வாய்ப்பு எனக்கு கிடைத்தது!"

"விசாலம்! உலகத்திலேயே தம்பதிகள் அமைகிற விஷயம் மாத்திரம் நம்முடைய அறிவுக்கும் சக்திக்கும் அப்பாற்பட்டது. நமக்கே தெரியாத ஒரு சக்திதான் நம்மைச் சேர்த்து வைக்கிறது. அந்தச் சேர்க்கையின் பிரத்தியட்ச உருவமாக நீ எனக்கு வாய்த்து விட்ட போது, வேறு யாரைப் பற்றியும் — அவள் உன்னைவிட எந்த விதத்தில் மேலாக இருந்தாலும்— நினைக்கக் கூட எனக்கு உரிமை இல்லை. உனக்குச் சங்கீதம் தெரியா விட்டால் என்ன, அதற்காக என் இதய பீடத்தை விட்டு நீ இறங்கிப் போய்விட முடியுமா?"

லலிதாவுக்கு இந்தச் சம்பாஷணையைக் கேட்டதில் உடல் புல்லரித்தது. எவ்வளவு பெரிய தத்துவத்தை அந்த இளைஞன் தன் வாழ்க்கையில் மிக கண்ணியமாகக் கடைப் பிடிக்கிறான் என்று நினைத்துப் பார்க்கையில்.

கச்சேரியிலிருந்து திரும்பி வந்ததிலிருந்து லலிதா மிக உற்சாகமாக இருப்பதாக அம்மா நினைத்தாள். லலிதாவுக்கு, இரவு தூக்கமே வரவில்லை. அவள் கணவனுக்குக் கடிதம் எழுத வேண்டிய முறையை நினைத்துக் கடிதம் எழுத ஆரம்பித்தாள்.

"எனக்கு உங்களை விட்டு விட்டு இருப்பே கொள்ளவில்லை. அப்பாவும் அம்மாவும் காட்டும் பரிவையெல்லாம் விட உங்கள் நினைவுதான் என்னுள் விசுவ ரூபமெடுத்து என்னை ஆட்கொள்கிறது. நான்தான் அங்கு இப்போது வர முடியாத நிலையில் இருக்கிறேன். நீங்களாவது ஒருமுறை வந்து விட்டுச் செல்லுங்களேன்."

எழுதிய கடிதத்தை அவள் திரும்பப் படிக்கையில் அவள் மனத்தில் இதுவரை உணர்ந்தறியாத சாந்தி நிலவியது. மாலையில் சுருதி கலைந்து அபஸ்வரமாக ஒலித்த அவள் இதய வீணையை, மீண்டும் சுருதி சேர்த்து அதில் புது ராகம் ஒன்றின் ஸ்வரங்களை அவள் கணவன் சங்கரன் மீட்டுவதாக ஒரு எண்ணம் அவளைப் பிடித்திருந்தது. வெளியே பால் நிலவின் மோகன சௌந்தரியத்தில் எழும், இதய வீணையின் அந்த மானஸிகமான அமுத ஒலியில் தன் வசமிழந்து போனாள் லலிதா.

# தத்ரூபமான போட்டோ

## படங்களுக்கு

### கேவாபான் 33




பகல் வெளிச்சத்திலும், செயற்கை வெளிச்சத்திலும் இந்த மின்னல் வேக பாங்க்ரோமாடிக் பிலிம் அதிக நேர்த்தியான தெளிவையும், கலர் களைத் தத்ரூபமாகக் இரகிக்கும் தன்மையும் கொண்டது.

சைஸ் : 620 & 120—ரூ. 2/4

### கேவாகுரோம் 30




பகல் வெளிச்சத்திற்கு உகந்த ஆர்தோ குரோமாடிக் பிலிம் நல்ல இரகிக்கும் தன்மை, பிரகாசமான படிகள் பதிவு, விசாலமான தோற்றப் பிடிப்பு, மற்றும் நல்ல தெளிவு வாய்ந்தது.

சைஸ் 620 & 120 ரூ. 2/1



Gevaert

இலவச விளக்கங்களுக்கும் "கேவார்ட்" எக்ஸ்போஷர் கார்டு கேட்டதற்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

**Allied Photographics Limited**

அல்லைட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்

(பேக்கிங் டிபார்ட்மெண்ட்) கஸ்தூர் பில்டிங்ஸ், ஜாம்ஷெட்ஜி டாடா ரோடு, பம்பாய்-1

கிளை ஆபீஸ்கள் : பம்பாய் ● கல்கத்தா ● மதராஸ் ● புது டில்லி

# தேநீர்


## ஒவ்வொரு ஸ்டேஷனிலும்...



ஆண்டுதோறும் இந்திய ரயில் வேக்களில் பிரயாணம் செய்யும் 1247·3 லட்சம் பிரயாணிகளில் அநேகர் பிரயாண அலுப்பை சமாளிக்க தேநீரை அருந்துகின்றனர். தேனீர் பிரயாணத்தின் களைப்பை நீக்கி உல்லாச மூட்டுகிறது.

பரீட்சித்துப் பாருங்கள்!

**... அது உங்களுக்குத் தெம்பூட்டுகிறது**



மத்திய டீ போர்டு வெளியீடு

CTB 17 T


(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஸ்ரீதர மாதவன் என்ன கதறி என்ன! அந்தச் சிலையின் நெஞ்சம் உருகினால்தானே! அது கல்லாகவேதான் நின்றது. ஸ்ரீதரமாதவன் நெடு நேரம் நின்று கதறியும் அது அசையாமற் போகவே, அவன் பித்துப் பிடித்தவன் போலானான். உண்மையில் அவனுக்குப் பைத்தியமே பிடித்து விட்டது. அவன் கடற்கரையிலிருந்து நகரத்துக்குள் கூவிய வண்ணமே ஓடி வந்தான். இளவரசனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதை எண்ணி அரசன் மனமுடைந்து போனான். இளவரசனின் பைத்தியம் தீராத பைத்தியமாக இருந்தது. சிலசமயம் அவன் அழுவான். சில சமயம் சிரிப்பான். சில சமயம் ஆடுவான். சில சமயம் பாடுவான். "பத்மதிலகா ஆடினாள். நான் பார்த்தேன். கடற்கரையிலிருந்த அவளுடைய சிலை உயிர் பெற்று வந்து நாட்டிய மாடியது. நான் பார்த்தேன். அடாடா! ஆஹா!" என்று எப்பொழுதும் பிதற்றிக் கொண்டே இருந்து விட்டு ஒருநாள் அந்தச் சிலைக்குச் சமீபமாகவே வந்து தன் உயிரை விட்டு விட்டான்.

இதுதான் ராமநாதன் எழுதிய நாடகத்தின் கதை. வேதாவின் உருவத்தையும் அவளுடைய நாட்டியத்திலுள்ள அழகையும் கண்டு அவளுக்காகவே அவன் அந்த நாடகத்தை எழுதினான். அவள் தான் பத்மதிலகாவாக நடிக்க வேண்டியவள். அவன் நினைத்தபடி அந்த நாடகத்தில் வேதா நன்றாக நடித்தால் உலகத்தில் அவனுக்கு என்றுமே ஏற்படாத புகழ் ஏற்பட்டு விடும். வாழ்க்கையில் வெற்றியின் சிகரத்தை எட்டிப் பிடிக்கும் கடைசி லட்சியமாக அந்த நாடகத்தைக் கருதினான். கடற்கரையில் சிலைபோல நின்று உயிர் பெற்றெழும் காட்சி இயற்கையாகவும் பிரமிப்பூட்டும் வண்ணமும் இருக்க வேண்டுமென்பது அவன் ஆவல். சிலை உயிர் பெற்று எழுந்து நாட்டியமாடும் போது உடம்பையே பாம்பு போல் வளைத்து வளைத்து ஆடும்படி மிகவும் கடுமையான நாட்டியம் ஒன்றைக் கொடுத்திருந்தான். அந்த நாட்டியத்தை வேதா சிறந்த முறையில் ஆடிக் காட்டுவாள் என்று அவன் நம்பினான். ஆனால் அவன் நம்பிக்கை பாழாகிவிட்டது. நாடக ஒத்திகையில் நூறாயிரம் தரம் சொல்லியும் அவள் அதைப் புரிந்து கொள்ளவில்லை. அவள் புரிந்து கொள்ளாமல் இருந்திருக்க முடியாது. ஆனால் அவளுக்கு அவன் சொல்லியபடி நடிக்க இஷ்டமில்லை என்றுதான் முடிவு கட்ட வேண்டியிருந்தது. அதனால் அவனுக்கு ஏற்பட்ட மன வருத்தமும் வெறுப்பும் எல்லைக் கடங்காததாக இருந்தன.

•      •      •

அவன் ஆழ்ந்த சிந்தனையோடும் மனக் குழப்பத்தோடும் அந்த அறையில் உட்கார்ந்திருந்தான். தன் சொத்து சுதந்திரம் பெண்டு பிள்ளை எல்லாவற்றையும் கண் மூடித்தனமாகச் சூதில் வைத்து இழந்து விட்டவனின் சோகமும் ஆத்திரமும் அவன் முகத்தில் பரவி இருந்தன. அப்பொழுது அவன் இருந்த நிலையில் யாரும் அந்த அறையில் நுழைந்து அவன் கண்ணெதிரில் படக்கூடப் பயப்படுவார்கள். நாளைய தினம் கம்பெனியைக் கலைத்து விடப் போவதாக அவன் எல்லோரிடமும் சொல்லி விட்டான். அப்படிச் செய்ய நினைப்பது சரியா தவறா என்பதைப் பற்றி எல்லாம் அவன் சிந்திக்கவே இல்லை. தன்னை அண்டிப் பிழைக்கிறவர்கள் எக்கதியாவார்கள் என்பது பற்றியும் அவன் கவலைப்படவில்லை. இவ்வளவு பொருள் செலவு செய்தும் இவ்வளவு நாள் பாடுபட்டும் தன் முயற்சி வெற்றியளிக்க வில்லையே என்ற கவலைதான் அவனை வாட்டியது. தன்னுடைய லட்சியம் சித்தியடையாதபோது, தன் கனவு பாழாய்ப் போன போது, உலகமே பிர




ளயத்தில் அழுந்தினாலும் ஒருவனுக்குப் பெருங் கவலை உண்டாகுமா!

அவன் எதிரில் வேதா வந்து நின்றாள். அறையில் அவன் தனிமையில் இருக்கும்போது எதிரில் வந்து நிற்க அவளுக்குத்தான் என்ன துணிவு!




அவன் தலை நிமிர்த்து பார்த்தான். கடுகடுப்பாய் இருந்த அவனுடைய முகத் தோற்றத்தில் வேதாவைப் பார்த்த பின் சிறு மாறுதல் கூட ஏற்படவில்லை. வேடனிடத்தில் தானாக வந்து சரணடையும் மான் குட்டிபோல வேதா பயத்தால் குன்றிப்போய் அவன் எதிரில் நின்றாள்.

அவன் எங்கோ பார்த்துக் கொண்டு, "என்ன!" என்று உறுமினான்.

அவள் துயரம் நிறைந்த குரலில், "எனக்காக கம்பெனியைக் கலைக்க வேண்டாம்" என்றாள்.

"உனக்காகக் கம்பெனியைக் கலைக்க வேண்டாமா! உனக்காகத் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கும்போது கம்பெனியைக் கலைப்பதுதானா பிரமாதம்!"

ராமநாதன் சொல்லிய தற்கொலை என்ற வார்த்தை வேதாவின் உள்ளத்தை நடுங்க வைத்தது. அவன் இத்தகைய விபரீதமான முடிவுக்கு வர என்ன நடந்து விட்டது என்று தான் அவளுக்குப் புரியவில்லை. அவளை அறியாமலேயே விழிகளில் நீர் பெருகியது. அவள் நெஞ்சம் விம்மிய வண்ணம், "நான் நன்றாக நடிக்கவில்லை என்று உங்கள் மனத்துக்குப் பட்டால் என்னை நீக்கிவிட்டு வேறு யாரையாவது போடுங்கள். அதற்காக இத்தகைய விபரீதமான முடிவுகளுக் கெல்லாம் வரவேண்டாம்" என்றாள்.

ராமநாதன் வேதாவைப் பார்த்து ஏளனமாகச் சிரித்து விட்டு, "எனக்குத் தெரியும். உன்னைவிட நன்றாக நடிப்பவர்களை எனக்குத் தெரியும். அவர்களுக்கு அந்த வேடத்தைக் கொடுத்து நடிக்கச் சொல்லவும் தெரியும். ஆனால் அது அவர்களுக்காக எழுதிய நாடகமல்ல. உன்னைத் தவிர வேறு யார் அந்தப் பாத்திரத்தை ஏற்று நடித்தாலும் சோபிக்காது" என்றான்.

"நான் அப்படி நினைக்கவில்லை" என்றாள் வேதா மெதுவாகத் தாழ்ந்த குரலில்.

"உனக்குத் தெரியாது" என்றான் ராமநாதன் பளிச்சென்று.

வேதா ஒன்றும் பதில் பேசவே இல்லை. உண்மையாக அவன் இருதயத்தில் என்ன இருக்கிறது என்று அவளுக்குப் புரியவில்லை. அவள் தயங்கிய வண்ணமே அவன் எதிரில் நின்று கொண்டிருந்தாள். அவன் சிறிது நேரம் ஏதோ குழப்பத்தில் ஆழ்ந்திருப்பவன் போல் இருந்து விட்டு, "இந்த நாடகம் யாருக்காக எழுதினேனென்று உனக்குத் தெரியுமா! உனக்காகத் தான் எழுதினேன். உனக்கு ஒரு நாடகத்தில் முக்கிய வேஷம் கொடுத்து நடிக்கச் செய்ய வேண்டுமென்பதற்காக உன்னையே மனத்தில் வைத்துக் கொண்டு உனக்காகவே எழுதிய நாடகம் இது. உன்னைத் தவிர பத்மலிலகாவின் பாத்திரத்தை ஏற்று நடிக்க வேறு



யாரும் தகுதி இல்லை. ஒன்று நீ இதை உணர்ந்து நன்றாக நடிக்க வேண்டும், இல்லாவிட்டால் நான் எழுதிவைத்திருக்கும் இந்த நாடகத்தை நெருப்பில் போட்டுப் பொசுக்கிவிட வேண்டும்" என்றான் ஆவேசம் கொண்டவனைப் போல.

ராமநாதனின் ஆக்ரோஷமான பேச்சைக் கேட்டு வேதா பயந்து நடுங்கினாள். 'உனக்காகத் தான் நான் இந்த நாடகத்தை எழுதினேன்' என்ற வார்த்தையைக் கேட்டதும் அவள் உடம்பே சிலிர்த்தது. இந்த ரகசியத்தை அந்த விநாடி வரையில் அவள் அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் இல்லாமல் போனது துரதிர்ஷ்டம் தான். அவள் குரல் தழு தழுத்தது. 'எனக்காக நீங்கள் இவ்வளவு பாடு படுவீர்கள் என்று நம்பவே யில்லை...உங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அந்த வேடத்தை ஏற்று எவ்வளவு தூரம் நடிக்க முடியுமோ, அவ்வளவு தானே முடியும்! என்னை மன்னித்துவிடுங்கள்" என்றாள் வேதா.

"பொய். உன்னால் அந்த வேடத்தை நடித்துக் காட்ட முடியும். உன்னால் செய்ய முடியாததை நான் செய்யச் சொல்ல மாட்டேன். உனக்கு இஷ்டமில்லை. நன்றாக நடிக்க வேண்டுமென்ற சிரத்தையோ எண்ணமோ இல்லை" என்றான் கோபம் நிறைந்த குரலில். அவனுடைய வார்த்தையின் தொனியும் அழுத்தமும் அவளுடைய இருதய அந்தரங்கத்தை அறிந்து கொண்டதுபோலிருந்தது. அவள் திகைத்தாள். அவள் கண்கள் கலங்கின. அவள் நெஞ்சிலெழுந்த வேதனை ஒரு பெருமூச்சாக வெளி வந்தது. "நான் நன்றாக நடிப்பேன். என்னால் நடிக்க முடியும். ஆனால் இது ஒத்திகை தானே என்று அலட்சியமாக இருந்து விட்டேன். நாடகத்தில் நீங்கள் சந்தோஷப்படும்படியாக வெகு நன்றாக நடித்து விடுவேன்" என்றாள் வேதா குரலில் நடுக்கத்தோடு.

அவன் ஏளனமாகச் சிரித்தான். "நாடகத்தில் நன்றாக நடித்து விடுவாயா! ஒத்திகையில் நன்றாக நடிக்காதவள் நாடகத்தில் எங்கே நன்றாக நடிக்கப் போகிறாய்!" என்றான்.

"இல்லை. நான் நன்றாக நடித்து விடுவேன்!" என்றாள் பூரணமான நம்பிக்கையோடு அவனுக்கு வாக்குறுதி கொடுப்பவள் போல.

ராமநாதன் வியப்போடு வேதாவின் முகத்தைப் பார்த்தான். அவள் முகத்தில் அப்பொழுது சிறிது தெளிவு ஏற்பட்டது. ஆனால் அவளுடைய வார்த்தைகளிலுள்ள பதற்றம் அப்படியே இருந்தது. "நாடகத்தில் நன்றாக

நடித்து விடுவாயா! நன்ருக நடிக்காவிட்டால்...!" என்று கேட்டான் ராமநாதன்.

"நன்ருக நடிக்காவிட்டால் நீங்கள் என்ன சொன்னலும் அதற்குக் கட்டுப்படுகிறேன்" என்ருள் வேதா.

"நீ நன்ருக நடிக்கா விட்டால் உனக்கு மாத்திரம் தண்டனை கொடுப்பது நியாயமில்லை. என்னையும் நான் தண்டித்துக் கொள்ள வேண்டும். இரண்டு பொட்டலம் சூரணம். அவ்வளவுதான். உனக்கு ஒரு பொட்டலம். எனக்கு ஒரு பொட்டலம். அப்புறம் நீயோ நானே இந்த உலகத்தில் வாழ்வதினுல் புண்ணியமில்லை என்பது என் கருத்து. என் வாழ்க்கையிலேயே நான் எழுதிய நாடகங்களில் இந்தச் 'சிலையின் நாட்டியம்'தான் மிகச் சிறந்தது. இதில் பெயரெடுக்கா விட்டால் நான் மனிதனே இல்லை. இந்த நாடகம் சிறந்தோங்க வேண்டுமென்ருல் அது உன்னுல்தான் ஆகவேண்டும். ஏனென்ருல் அது உனக்காகவே எழுதப்பட்டது" என்ருன்.

"சரி! உங்கள் அபிப்பிராயப்படியே நடிக்கிறேன்" என்ருள் வேதா வேதனையிடையே தோன்றிய புன்னகையோடு.

* * *

அன்று மாலை ராமநாதனின் முகத்தில் தெளிவும் சந்தோஷமும் ஏற்பட்டதைக் கண்டு எல்லோருடைய மனத்திலும் ஒரு ஆறுதலும் நம்பிக்கையும் ஏற்பட்டன. அதுவும் அவன் மறுநாள் நாடகம் உண்டு என்று சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கவனித்தபோது எல்லோருக்கும் போய்விட்ட உயிர் திரும்பி வந்ததுபோல் இருந்தது. இதற்கெல்லாம் காரணம் வேதாதான் என்பதை எல்லோரும் ஊகித்துத் தெரிந்து கொண்டனர். அன்று மத்தியானம் அவன் அறையில் தனியாக இருந்தபோது வேதா அங்கு சென்றது எல்லோருக்கும் தெரியும். வேதாதான் அவன் மனத்தைமாற்றியிருக்கிருள். 'அவனுக்கும் அவளுக்கும் அந்தரங்கத்தில் ஏதோ இருக்கிறது' என்றெல்லாம் பேசிக் கொண்டனர். எப்படியோ ராமநாதன் கம்பெனியைக் கலைப்பதென்று செய்த தீர்மானத்தைக் கைவிட்ட வரையில் எல்லோருக்கும் ஆறுதலாகத்தான் இருந்தது.

மறுநாள் நாடகத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் மிக ஜரூராகவே நடந்தன. ஒரு மாதகாலமாக மிகவும் விரிவான முறையில் எங்கும் விளம்பரம் செய்யப்பட்டிருந்ததால் எதிர்பார்த்த அளவுக்குக் கூட்டமும் வசூலும் ஆகி இருந்தது. கொட்டகை நிரம்பி ஆயிரக் கணக்கான பேர் டிக்கட் அகப்படாமல் திரும்பிச் செல்ல நேர்ந்தது. ராமநாதன் அதுவரை நடத்திய எந்த நாடகத்துக்கும் அவ்வளவு கூட்டம் வந்ததில்லை. கொட்டகையில் நிரம்பியிருந்த ஜன சமுத்திரத்தைப் பார்த்த பொழுது அவனுக்கே பிரமிப்பாக இருந்தது. பதினுயிரக்கணக்கான பேர் கூடி யிருந்தது அவனுக்குச் சந்தோஷத்தை அளித்தாலும் மனத்தில் ஒரு திகிலும் இருந்தது. இன்றைய தினம் நாடகம் திறம்பட நடிக்கப் பெற்றுப் பெயரெடுக்க வேண்டுமே என்ற கவலைதான் அவனுக்கு. வெற்றியோ தோல்வியோ இரண்டும் வேதாவின் கையில்தான் இருக்கிறது. அவள் நன்ருக நடிக்க வேண்டும் என்பதற்காக அடிக்கடி அவளை உற்சாகப்படுத்தி வந்தான். அவள் பக்கத்திலேயே இருந்து இப்படி அப்படி என்று நடிக்க வேண்டிய விதத்தைப் பற்றி யெல்லாம் உபதேசம் செய்து கொண்டிருந்தான்.

அந்த நாடகத்தின் வெற்றி முழுதும் சிலை உயிர் பெற்று எழுந்து நாட்டியமாடும் கட்டத்தில்தானிருக்கிறது. மற்ற இடங்களில் வேதாவின் நடிப்பில் சிறிது குறைவு ஏற்பட்டாலும் பாதகமில்லை. நெடுநேரம் நின்று அரச குமாரன் கதை முடிக்கும் வரையில் வேதா கையைக் காலை அசைக்காமல் கண்ணைக் கூடக் கொட்டாமல் சிலைபோல நிற்க வேண்டும். நாடகம் பார்ப்பவர்களெல்லாம் உண்மையில் சிலையே அரங்கத்தில் வைக்கப்பட்டிருப்பதாக எண்ணவேண்டும். திடீரென்று சிலை உயிர் பெற்று எழுந்து இளவரசனுடன் இனிய வார்த்தைகள் பேசி நாட்டியமாட வேண்டும். பதினைந்து நிமிஷம் அவள் ஆட வேண்டிய நாட்டியம் தான். எவ்வளவு சிரமசாத்தியமானது! மின்னல் போல் பளிச்சிட்டுப் பாயவேண்டும். கொடிபோல் துவள வேண்டும். எத்தகைய பெண்ணும் ராமநாதன் கற்பித்ததுபோல் ஆடுவது சிரமமே. நிச்சயம் வேதாவினுல் அந்த நாட்டியத்தை ஆடிக் காட்ட முடியுமென்ற நம்பிக்கையினுல்தான் சிரமம் மிகுந்த அந்த நாட்டியத்தை நாடகத்தினிடையே புகுத்தினுன். அந்தக் காட்சிதான் முழு நாடகத்துக்கும் சிறப்பைக் கொடுக்கக்கூடிய அம்சமாக இருந்தது. சொடுக்கி விடப்பட்ட பம்பரம்போல் பதினைந்து நிமிஷம் ஆடி விட்டுத் திடீரென்று சிலைபோல நிற்க வேண்டும். ஆம்! முன்பு இருந்த நிலை மாருமல் சிலைபோல் தோற்றமளிக்க வேண்டும். நாட்டியமாடிய களைப்பில் ஒரு பெரு மூச்சுக்கூட விடக் கூடாது. இப்படி எந்தப் பெண்ணுல்தான் செய்ய முடியும்! இது வேதாவால் முடியும் என்று ராமநாதன் கொண்டிருந்த நம்பிக்கையை எப்படி மதிப்பது!

அவனுடைய நம்பிக்கையை வீண் போனதாக்கவில்லை வேதா. உண்மையில் எல்லோரும் பிரமிப்படையும் வண்ணம் நாடகத்தில் தன் பணியைச் செய்து முடித்தாள். நாடகம் பார்க்க வந்த ஜன சமுத்திரத்தின் முகத்தில் தேங்கி இருந்த உணர்ச்சியையும் பிரமிப்பையும் கண்டு ராமநாதன் அடைந்த பூரிப்பில் அவன் இருதயமே உப்பி வெடித்து விடும் போலிருந்தது. அவன் மெய் சிலிர்த்து நின்று விட்டான். புகழ் என்னும் இமய மலையின் சிகரத்தை எட்டிப் பிடித்தவன் போல் ஆனந்த சாகரத்தில் அழுந்தி விட்டான்.

கடைசி காட்சி முடிந்து விட்டது. திரையும் விழுந்தது. அரங்கில் நின்ற வேதா தள்ளாடிக் கொண்டே வந்தாள். ராமநாதன் ஆனந்தம் தாங்கமாட்டாதவனுக இரண்டு கைகளையும் அவளிடம் நீட்டினுன். அவள் அவன் தோள்மீது சாய்ந்து விட்டாள்.

"வேதா!" என்ருன் ராமநாதன் உணர்ச்சிப் பரவசத்தோடு. ஆனுல் அவன் தோளில் சாய்ந்திருந்த அவள் மூர்ச்சை யுற்றிருந்தாள். அவள் உடல் துவண்டு சில்லிட்டிருந்தது.

* * *

நகர ஆஸ்பத்திரியில் வேதா ஒரு கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தாள். அவளருகில் உட்கார்ந்திருந்த ராமநாதன் மனப் பதற்றத்தோடு டாக்டரின் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தான். கணத்துக்குக் கணம் வேதாவின் உயிர் எமலோகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பது போல் தான் பட்டது. நாடகத்தில் அவள் போட்டிருந்த வேஷத்துக்கு ஏற்ற ஆடை அலங்காரங்களெல்லாம் கலைக்கப்படாமல் அப்படியே இருந்தன. இப்படி யெல்லாம் நேருமென்று அவன் நினைக்கவில்லை. நடனம் ஆடிய களைப்பினுல் அவள் சிறிது நேரம் மூர்ச்சையுற்றிருப்பாள் என்றுதான் அவன்

நினைத்திருந்தான். கஷ்டமான நடிப்பும் காட்டிய மூம் அவள் தேகத்தைப் பாதித்து விட்டது என்பதை அப்பொழுது தான் அவன் உணர்ந்து மனம் புழுங்கினன். அவள் பிழைப்பாளோ மாட்டாளோ என்ற மனக் குழப்பமும் திகிலும் அவளைப் பார்க்கும் போதெல்லாம் அவனுக்கு ஏற்பட்டது. அவளுக்கு இவ்வளவு கஷ்டமான பணியைக் கொடுத்தது பற்றித் தன்னைத் தானே நொந்து கொண்டான். அவள் இந்தச் சிரமத்தைச் சமாளிப்பாள் என்று நம்பியது அறிவற்றதனம் என்று எண்ணினன். "ஆஹா! அவள்தான் எவ்வளவு நன்ருக நடித்து விட்டாள்! போதும், போதும். இந்த ஒருநாள் நாடகமே போதும். அவள் அந்த ஒருநாள் நடித்ததே போதும். அந்த ஒருநாள் நாடகத்திலேயே அவன் தன் வாழ்க்கையில் லட்சிய சித்தியை அடைந்து விட்டதாக எண்ணினன். அந்த ஒருநாள் நாடகமே அவன் கனவு கண்டு கொண்டிருந்த பெரும் புகழைக் கொடுத்து விட்டது. வேதாதான் அந்த எட்டாத பெரும் புகழை அவன் கைக்கு எட்ட வைத்தாள். அவள் பிழைத்தால் போதும். இனி அவளை எதிலும் நடிக்கச் சொல்லித் துன்பம் கொடுக்க மாட்டேன். அவள் என் மனத்தெய்வம். அவளை நான் கல்யாணம் செய்துகொண்டு இனிமேல் நிம்மதியாக, சௌக்கியமாக வாழ்க்கையை நடத்தப் போகிறேன்..." என்றெல்லாம் தனக்குள் பிரலாபித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான் ராமநாதன்.

டாக்டர் உள்ளே வந்தார். ராமநாதன் எழுந்து நின்ருன். டாக்டர் கட்டில் அருகில் வந்து பிரக்ஞையற்றுக் கிடந்த வேதாவை பார்த்துத் திகைப்படைந்தவராக "இந்தப் பெண்ணு...! இவள் உங்கள் கம்பெனியில்தான் இருக்கிருளா!" என்று கேட்டார்.

"ஆமாம்!" என்ருன் ராமநாதன் ஆச்சர்யத்தோடு டாக்டரைப் பார்த்த வண்ணம்.

டாக்டர் வேதாவின் உடம்பைப் பரிட்சை செய்து விட்டு வாட்டமடைந்த முகத்துடன், "அசட்டுப் பெண்! இவளுக்கு நான் முன்பே எச்சரிக்கை செய்திருக்கிறேன். கடினமான காரியம் எதுவும் செய்யக் கூடாதென்று. நாடகத்தில் இவளுக்கு நீங்கள் கொடுத்த பாத்திரம் ரொம்பக் கஷ்டப்பட்டு நடிக்க வேண்டியதோ...!" என்ருர்.

"கொஞ்சம் சிரமமான பாகம்தான்" என்ருன் ராமநாதன் மெதுவாக. "இவளுக்கு நீங்கள் எச்சரிக்கை செய்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரிந்திருந்தால் அந்தப் பாத்திரத்தை இவளுக்குக் கொடுத்திருக்க மாட்டேன்...இவள் உங்களை இதற்கு முன்னே சந்தித்திருக்கிருளா! எப்போது!" என்று கேட்டான் ராமநாதன் வியப்போடு.

"எப்போதா! அது உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. இவள் உங்கள் கம்பெனியைச் சேர்ந்தவள் என்று தெரிந்திருந்தால் உங்களிடம் நான் சொல்லி இருப்பேன். ஆறு மாதத்துக்கு முன்பு நீங்கள் சீக்காகப் பத்துப் பதினைந்து நாள் இந்த ஆஸ்பத்திரியில் படுத்திருந்தீர்களல்லவா!"

"ஆமாம்..."

"அப்பொழுது உங்கள் உடம்பில் ரத்தக் குறைவு ஏற்பட்டது. வேறொருவரிட மிருந்து ரத்தம் எடுத்து உங்கள் உடலில் பாய்ச்ச வேண்டியிருந்தது. அப்பொழுது இவள்தான் உங்களுக்கு ரத்தத்தைக் கொடுத்து உதவினுள்..."

இதைக் கேட்டதும் ராமநாதன் திகைத்து நின்ருன். ஐந்தாறு வருடங்களாக இடைவிடாது நாடகத் தொழிலில் உழைத்து




வந்ததால் அவன் உடம்பு சீர்கேடடைந்து இருந்தது. அவன் உடம்பில் ரத்தம் வற்றிச் சோகைபோல் இருந்தான். இதை அவன் கவனியாமல் அலட்சியமாக விட்டு விட்டதனுல் திடீரென்று அவன் படுத்த படுக்கையாக விழும்படியாகி விட்டது. இது நடந்து ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. நாடகக் கம்பெனியிலுள்ள மற்றவர்கள் அவனை அந்த ஊர் ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து விட்டனர். பதினைந்து நாட்கள் வரை அவன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்ற பின் உடல் சுகம் பெற்று மறுபடியும் நாடகப் பணியில் தீவிரமாக இறங்கினன்.

இவற்றை யெல்லாம் அவன் மறந்துவிட முடியுமா! எல்லாம் அவன் நினைவுக்கு வந்தன. அவன் உடம்பில் ஏற்பட்ட ரத்தக் குறைவினுல் மறுபடியும் ரத்தம் பாய்ச்சப் பட்டது என்பதும் அவனுக்குத் தெரியும். ஆனல் அந்த ரத்தம் வேதாவின் உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட ரத்தம் என்று அவனுக்குத் தெரியாது. இதை வேதா அவனிடம் சொல்லி இருக்கலாம். ஆனல் அவள் சொல்லவில்லை. அவள் அதைச் சொல்லாமல் இருந்தது அவனுக்கு வியப்பை அளித்தது. ஏன் அவள் அவனிடம் சொல்லாமல் இருந்தாள் என்பதை அப்பொழுது அந்த நெருக்கடியான நிலைமையில் அவன் ஆராய்ந்து தெரிந்து கொள்ளும் நிலையில் இல்லை. "இது எப்படி நடந்தது! இதை இவள் என்னிடம் சொல்ல-வில்லையே!" என்ருன் துடிப்புடன்.

"அதை உங்களிடம் சொல்லாதது தான் இவ்வளவு விபரீதத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறது. நீங்கள் இங்கு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக இருந்த பொழுது உங்கள் உடம்பில் ரத்தம்




செலுத்த வேண்டுமென்பதற்காக உங்கள் கம்பெனி மானேஜரிடம் உங்கள் குழுவில் ரத்தம் கொடுக்கச் சம்மதித்தால் அனுப்புங்கள் என்று சொன்னேன். ஆனால் அதற்கவர் ஒருவரும் ரத்தம் கொடுக்கச் சம்மதிக்க மாட்டார்கள் என்று சொல்லி அனுப்பி விட்டார். அன்று மத்தியானம் என் வேலைக்காரன் இந்தப் பெண்ணை அழைத்து வந்து இவள் ரத்தம் கொடுக்கத் தயாராய் இருப்பதாகச் சொன்னான். நான் இவளை யார் என்று ஊர் பெயர் விசாரித்தேன். அவள் ஏதோ அனாதையாக விடப்பட்ட பெண் போல் பதில் சொன்னாள். அந்தச் சமயத்தில் அவளை நான் அதிகம் கிளறிக் கேட்க விரும்பவில்லை. சில சமயங்களில் ரத்தம் கொடுப்பதற்காகக் கொடுக்கப்படும் வெகுமானத்தை எண்ணிச் சிலர் ஆஸ்பத்திரிக்குவரக்கூடும். இவளும் அந்த வகையைச் சேர்ந்தவள் என்று தான் நான் முடிவு செய்தேன். அவள் ரத்தத்தைப் பரிசோதனை செய்து, நல்ல இரத்தம்தான், உங்கள் உடலில் செலுத்தலாம் என்று கருதி அவள் உடம்பிலிருந்து ரத்தத்தை எடுத்து உங்கள் உடம்பில் செலுத்தினேன். அவள் உடலிலிருந்து ரத்தம் எடுத்த பிறகுதான் அவள் மிகவும் பலவீனமானவளாகி விட்டாள் என்பதை நான் உணர்ந்தேன். அதற்காக அவளை ஒரு வருடம் வரையில் எவ்விதமான கடின வேலையும் செய்யக் கூடாது என்று எச்சரித்திருந்தேன். அவள் ரத்தம் கொடுத்ததற்கு வெகுமானமாக ஆஸ்பத்திரியில் ஐந்து ரூபாய் கொடுக்கும்படி உத்தரவிட்டேன். ஆனால் அவள் அந்தப் பணத்தை வாங்கிக் கொள்ளாமல் போய்விட்டாள் என்ற செய்தி எனக்கு அப்புறம் தான் தெரிந்தது. அதற்கப்புறம் அந்தப் பெண்ணை இப்பொழுதுதான் இந்த நிலையில்தான் பார்க்கிறேன்" என்றார் டாக்டர்.

"இதெல்லாம் எனக்குத் தெரியாது, டாக்டர்! தெரிந்திருந்தால் இவளுக்கு இவ்வளவு கடினமான வேஷத்தைக் கொடுத்து நடிக்கச் சொல்லி இருக்க மாட்டேன். இவள் பிழைத்து விடுவாளல்லவா!" என்றான் ராமநாதன் பதட்டத்தோடும் தடுமாற்றத்தோடும்.

பிரக்ஞை யற்றுக் கிடக்கும் வேதாவுக்கு ஒரு ஒரு இஞ்செக்ஷனைக் கொடுத்து விட்டுச் சுவாரஸ்யமில்லாதவர் போல் முகத்தை வைத்துக் கொண்டு "எல்லாமே டாக்டர்கள் கையில் இல்லை. ஏதோ என்னால் கூடிய வரையில் பார்க்கிறேன். அப்புறம் கடவுள் செயல்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

டாக்டரின் வார்த்தைகள் ராமநாதனுக்கு மன ஆறுதலைக் கொடுக்கவில்லை. பெருத்த திகிலைத்தான் ஏற்படுத்தின. அவன் பித்துப் பிடித்தவன் போல் வேதா கிடத்தப்பட்டிருந்த கட்டிலருகிலேயே உட்கார்ந்திருந்தான்.

அரை மணி நேரம் சென்றது. டாக்டர் ஊசி போட்டுவிட்டுச் சென்றதன் பலனோ என்னவோ வேதா மெதுவாகக் கண் விழித்தாள். அவள் உதடு அசைந்தது. பெருந் திகிலோடு கட்டிலருகே உட்கார்ந்திருந்த ராமநாதனின் மனத்தில் அளவுக்கு மீறிய ஆறுதல் ஏற்பட்டது. "வேதா!" என்றான் பதட்டத்துடன்.

மெதுவாக அசைந்த உதட்டிலிருந்து வார்த்தைகள் வெளி வந்தன. "நான் நன்றாக நடித்து விட்டேனா!" என்று கேட்டாள் வேதா.

"மிகவும் நன்றாக நடித்து விட்டாய். அதை எல்லாம் பற்றி இனிமேல் கவலைப்படாதே. உன் உடல் நிலை இப்பொழுது நன்றாக இல்லை" என்றான் நெஞ்சில் நிறைந்த துயரத்தின் நிணறலோடு.

"உங்கள் மனத்துக்குத் திருப்தி ஏற்பட்டால் எனக்குச் சரிதான். ஒத்திகையில் சிரமப்பட்டு நடித்து விட்டால் நாடகத்தில் நடிக்க முடியாது என்றுதான் நான் நடிக்கவில்லை. ஒத்திகையில் நடித்ததினால் என் உடம்பு கேவலமாகி இறந்து விட்டால் நாடகத்தில் நடித்து உங்களுக்கு எப்படிப் புகழ் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்! அதனால்தான்......" என்று மேலே எதுவும் பேச முடியாமல் கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் கண்களில் கண்ணீர் நிரம்பி இருந்தது. நெஞ்சம் நெகிழ்ந்துருகியது. "வேதா" என்று தழு தழுத்த குரலோடு அவன் மெல்லிய கையைத் தொட்டான். அது சில்லிட்டுத் துவண்டிருந்தது.

# சூடான அல்லது குளிர்ந்த 'ஓவல்டின்' எல்லா காலங்களுக்கும் உகந்த பானம்!




ஒரு டின் 'ஓவல்டின்' வீட்டில் எப்பொழுதுமே தயாராக வைத்திருந்தால் வருஷத்தில் எந்த சமயத்திலும் உங்களுக்கு புஷ்டி தரும் பானத்தைப் பற்றிய கவலையே இருக்காது. குளிர் காலத்தில் கடகட ஒரு கப் ஓவல்டின் பருகினால் குளிர் மறைந்து போகும்; கடும் வெயில் காலத்தில் குளிர்ந்த ஓவல்டின் பருகினால் சோர்வு நீங்கி புத்துணர்வு ஏற்படும். கவனியுங்கள்—ஆரோக்கியம் ததும்பும் ஓவல்டினில் ஆடை நிரம்பிய சத்துமான பசும்பால், பழுத்த பார்லி மால்ட், சிறந்த கொக்கோ, பி & டி விடமின்கள் இருக்கின்றன. ஆகவே ஓவல்டின் உங்களுக்கு இன்றியமையாதது.



இந்த ருசி மிகுந்த உணவு பானம் வருஷம் முழுவதற்கும் உங்கள் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து சக்தியை அளிக்கும். உங்கள் கடையில் 'ஓவல்டின்' கேளுங்கள்.

விநியோகஸ்தர்கள் :

கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.

# ஓ வ ல் டி ன்

சூடாகவோ, குளிர்ந்த பானமாகவோ பருகலாம்

OV.




# சூபர் கம்-டிப்பிங்

என்பது ஒரு பிரத்யேகமான

# Firestone

பயர்ஸ்டோன் முறை

பயர்ஸ்டோன் ஸ்தாபனம் ஒன்றிலேயே கையாளப்படும் இப்புதிய முறை சிறப்புடையதென்பது லாபரேட்டரி சோதனைகளில் மட்டுமின்றி இதர கூட்டுச் சோதனைகளிலும், இந்திய போலீஸ் ரேஸ் முதலிய வேகப் பரிசோதனைகளிலும், நிரூபணமாகியுள்ளது. சூபர் கம்-டிப்பிங்கினால் எவ்வித அதிர்ச்சியும் தாங்கக்கூடியதாகக் கார்டு பாடி 60சத விகிதம் அதிக வலுவுள்ளதாகிறது. சூட்டினாலேற்படும் சிருப்புகள், நூல் பிரிதல் முதலியனவும் தவிர்க்கப்படுகின்றன.

பயர்ஸ்டோனையே கேட்டு வாங்குங்கள். அது ஒன்றுதான்

## சூபர் கம்-டிப்டு டயர்

ஒவ்வொரு ரூபாய்க்கும் அதிக மைல்கள் ஓடக்கூடியது

# கோபத்தின் தவறு

ரா. வீ.

அன்று காரியாலயத்தில் சம்பளம் பட்டுவாடா செய்யும் தினம். மத்தியானம் மணி மூன்று இருக்கும். சம்பந்தம் கையில் சம்பளப் பட்டியலுடனும் கவரில் பணத்துடனும் ஒவ்வொருவர் மேஜைக்கும் சென்று பணத்தைப் பட்டுவாடா செய்து கையெழுத்து வாங்கிக் கொண்டு போனான்.

அவன் அந்தண்டை போனதும் வேங்கடராமன் கவரைப் பிரித்துப் பணத்தை எண்ண உட்கார்ந்தான். ஒரு தடவை எண்ணினான். பணம் பத்து ரூபாய் குறைந்தது. இரண்டாம் தடவை எண்ணினான். அப்பொழுதும் அந்தப் பத்து ரூபாய் குறைந்தது. எண்ண எண்ணப் பத்து ரூபாய் குறையவே, அவனுக்குக் காசாளர் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"இவர் என்ன காசாளர் ஐயா! கணக்கு வழக்குத் தெரியாமல் காசாளர் உத்தியோகம் பார்க்க வந்து விட்டார்!" என்று முணுமுணுத்தான்.

பக்கத்தில் இருந்த ராகவன், "என்ன அப்பா விஷயம்!" என்று கேட்டான்.

"என்ன விசேஷம்? காசாளர் பத்து ரூபாயைக் குறைத்துக் கொடுத்து விட்டார்!" என்றான் வேங்கடராமன்.

"தவறுவது யாருக்கும் சகஜம். போய்க் குறைந்திருக்கிறது என்று சொல்லிக் கேட்டால் கொடுக்கிறார்!" என்று ராகவன் தன் சுபாவப்படி அவனுக்கு ஆறுதல் அளித்தான்.

"இந்த மாதிரி 'தப்பு ஒரு தடவையா, இரண்டு தடவையா? இப்படியே தப்பு பண்ணிக் கொண்டு போனால் எவன் அப்பா பொறுப்பான்?" என்று சொல்லியவன் விடுவிடு என்று காசாளர் அறைக்குச் சென்றான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் வேங்கடராமனின் வெண்கல நாதக் குரல் காசாளர் அறையை அதிரச் செய்தது. காசாளரின் குரல் மட்டும் காதில் விழவில்லை. பக்கத்து அறையில் இருந்தவர்கள் எல்லோரும் காசாளரின் அறையில் உள்ள அரைக்கதவு வழியாக எட்டி எட்டிப் பார்க்கத் தொடங்கி விட்டனர்.

"நீர் எத்தனை ரூபாய் ஐயா கொடுத்தீர்? கணக்கு வழக்குத் தெரியாமல் காசாளர் உத்தியோகம் பார்க்க வந்து விட்டீரே!" என்றான் வேங்கடராமன் கடுமையாக.

"கணக்கு வழக்குத் தெரியாமல் என்ன? சரியாகத்தான் கொடுத்திருக்கிறேன்!"

"என்னத்தைச் சரியாகக் கொடுத்து விட்டீர்? இந்தாரும்! எத்தனை இருக்கிறது என்று எண்ணிப்பாரும்!" — ஆத்திரத்துடன் தன் கையிலிருந்த கவரைக் காசாளரின் முன்னிலையில் விட்டெறிந்தான் வேங்கடராமன்.

காசாளர் கன நிதானமாக எண்ணிப் பார்த்தார். பிறகு, "சரியாகத்தானே இருக்கிறது!" என்றார்.

"என்ன சரியாக இருக்கிறது? எத்தனை ரூபாய் எண்ணினீர்?"

"நூற்றைம்பது ரூபாய் எண்ணினேன்!"

"எனக்கு என்ன சம்பளம்?"

"நூற்றறுபது!"

"பத்து ரூபாய் எங்கே போயிற்று? எனக்கு மட்டும் ஏதாவது சம்பள வெட்டு கிம்பள வெட்டு நேர்ந்து விட்டதா?"

"இல்லையே!"

"அப்படியானால் பத்து ரூபாய் குறைவாகத்தானே கொடுத்திருக்கிறீர்?"

"இல்லை!"

"என்ன ஐயா கொள்ளை! பகற்கொள்ளையாகவல்லவா இருக்கிறது! பத்து ரூபாய் குறைத்துக் கொடுத்தது மட்டுமல்லாமல் இல்லையென்று வேறு சாதிக்கிறீரே!"

"நான் ஒன்றும் அப்படிச் செய்யவில்லை!"

"பின்னே நான் மட்டும் என்ன பொய் சொல்கிறேனா?"

"பொய் சொல்வதாக நான் எங்கே சொன்னேன்?"

அரைக் கதவு வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து, "பார்த்

தீர்களா, காசாளரின் காரியத்தை! இதற்கு என்ன செய்வது?'' என்றான் வேங்கடராமன்.

எல்லோரும் காசாளரின் மீது மொல்லு மொல்லென்று சண்டைக்கு வந்து விடு வார்கள் போலிருந்தது. "வேங்கடராமன்! நிதானமாகப் பேசும். போன மாதம் எவ் வளவு கொடுத்தேன்? உண்மையைச் சொல்லும்!'' என்றார் காசாளர்.

"கணக்குப் படிதான் கொடுத்தீர்!''

"இதோ கணக்கு இருக்கிறது. இந்த நம்பர் நோட்டிலிருந்து இந்த நம்பர் நோட்டு வரை உம்மிடம் கொடுத்திருக்கிறேன். எண் ணிப் பார்த்தால் நூற்றெழுபது ரூபாய் ஆகவில்லை?", என்று கேட்டார்.

"ஆமாம்.''

"அப்பொழுது பத்து ரூபாய் அதிக மாக வாங்கிக் கொண்டவர் சொல்லிப் போவதற்கு இந்தப் பக்கம் தலைகாட்ட வில்லையே! இப்பொழுது குறைந்தவுடன் ஓடி வந்து விட்டீரே!'' என்றார் காசாளர்.

அறையின் அரைக்கதவு வழியாகப் பார்த் தவர்களுடைய ஆத்திரம் எல்லாம் வேங்கட ராமன் பக்கம் திரும்பியது. வேங்கடராமன் முகம் அறுந்து தொங்கப் போவதைக் காண எல்லோரும் ஆவலுடன் தங்கள் தங்கள் கண்களைத் தீட்டிக் கொண்டனர்.

"அதற்காக வரவில்லை ஐயா, நான்! ஒரு தடவை தவறு செய்தீர், பத்து ரூபாயை அதிகமாகக் கொடுத்து! முதல் தடவை செய்யும் தவறை மன்னித்து விடவேண்டி யது அவசியம் என்று போனால் போகிறது என்று விட்டேன். இப்பொழுது இரண்டாம் தடவையாகப் பத்து ரூபாயைக் குறைத்துக் கொடுத்துத் தவறு செய்து விட்டீர். இந்த மாதிரி தவறு இனிமேல் நீடித்துக்கொண்டே போகக் கூடாதல்லவா? அதைச் சொல்லத் தான் வந்தேன்!'' என்று சொன்ன வேங்கட ராமன் அப்புறம் அங்கே நிற்கவில்லை.

# படித்துப் பாருங்கள்!

## நிரந்தரச் செல்வம்

நமது புத்தக அலமாரியில் வைத்துக் காப் பாற்ற வேண்டிய நிரந்தரச் செல்வம் இந்தப் புத்தகம். ராஜாஜி அவர்களின் எட்டுச் சிறந்த கதைகள் இதில் இருக்கின்றன. ஒவ்வொரு கதை யையும் படிக்கும் போது ஏதாவது ஒரு இடத்தில் கண் கலங்குகின்றது.

"சீதா தேவி கஷ்டம் என்பது என்னவென்று தெரிந்து கொள்வதற்காகப் பூமியில் அவ தரித்து, உண்மையாகவே சொல்ல முடியாத துய ரங்களை அநுபவித்துத் தெரிந்து கொண்டவள். நமது துயரங்களைத் தீர்க்கக் காத்துக் கொண் டிருக்கிறாள். அவளை நம்பினால் போதும்'' என்ற அமுத மொழிகள் வாழ்க்கையில் துன்புற்றவர் களுக்கு எவ்வளவு ஆறுதல் தரக்கூடியவை!

எல்லாம் அர்த்த புஷ்டியோடு கூடின ரஸமான கதைகள். பெற்றோர்கள் அவசியம் தம் குழந்தை களுக்கு வாங்கிக் கொடுத்துப் படிக்கச் செய்ய வேண்டும். வாழ்க்கையில் உள்ள மேடு பள்ளங் களை உணருவதற்குச் சிறந்த சுலபமான முறை.

ஒவர்ஸ் கண்ணனும், சாட்சி கோபாலனும், விஷ்ணுவும், ரகுராம ஐயரும், சின்னப் பையனும், சின்ன சாமியும் நம் மனத்தை விட்டு என்றும் அகல மாட்டார்கள்.

ஆசிரியர்; - ராஜாஜி; பாரதி பதிப்பகம், தியாகராயநகர், சென்னை-17, விலை 1-8-0.

## ராஜாஜி மணிமொழிகள்

"துக்கப்படுவது எந்தப் பிரச்னையையும் தீர்த்து விடாது.''

"நாம் செய்யும் காரியங்கள் எல்லாம எப்பொழு தும் யாதொரு இடையூறுமின்றி நடை பெற வேண்டுமென்று எண்ணினால் நாம் உலகத்தில் எந்தக் காரியத்தையும் செய்து முடிக்க மாட் டோம்.''

"விஞ்ஞானம், கணிதம், அல்லது மனித ஒழுக் கம் சம்பந்தமாகப் புதிய விஷயங்களைக் கண்டு பிடிப்போருக்கு ஒரு கஷ்டம் உண்டு. தாங்கள் கண்டு பிடித்ததை அஞ்ஞானம் நிறைந்த இந்த உலகில் எவ்விதம் அநுஷ்டானத்துக்குக் கொண்டு வருவது என்பதுதான் அந்தக் கஷ்டமாகும்.''

இப்படிப்பட்ட அருமையான மணிகளைப் போன்ற விஷயங்கள் இப் புத்தகத்தில் அடங்கி யிருக்கின்றன. எளிய முறையில் பல அருமை யான விஷயங்களை ராஜாஜி அவர்கள் கூறு வார்கள் என்பது பிரசித்தம். பத்திரிகைகளிலும், பிரசங்கங்களிலும், பல்வேறு புத்தகங்களிலும் பற்பல விஷயங்கள் சிதறிக் கிடக்கின்றன. அந்த மணிகளை மிகவும் பக்தி சிரத்தையோடு பொறுக் கித் தந்திருக்கிறார் ஸ்ரீ முல்லை முத்தையா.

தொகுத்தவர்: முல்லை முத்தையா; பாரதி பதிப்பகம்; சென்னை-17; விலை: ரூ. 1—4—0.

## தாயார் கொடுத்த தனம்

நாமக்கல் கவிஞர் தமிழில் தேசிய மணங் கமழும் பாடல்கள் பல எழுதி யிருப்பதோடு தமிழ் வசன இலக்கியத்துக்கும் சிறந்த தொண் டாற்றி வருகிறார். சுய சரிதை நிகழ்ச்சிகளைச் சுவையுடன் எழுதும் ஆற்றல் அவரிடம் பரி பூரணமாக இருக்கிறது.

"தாயைப் பழித்தாலும், தண்ணீரைப் பழிக் காதே'' என்ற அர்த்தமற்ற பழமொழியைக் கவிஞர் அவர்கள் ஆராய்ந்து தற்செயலாக அந்தப் பழமொழியின் உண்மை வடிவத்தைக் கண்டு பிடித்ததைப் படிக்கும் போது வியப்பாக இருக்கிறது. "தாயைப் பிழைத்தாலும் தண் ணீரைப் பிழைக்காதே!'' என்ற பழமொழி அப்படி உருமாறித் தடுமாற்றத்தை உண்டு பண்ணி வந்திருக்கிறது!

"பொய் சொல்லாதே! போக்கிரி என்று பெயர் எடுக்காதே!'' என்று கவிஞர் அவர்களுடைய தாயார் சொல்லி வந்த புத்திமதி எல்லாருக்குமே பொருந்தும் அல்லவா!

ஆசிரியர்: நாமக்கல் கவிஞர், கவிஞர் பதிப் பகம், கோயமுத்தூர்; விலை 2-0-0.

# இந்த அற்புதமான புதிய ரேடியோ பாட்டரியை உபயோகித்துப் பாருங்கள்!

"எவரெடி" "மினி-மாக்ஸ்" பாட்டரியின் உள்ளே, ஒவ்வொரு கன அங்குல இடத்திலும் மற்றெந்த ரேடியோ பாட்டரியையும் விட அதிகப்படியான வேலை செய்யக்கூடிய பொருள்கள் பொருத்தப்பட்டுள்ளன. தட்டையான செல்கள் அமைக்கப்பட்டிருப்பதால், இதன் பரிமாணமும் எடையும் குறைவாயிருக்கின்றன. ஆயினும் இது முழு சக்தியை அளித்து, வெகு நாள் நீடித்துழைக்கக்கூடியது.




NCM 3903

# யோகாசனச் சிகிச்சை

வி. என். குமாரசாமி

## 17. எரியம்

எரியம் (பாஸ்பரஸ்) ஒரு விஷபதார்த்தம். இது நமது உடலில் சுமார் இரண்டு ராத்தல் வரை இருக்கிறது என்றால் ஆச்சரியமாக இல்லையா? இந்த இரண்டு ராத்தல் விஷத்தைக் கொண்டு பதினாலாயிரம் பேரைக் கொல்லப் போதுமானதாம். அவ்வளவு விஷத்தையும் நம்முள் அடக்கியிருக்கிறோம். ஆனால் இது உடம்புக்கு அவசியமாக இருக்கிறது.

எலும்புகள், பற்கள் முதலியன வளரவும் உறுதியாகவும் இருக்க வேண்டுமானால் வெறும் கால்ஷியம் மட்டும் இருந்தால் போதாது. பாஸ்பரசும் இருந்தால்தான் முடியும். எனவே எலும்புகள், பற்கள் இவைகளின் வளர்ச்சிக்கும் உறுதிக்கும் பாஸ்பரஸ் வேண்டியதாய் இருக்கிறது. தவிர இந்தப் பாஸ்பரஸ் உடலில் போதுமான அளவு இருந்தால்தான் நாம் சாப்பிட்ட உணவுச் சத்துக்களை உடல் அணுக்கள் உறிஞ்சுவதற்கும், உடலில் ஏற்படும் கழிவுகளை வெளியே தள்ளுவதற்கும் முடியும். குறைந்தால் மேற் சொன்ன வேலைகள் சரிவர நடவாது. என்னதான் பாதாம் ஹல்வாவாகவும், நெய்யாகவும், வெண்ணெயாகவும் சாப்பிட்டாலும், உடலில் பாஸ்பரஸ் போதுமான அளவு இல்லையானால் சாப்பிட்ட உணவு உடலில் சரிவர ஒட்டாது.

மூளை நமது உடலில் மிக முக்கியமான அவயவம். அதுதான் கேந்திர ஸ்தானம். அதற்குப் பாஸ்பரஸ்தான் அதிகம் வேண்டியதாயிருக்கிறது. மூளை அணுக்களுக்கும் நரம்பு அணுக்களுக்கும் பாஸ்பரஸ் அதிகமாய்த் தேவை. இல்லையானால் மூளைக்குப் பலவீனம் உண்டாகும். பலவீனம் உண்டானால் என்ன ஆகும்? சிறிது யோசிக்கவும் முடியாது. சிறிது நேரம் படிக்கவும் முடியாது. படித்த விஷயங்கள் ஞாபகத்தில் இருக்காது. மறதி அதிகம் ஏற்படும். மற்றும் மூளை சம்பந்தமான அநேகக்கோளாறுகள் ஏற்படும். இவைகளைப் போக்க வேண்டுமானால் நேராய்ப் பாஸ்பரஸை மூளைக்குத் திணிக்க முடியுமா? பாஸ்பரஸ் கலந்துள்ள ஆகாரங்களை அதிகம் சேர்த்துக் கொண்டு யோகாசனங்களையும் செய்து வந்தால், சாப்பிட்ட பாஸ்பரஸ் உணவு இரத்தத்தில் கலந்து, யோகாசனங்களால், அதிலும் சிரசாசனத்தால், மூளைக்கு அதிக ரத்த போஷணை ஏற்பட மூளை அதிக பலமாகும். மூளைக்கு மட்டும் அதிக பலம் கிடைத்து விட்டால் பின் வாழ்க்கையில் இன்பங்களைக் கேட்க வேண்டுமா? இந்த உலகத்தில் சாதிக்க முடியாத காரியங்கள் ஒன்றுமே இல்லை என்ற தைரியம் உண்டாகும். அவைகளைத் திறமையாக நிறைவேற்றும் ஆற்றலும் உதிக்கும்.

நரம்புகளுக்கும் பாஸ்பரஸ் சக்தி இருக்க வேண்டும். பாஸ்பரஸ் நரம்புகளில் அதிகம் காணப்படும். இச்சக்தி குறைந்தால் பின் உடல் ஆரோக்கியம் உண்டாவதெப்படி? நரம்பு பலவீனம் உடலுக்கு ஒரு சாபக்கேடு. மனித உருவத்தில் உலாவும் ஒரு பொம்மையாய் இருக்க முடியுமே தவிர, எந்தக் காரியமும் ஊக்கமுடன், உற்சாகத்துடன் செய்து முடிக்க முடியாது. செய்யவும் மனம் வராது. அப்படிச் செய்யப் புகினும் ஒன்றும் பாதியுமாய் விட்டு விடுவார்கள். கடைசி வரை செய்து முடிக்கும் உறுதி அவர்களிடம் இருக்காது. சிலர் வாழ்க்கையிலேயே சோர்வு கொள்ளுவார்கள். இவைகளெல்லாம் மறைந்து நல்ல வீரிய நரம்புகளைப் பெற வேண்டுமானால் பாஸ்பரஸ் உணவுகளைத் தினசரி நன்கு உண்டு யோகாசனங்களும் செய்து வருவார்களானால் கூடிய சீக்கிரம் நாமே ஆச்சரியப் படும் வண்ணம் நரம்புகளில் சக்தி பிறந்து, முறுக்கேறுவதை அறிவோம். பின் ஆரோக்கியம், ஆனந்தம், எடுத்த காரியத்தில் வெற்றி முதலியனவெல்லாம் ஏற்படுமென்பதில் ஐயமில்லை.

இந்தப் பாஸ்பரஸ் முதியோர்களுக்கு வேண்டியது ஒரு கிராம்தான். குழந்தைகள் வளரும் வயதினர்களாதலால் அவர்களுக்கு ஒன்றேகால் கிராம் வேண்டும். இந்த அளவு அவர்களுக்குக் கிடைக்கவில்லையானால், வளர்ச்சி சரிவர ஏற்படாது. எலும்புகள், பற்கள் சரியாய் வளராது. படிப்பு ஏறாது. படித்ததை மறந்து விடுவார்கள். பலவீனம் உண்டாகும். டிரில் மாஸ்டருக்கு டிமிக்கி கொடுக்கவே பார்ப்பார்கள். பாஸ்பரஸ் உணவு நிறையக் கொடுத்தால், அவர்கள் எதிலும் உற்சாகம் கொள்ளுவார்கள். நன்கு ஆரோக்கியமாய் வளருவார்கள். ஸ்திரீகளுக்குக் கர்ப்ப காலத்திலும், பால் கொடுக்கும் போதும் ஒன்றரை முதல் ஒன்றே முக்கால் கிராம் வேண்டியதாய் இருக்கிறது. இந்த அளவு அவர்கள் உட்கொள்ளவில்லையென்றால், அவர்களின் உடலிலிருந்து குழந்தை வேண்டியதை என்னமோ எடுத்துக் கொண்டு விடும். ஆனால் தாய்க்கு உடல் தேய்ந்து, வலுவிழந்து, நரம்பு பலவீனம் ஏற்பட்டு விடும். ஆகையால் முன் ஜாக்கிரதையாகக்

கர்ப்ப காலத்திலும், குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் காலத்திலும் பாஸ்பரஸ் கலந்த உணவை மிகுதியாக உண்ண வேண்டும்.

சுரப்பிகள் என்று சில சதைக் கோளங்கள் நம் உடலில் இருக்கின்றன. அவைகளின் வேலைகளைப் பற்றியும், முக்கியத்துவத்தைப் பற்றியும் ஆரோக்கிய ரகசிய நூலில் விரிவாய் வரையப்பட்டிருக்கிறது. இந்தச் சுரப்பிகள் தான் உடலின் அவயவங்களைக் கட்டி ஆண்டு வருகின்றன. இப்பேர்ப்பட்ட சுரப்பிகள் நன்றாகத் தனிப் பணி ஆற்றுவதற்குப் பாஸ்பரஸ் வெகு இன்றியமையாதது. இது சரிவரக் கிடைக்கவில்லை யானால் சுரப்பிகள் வாடும். அதிலிருந்து சுரக்கும் ஹார்மோன் சத்துக்கள் போதுமான அளவு கிடைக்காது. பின் உடலில் வேலைகள் தாறுமாறாய் நடக்கத் துவங்கும். அதற்குப் பாஸ்பரஸ் உணவுகளை நிறைய உண்டு யோகாசனம் செய்து வருவார்களானல உலகத்தில் ஆனந்த மனிதனாக வாழலாம்.

ஒரு கிராம் என்பது ஒரு அவுன்ஸில் மூப்பதில் ஒரு பாகம்தான். நூறு கிராம் அல்லது மூன்றரை அவுன்ஸ் எடையுள்ள கீழ்க் காணும் பொருள்களில் பாஸ்பரஸ் அளவு :

மூட்டையின் மஞ்சள் கரு 0-59; பாதாம் பருப்பு 0-49; முந்திரிப் பருப்பு 0-45; நிலக் கடலை வறுத்தது 0-44; நிலக்கடலை பச்சை 0-39; தேங்காய் 0-24; கம்பு 0-35; சோளம் 0-28; தினை 0-29; மக்காச் சோளம் 0-33; கேழ்வரகு 0-27; பனிவரகு 0-33; கைக் குத்தல் பச்சை அரிசி (கடை) 0-17; கைக் குத்தல் புழுங்கல் அரிசி 0-28; மிஷின் பச்சரிசி 0-11; மிஷின் புழுங்கல் அரிசி 0-15; கருப்பு புட்டரிசி 0-24, அரிசி அவல் 0-22, மரத்திருகல் பச்சரிசி 0-23, வீட்டு கைக் குத்தல் 0-21, சாமை 0-36, கோதுமை 0-32, முழுக்கடலை 0-24, வறுத்த கடலைப் பருப்பு 0-31, உளுத்தம் பருப்பு 0-37, காராமணி0-49 என்னு 0-57 ; கடுகு 0-70.

இத்தனை பொருள்களிலும் மேல் குறித்த பாஸ்பரஸ் இருக்கிறது இதில் 0-20 க்கு மேற் பட்ட அளவுள்ள உணவுப் பொருள்களில் சிலவற்றைதான் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதற்கும் குறைந்த அளவுள்ள உணவுப் பொருள்கள் எத்தனையோ இருக்கின்றன. இதில் வரும் அளவு குறிப்புகள் எல்லாம் கூனூர் உணவு ஆராய்ச்சிக் கழகத்தாரால் வெளியிடப்பட்டவைகள். நமது நாட்டில் உபயோகத்திலுள்ள பொருள்களாகவும் பொறுக்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாம் உபயோகிக்காத பெயர் தெரியாத எத்தனையோ பொருள்கள் இருக்கின்றன. அவைகளை நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை.

இதில் மூட்டையின் மஞ்சள் கருவில் பாஸ்பரஸ் 0-59 கிராம் இருப்பதாக இருக்கிறது. வழக்கமுள்ளவர்கள் சாப்பிடலாம். அதைத்தான் சாப்பிட வேண்டுமென்று கட்டாயமில்லை. மற்றும் எத்தனையோவித உணவுப் பொருள்கள் கொடுக்கப்பட் டிருக்கின்


றன. அவைகளில் கூட நிறைய இருக்கின்றன. உதாரணமாக எள்ளு. இது எல்லோராலும் உபயோகிக்கக் கூடியது. பாதாம் இருக்கிறது. இது பணக்காரர்கள் உபயோகிக்கலாம். முந்திரிப் பருப்பு அதற்கு அடுத்த ஸ்தானம் வகிக்கிறது. நிலக் கடலை வறுத்தது, பச்சை இவை எல்லோராலும் உபயோகிக்கக் கூடியது. ஆனால் எதையும் ஒரு அளவுடன்தான் உபயோகிக்க வேண்டும். பாஸ்பரஸ் நிறைய வேண்டு 'மென்று அதாவது ஒரு கிராம் வேண்டு மென்று பாதாம் பருப்பில் ஒரு கிராம் பாஸ்பரஸ் கிடைக்க ஏழு அவுன்ஸ் ஒரு தடவையில் சாப்பிட்டால் என்ன ஆகும்? அஜீரணம்தான். நிலக்கடலையிலேயே நமக்கு வேண்டிய பாஸ்பரஸை அடைந்து விடலா மென்று அதையே 8, 9 அவுன்ஸ் சாப்பிட்டால் என்ன ஆகும்? பித்தம் அதிகமாகி வாந்தி ஆகும், அஜீரணமாகும், பேதியாகும், மற்றும் பல ஆகும். அதனால் நமது சுய புத்தியையும் செலுத்தி இந்தப் பொருள்கள் கூடுமான அளவு நமது தினசரி உணவுகளுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

சிலருக்கு நிலக்கடலை பிடிக்காது. அவர்கள் அதைவிட்டு வேறு உபயோகிக்கலாம். இவைகளில் கம்பு, தினை, சாமை மற்ற பல தானியங்களில் நிறைய பாஸ்பரஸ் இருக்கிறதாகப் புள்ளி விவரம் கொடுத்திருக்கிறது. இவைகளெல்லாம் சாப்பிட்டே ஆகவேண்டுமென்பதில்லை. யார் யாருக்கு எது பிடித்தமோ அதைச் சாப்பிடலாம். இதுவரை சாப்பிடாதவர்கள் மிகச் சிறிய அளவாவது சேர்க்க முயற்சி செய்யலாம். மேற்படி தானியங்கள் அநேகமாய்க் கிராமங்களில் உழைப்பாளிகள் ஏழைகள் உண்கிறார்கள். அதனால்தான் அவர்கள் திடமாக இருக்கிறார்கள். அப்படியென்று மற்றவர்களும் சாப்பிட்டால் உடலுக்குப் பிடிக்காது. ஏழைகளைப் பாதாம், பால்கோவா சாப்பிடு என்று சொல்ல முடியுமா? அதைப் போல்தான். அவரவர்கள் சக்தியை அனுசரித்து இவைகளை உபயோகித்து வரலாம். ஆனால் கடுகில் எல்லாவற்றையும் விட நிறையப் பாஸ்பரஸ் இருக்கிறது என்று அதை நிறைய உபயோகித்தால் ஆபத்துதான். ஏதோ சிறிது தாளிப்பில் உபயோகிக்கலாம். பத்தியமாக மோர்க் குழம்புகளில் சேர்க்கலாம். அதுவும் எப்பொழுதோ ஒரு நாள் தான். தினசரி கூடாது.

மிகக் குறைந்த அளவில் இருந்தும் மில் அரிசிகளின் புள்ளி விவரம் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் தெரிந்து கொள்ளட்டு மென்று தரப்பட்டிருக்கிறது. அந்த 0-11 அளவும், அரிசியைக் கழுவும்போது போய் விடுகிறது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். எனவே வீட்டில் மரத் திருகலில் தயார் செய்த அரிசியை அதிகம் கழுவாமல் ஒரு தடவை ஜலம் விட்டதும் கொட்டி விட்டு ஆவியில் சமைப்பது தான் உத்தமம். இந்த உணவு ஞானத்துடன் ஆசனங்களையும் செய்துவந்தால் நோய் அணுகாமல் வாழலாம்.

(தொடரும்)

## அவர் அவசரம்!



# வட்ட மேஜை

## புத்தாண்டு மலர்

தங்கள் சித்திரை மலரைப் பற்றி ஒன்றும் சொல்லப் போவதில்லை. ஏனென்றால் கல்கண்டு இனிக்கிறது, மல்லிகை வாசனையாயிருக்கிறது என்று சொல்வதுபோல் இருக்கும். ஆனால் அதில் உள்ள ராஜாஜி அவர்களின் "ரத்தினம் பிள்ளையின் துறவு" என்ற கதை இருக்கிறதே அதை எப்படிப் பாராட்டுவதென்றே தோன்றவில்லை. அநுபவம் மிகுந்த ஒரு மேதைதான் அவ்வாறு ஒரு கதையைப் புனைய முடியும், எவ்வளவு எளிமை, எத்துணை ஆழ்ந்த கருத்தைத் தன்னுள் கொண்டிருக்கிறது.

சோதிடம் பொய்யா, நிஜமா என்று தாங்கள் எழுப்பிய ஒரு பிரச்னைக்கு எத்தனை விசித்திர அநுபவங்கள் கொண்ட கடிதங்கள் படித்தும் அப் பிரச்னைக்கு ஒரு முடிவு காண முடியாமலிருந்தது. அந்தப் பிரச்னைக்கு எவ்வளவு அழகாக. எளிதாக, ஆணித்தரமாகத் தன் தீர்ப்பை மேற்கூறிய கதையில் வெளியிட்டிருக்கிறார் ராஜாஜி.

அப் பெரியாரை நான் பாராட்டுவது என்பது சுத்த அதிகப் பிரசங்கித்தனம். ஆனால் அக் கதையைத் தாங்கி வெளி வரும் பேறு பெற்ற தங்கள் சித்திரை மலரை, புத்தாண்டுப் பொன் மலரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

அரசியல் உலகின் ஈடு செய்ய முடியாத நஷ்டம் இலக்கிய உலகின் மகத்தான லாபமாயிற்று.

சேலம்
12—4—54 எஸ். கந்தசாமி

★

## சர்க்கார் பஸ் போக்குவரத்து

இன்றையச் சூழ்நிலையில், சென்னை நகருக்குள்ளாக மட்டும் சுமார் 54 'ரூட்'களில், சர்க்கார் பஸ்கள் ஓடுகின்றன. இது தவிர நகரின் சுற்றுப் புறங்களிலும் ஓடிக் கொண்டு தானிருக்கின்றன. ஆயினும், நம் சர்க்கார் நினைப்பது போல், "டிராம் நிற்பதற்கு முன்னும், நின்று விட்டதற்குப் பின்னருமான, பஸ் போக்குவரத்து பற்றிய புள்ளி விவரங்கள் குறித்து, ஸ்ரீமான் பொது ஜனத்துக்கு எள்ளளவும் கவலையோ, அக்கறையோ கிடையாது" என்பதை நமது சர்க்கார் முதலில் உணர வேண்டும்.

"அன்றாடம் காலையிலோ, சாயந்திரமோ, ஏதோ இரண்டு அல்லது மூன்றணா கொடுத்தோம்; அவசர அவசரமாகக் 'குடு குடு' என்று ஓடி, படாத பாடுகள் பல பட்டு, எகிறி, தொத்தி, ஏறினோம்; ஏதோ போய்ச் சேரவேண்டிய இடம் போனோம், வந்தோம்" என்ற நிம்மதியும், மனத் திருப்தியும் என்று ஏற்படும் என்பதுதான் அவர்கள் கவலை.

ஆபீஸ்—பள்ளிக்கூட நேரங்களைத் தவிர மற்ற நேரங்களில், பஸ்ஸில் நெரிசல் இல்லைதான். ஆனால் நெரிசலான இடைக் காலங்களில், கூடிய மட்டும் பொது ஜன கஷ்டத்தை நீக்க முயற்சி செய்துதான் வருகிறோம் என்று மேலும் மேலும் வீண் சமாதானம் சொல்லுவதைவிட, கூடிய மட்டிலும், சர்க்கார் மேலும் நகரப் பொது மக்களின் நல்லாதரவைப் பெற முயற்சி செய்வது தான் விவேகமான செயலாகும். இக்கட்டமான பஸ் நெருக்கடியைத் தீர்க்கச் சர்க்காரால் செய்யக் கூடிய, செய்யப்பட வேண்டிய, செய்து ஆக வேண்டிய சுலபமான வழிகள் பல உண்டு.

1. ஒவ்வொரு இடத்திலிருந்தும், நெருக்கடியான நேரங்களில், ஒவ்வொரு இடத்துக்கும் போக யிருக்கும் பஸ்களில், அதிகப்படியானவற்றை, இருக்கும் கூட்டங்களின் நிலைமைகளை அநுசரித்து, "எக்ஸ்பிரஸ்" பஸ்களாக ஓடச் செய்ய வேண்டும்.

2. பஸ் புறப்படும் நிலையங்களில், பஸ் புறப்படுவதற்கு முன்னதாகவே டிக்கட்டுகள் அனைத்தும் கொடுத்துவிட வேண்டும்.

3. நெருக்கடியான சுறுசுறுப்பான காலை, மாலை நேரங்களில், ஷெட்டுகளில் வீணாகப் பஸ்கள் நிறுத்தப் படாமல், மேற் கொண்டு ஷிப்டில் அல்லாதார்களைக் கொண்டு ஓட்டச் செய்யலாம். அல்லது காலையிலும் மாலையிலும் மேற்படி நெருக்கடி யுற்ற நேரங்களில் மட்டும் ஓட்டுவதற்காக டிரைவர்களும், கண்டக்டர்களும் புதியதாக நியமிக்கப் படலாம்.

ஆகவே, ராஜ்ய சர்க்கார் வீண் வாதங்கள் செய்து காலங் கடத்தாமல், பொது மக்களின் நலனை உத்தேசித்துப் பஸ் போக்குவரத்து சம்பந்தமாகத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கொல்லம்
18-3-54 டி. எஸ். சுப்பிரமணியம்

★

## இரவுக் கல்லூரிகள்

புது டில்லியில் காணும் எவ்வளவோ விநோதங்களில் மாலை தோறும் காரியாலயங்களை விட்டவுடன் நேராகப் புஸ்தகக் கட்டுடன் கல்லூரிக்குப் போகும் ஒரு கூட்டத்தையும் பார்க்கலாம். இளம் பிராயத்தினர் முதல் தலை நரைத்த கிழவர் வரை இந்த யாத்திரையில் கலந்து கொள்ளுகிறார்கள். வாழ்க்கையில் வசதியின்றி மேல் படிப்பு படிக்க முடியாமல் போய்ச் சர்க்கார் இயந்திரத்திலும் வேறு பல தொழில் அலுவலகங்களிலும் சிக்கிக் கொண்ட ஆயிரக் கணக்கான பேர்களைப் பட்டதாரிகளாக்கும் அரும் பணி ஒன்றைப் பஞ்சாப் கல்லூரி சென்ற ஆறு வருஷ காலமாகச் செய்து வருவது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம். அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் இன்னும் மற்ற மேலை நாடுகளில் இரவுக் கல்லூரிகள் இருந்து வருகின்றன. அந்த வசதி நம் நாட்டில் இதுவரை இருந்ததில்லை. தேசப் பிரிவினை காரணமாக மேற்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறி வந்த மாணவர்களுக்குக் கல்வி வசதி விட்டுப் போகக் கூடாதே என்று ஆறு வருஷங்களுக்கு முன் இந்த இரவுக் கல்லூரி துவக்கப்பட்டது.

ஆரம்பத்தில் அகதிகளுக்கென்று ஏற்பட்ட இக் கல்லூரி பிறகு உத்தியோகத்திலும் வேலையிலும் அமர்ந்திருக்கும் எல்லோரையும் சேர்த்துக் கொள்ளத் துவங்கியது.

"நமது படிப்பு இத்துடன், சரி" என்று மனக் குறைவுடன் படிப்பை நிறுத்தி விட்டுத் தொழிலில் ஈடுபட்ட எத்தனையோ பேருக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது இந்தக் கல்லூரி.

இந்த ஆறு வருஷ காலத்தில் மேல் படிப்புப் படித்துப் பட்டம் பெற்றவர்கள் எத்தனையோ பேர்! வடநாட்டார் தென்னாட்டார் என்ற வித்தி

யாச மின்றி எல்லா ராஜ்ய மக்களும் இந்தக் கல்லூரியில் கல்வி பயிலுகிறார்கள்.

இந்த வருஷம் மட்டும் இதில் மூவாயிரத்துச் சொச்சம் மாணவர்கள் படிக்கிறார்கள். இவ்வளவு பெரிய கல்லூரி ஆசியாவிலேயே கிடையாதாம்!

கல்லூரியில் காலடி வைப்போம் என்று கனவிலும் நினையாத மக்களுக்குப் பேரதிர்ஷ்டமாக வாய்த்த இந்தக் கல்லூரியின் காலம் 1955-ம் வருஷத்துடன் முடிவடைகிறது. இது மிகவும் துக்ககரமான விஷயம். டெல்லி சர்வகலாசாலை இந்தக் கல்லூரியின் நீடிப்பை ஆட்சேபிக்கிறதாம். மற்றொரு சர்வகலாசாலை தன் எல்லையில் எப்படிக் கல்லூரி நடத்தலாம் என்பது அவர்களது வாதம். "நீங்களாவது எடுத்து அப்படியே நடத்துங்களேன்" என்றால் அதற்கும் டில்லி சர்வகலாசாலை தயங்குகிறது. இம்மாதிரி நாடெங்கும் இராக் கல்லூரிகளைத் திறந்து வசதி செய்து தருவதற்குப் பதிலாக இருக்கிற ஒரு கல்லூரியையும் மூடப் பார்ப்பது விவேகமான செயலாகுமா!

புது டில்லி
15—2—54 ஆர். எஸ். வெங்கட்ராமன்

★

## காசு கரியாக வேண்டுமா?

நமது சென்னை மாகாணத்தில் மதுவிலக்கு வெற்றிகரமாக நடைபெற்று வரும் நேரத்தில் மது அரக்கனை விடக் கொடிய அரக்கன் தமிழ் நாட்டில் உலவிவருகிறான். அந்த அரக்கன் 'கிராஸ் வேர்ட்ஸ்' என்ற ரூபத்தில் பட்டிக்காட்டிலிருந்து பட்டணம் வரையும் அவன் தன் ஆதிக்கத்தைச் செலுத்த ஆரம்பித்து விட்டான். தினம் 12 அணவுக்கு வேலை செய்யும் தொழிலாளி இப் பூதத்திடம் அடைக்கலம் அடைய ஆரம்பித்து விட்டான். யாரோ ஒருவருக்கு மொத்தமாகப் பரிசு கிடைக்க அதற்குப் பல்லாயிரக் கணக்கான ஏழை மக்களின் காசு கரியாக வேண்டுமா! தனக்கு மொத்தமாகப் பரிசு கிடைத்து விடாதா என்ற பேராசையில் அன்றாடம் சம்பாத்தியம் செய்யும் கூலியை விடையில் கரியாக்குகிறார்கள். இதோடு நிற்கவில்லை. சிலருக்குப் பயித்தியம்கூடப் பிடித்து விட்டது. முன்னால் மது அரக்கன் கடையில் எவ்வளவு கூட்டம் இருந்ததோ அதேபோல் இந்தக் கூபன் கடைகளிலும் கூட்டம் நிற்கிறது. குறிப்பாக, ஆழ்வார் திருநகரியில் ஒருவருக்கு ஒரு தடவை பரிசு கிடைத்தது. இதைப் பார்த்தவுடன் ஆழ்வார் திருநகரியில் ஆண் பெண் அடங்கலாக எழுத ஆரம்பித்தார்கள். ஒரே மாதத்தில் ரூபாய் 8000 வரை ஏழை எளியவர் ஆண் பெண் அடங்கலாக எழுதி அனுப்பி விட்டார்கள். கண்ட பலன் பூஜ்யம்தான். இந்தப் போட்டி வினாவிடைகளைச் சர்க்கார் உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும். இல்லையேல் மது அரக்கனைவிட இந்த அரக்கன் ஏழை எளியவர்களை உறிஞ்சி விடுவான்.

அம்பலசேரி
6—4—54 மு. மா. முத்தையா பிள்ளை
தலைவர், கிராம காங்கிரஸ் கமிட்டி

★

## சிறுவனின் பரிதாப நிலை

சர்க்கார் காரியாலயங்கள் கல்வி நிலையங்கள் இவற்றில் வேலை செய்யும் ஊழியர்களிடமும் சாதாரண மக்களிடமும் குறுக்கு எழுத்துப் போட்டி பெரிதும் குடி புகுந்து விட்டது. காரியாலயங்கள், பள்ளிக்கூடங்கள் இவையெல்லாம் சூதாட்ட நிலையங்கள்போல்தான் தோன்றுகிறது.

என் பக்கத்து வீட்டுப் பையன் மிகவும் நல்லவன்தான். அவனுக்குக் குறுக்கெழுத்துப் போட்டியில் சிறிது சபலம் தட்டியது. பள்ளிச் சம்பளம் கட்டுவதற்காகப் பெற்றோரிடம் பணம் வாங்கி, பள்ளியிலும் செலுத்தி விட்டதாகச் சொல்லி விட்டான். ஆனால் பள்ளியில் பணம் செலுத்தப்படவில்லை. நான்கைந்து கட்டங்களை நிரப்பிப் பள்ளிச் சம்பளத்தைக் குறுக்கெழுத்துப் போட்டிக்கு அனுப்பி விட்டான்.

அன்று பரீட்சை நாள். பள்ளிக்கும் செல்லவில்லை. பெற்றோரிடம் சொல்லித் தன் தவறை உணர்ந்து திரும்பப் பணம் பெறவும் அவன் மனம் துணியவில்லை. அன்று முழுதும் அழுதுகொண்டே இருந்தான். சாப்பிடவும் இல்லை. முதல் நாள் பரீட்சையும் எழுதத் தவறி விட்டான். அன்று அந்தக் குழந்தை உள்ளம் என்ன பாடு பட்டிருக்கும்! இது போன்று எத்தனையோ சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

சொற்ப வருமானம் பெறும் சாதாரண மக்கள் கூடப் பெரும்பாலோர் தன் கடமையையும் மறந்து தன்னம்பிக்கையையும் இழந்து குறுக்கெழுத்துப் போட்டியில் மண்டையை உடைத்துக் கொள்ளும் பரிதாப நிலை என்றுதான் மாறுமோ!

ஆறுமுகநேரி
29—3—54 எஸ். சுப்பையா

★

## அவல உத்தியோகம்

நான் இந்தக் கடிதத்தைத் தங்களுக்கு மிகவும் மனவருத்தத்துடன் எழுதுகிறேன். சர்க்கார் ஊழியர் என்று சொல்லப்படும் "அவல வாழ்வு வாழும்" உத்யோகஸ்தரின் மனைவி எழுதுகிறேன்.

இரண்டு கட்சிகள் இருந்தால் ஒரு சாராருக்குத்தான் நியாயம் வழங்க முடியும். காரியம் அனுகூலம் ஆனவன் சந்தோஷமாயும், அனுகூலம் ஆகாதவன் சங்கடத்துடனும் செல்வதைக் காண்கிறோம். எங்கும் இது சகஜம். ஆனால், பலர் அசூயையின் காரணமாக, உத்தியோகஸ்தரின் பேரில் அநாமதேயக் கடிதம் எழுதி விடுகிறார்கள். இப்பொழுது அநாமதேயக் கடிதங்களுக்கு அதிக மகத்துவம் வைத்திருப்பதால், உடனே மேல் அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து விசாரிக்கச் சொல்லுகிறார்கள். இந்த அநாமதேயக் கடிதங்களில் வேண்டுமென்றே லஞ்சம் வாங்கி விட்டதாகவும், கேட்டதாகவும் எழுதி விடுகிறார்கள். குற்றம் செய்தவர்கள் மனோதிடத்துடன் இருந்து விடுகிறார்கள். குற்றம் செய்யாதவர்களின் நிலைமையை எடுத்துக் கூற யாராலும் முடியாது. உத்தியோக உயர்வுக்காகக் கஷ்டப்பட்டு வேலை செய்து வீட்டில் இருக்கும் குழந்தைகளின் நகைகளைக்கூட அடகு வைத்துச் சாப்பிடும் உத்தியோகஸ்தன் பேரில் அநாமதேயக் கடிதத்தின் மூலம் லஞ்சம் வாங்கினான் என்று எழுதியிருப்பதை நம்பி அவர்களை விசாரித்தால் அவன் மனம் என்ன பாடு படும் என்பதை எழுதுவது முடியாது. அனுபவிப்பவர்களுக்குத் தான் தெரியும். குற்றம் செய்யாதவனுக்கு எவ்வளவு மனம் வருத்தும் என்று நீங்களே எண்ணிப் பாருங்கள்.

எங்கள் தலைமுறையோடு இந்த உத்தியோகம் மாற வேண்டும். எங்கள் குழந்தைகள் இந்த அவல உத்தியோகம் பெறுவதைவிடத் தினம் கல் உடைத்துக் கூலி வேலை செய்து பிழைப்பதைப் பார்த்தால் அதுவே எங்களுக்கு ஆனந்தம் தரும்.

முசிறி
28—3—54 என். ஜி. ஓ.வின் மனைவி

சுற்றிலும் ஒரே சோர்வும் இருளும் சூழ்ந்து விட்டது. இரவு நெருங்கிக் கொண்டிருந்தது. காற்று பலமாக அடித்தது. சூரியன் அடிவானத்தை அடைந்து விட்டான். மாமரங்களில் சூரியனின் ஒளி விழுந்தது. மாமரங்களின் நிழல்கள் பயங்கரமாகக் காட்சி அளித்தன. எங்கோ வெகு தூரத்தில் யாரோ சிலர் சண்டை இட்டுக் கொண்ட சத்தம் கேட்டது. இனியனின் சோர்வு இன்னும் அதிகமாகி விட்டது. கொஞ்சம் பயமாகக் கூட இருந்தது. அவன் உடனே தேன்மொழியை அங்கிருந்து அழைத்துக் கொண்டு போவதற்கு விரும்பினான்.

"தேன்மொழி! என் அருமைத் தேன்மொழி!" என்று கனிவோடும் கவலையோடும் அழைத்தான்.

கலை நன்றாக ஊன்றிக் கொண்டு மிஞ்சி இருந்த வலிமை அனைத்தையும் ஒன்று சேர்த்து நிற்க முயன்றாள். அவளால் முடியவில்லை. அவள் கால்கள் வளைந்து தள்ளாடின. அவள் உடல் துடித்தது. சக்தி இன்றித் தடுமாறினாள். அப்படியே துவண்டு கீழே சாய்ந்தாள்.

இனியன் உடனே அவளைக் கீழே விழாமல் ஏந்திக் கொண்டான். சிறு குழந்தையைத் தூக்கிக் கொண்டு போவது போல் தேன்மொழியைத் தூக்கிக் கொண்டு அவள் வீட்டுக்குச் சென்றான்.

இனியன் தேன்மொழியைத் தூக்கி வந்ததைப் பார்த்த அவள் தந்தை துடிதுடித்து விட்டார். அவள் தாய் "என்ன, என்ன!" என்று கேட்டு அலறிக்கொண்டே ஓடி வந்தாள். இனியனின்




'நான் என்ன சொன்னேன்! அதற்காக ஏன் இப்படிப் பயப்படுகிறாய்!" என்றான்.

தேன்மொழி சற்று நேரம் மௌனமாக இருந்தாள். பிறகு இனியனைப் பார்த்தாள்.

"தேன்மொழி! என் மனம் மிகவும் சஞ்சலப்படுகிறது. எனக்கு வேதனை தாங்க முடியவில்லை. இங்கே நான் வந்தபோது எவ்வளவோ குதூகலமாக வந்தேன். என் தந்தை என்னைத் தனியே பிரித்து விட்டார். நான் சுதந்திரம் பெற்று விட்டேன். உன்னை என் விருப்பப்படியே எல்லாரும் அறியக் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று ஆனந்தப்பட்டுக் கொண்டு வந்தேன். அதைத்தான் உன்னிடம் ஆவலோடு சொன்னேன். நான் சொல்லி வாய் மூடுவதற்குள் நீ பயங்கரமாக எதை எதையோ சொல்லுகிறாய்! பேந்தப் பேந்த விழிக்கிறாய். எனக்குப் பயமாக இருக்கிறது. என் பயத்தைப் போக்குவதற்காகவாவது ஏதாவது திருப்தியாகச் சொல்லு. என் கவலையை நீக்க ஒரு முறையாவது உன் வாயைத் திறந்து சிரியேன். என்னைக் களிப்பூட்டுவதற்காகவாவது நீ வாய் திறந்து பேசேன்" என்றான்.

தன்னால் ஒரு பெரிய குடும்பத்தில் பிளவு ஏற்பட்டு விட்டது. தந்தையும் தனயனும் தனித்தனி ஆகி விட்டார்கள் என்பதை நினைத்த போதே தேன்மொழியின் நெஞ்சு வலித்தது. அவள் தடுமாறி மரத்தின்மீது விழுந்தாள். அவள் கண்களுக்கு எல்லாம் இருண்டன. எல்லாம் சுழல ஆரம்பித்தன. புற்கள் நிறைந்த தரையில் கால்

கையிலிருந்த தேன்மொழியை அவள் தந்தை வாங்கித் தன் மடியில் கிடத்திக் கொண்டார். இனியன் அவசரமாக ஓடி ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்து அவள் முகத்தில் தெளித்தான். தேன்மொழியின் தாயார் கையும் காலும் படபடக்க விசிறிக் கொண்டிருந்தாள்.

தேன்மொழி மெதுவாகக் கண்ணைத் திறந்தாள். தான் தந்தையின் மடியில் இருப்பதை உணர்ந்தாள். அவள் முகத்துக்கு நேர் மேலே அவள் தந்தையின் முகம் இருந்தது. எப்போதையும்விட அது அதிகக் கவலையுடன் இருந்தது.

பயத்தினால் விழித்துக் கொண்டிருந்த தேன்மொழியின் தந்தையின் கண்களில் இருந்து அவள் விசாலமான நெற்றியில் கண்ணீர்த் துளிகள் விழுந்தன. அது அவள் அழகிய கன்னத்தின் வழியே உருண்டோடிக் கழுத்தில் விழுந்தபோது அவளுக்குக் குறுகுறுத்தது.

"இப்பொழுது எப்படி இருக்கிறது தேன்மொழி!" என்று கேட்டான் இனியன்.

தேன்மொழி தன் தந்தையின் மடியிலிருந்து எழுந்து பக்கத்தில் உட்கார்ந்தாள். ஏதோ கனமான ஒன்று தன் தலையை அழுத்தியது போலவும் அது தோள்மீது விழத் தயாராக இருப்பதைப் போலவும் உணர்ந்தாள். தன் தலையைக் கையால் பிடித்து அதைப் பக்கவாட்டில் ஆட்டியவாறே நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"ஒன்றுமில்லை. ஏதோ மயக்கமாக இருந்தது. இப்பொழுது சற்றுத் தேவலாம்" என்றாள்.

அப்பொழுதுதான் அங்கிருந்தவர்களுக்கு எல்லாம் ஒரு நிம்மதி ஏற்பட்டது. அவர்கள் முகத்தில் சற்று மலர்ச்சி தென்பட்டது.

இனியன் தேன்மொழியின் தந்தையைத் தனியே அழைத்து வந்து எல்லா விஷயங்களையும் சொன்னான். அவன் தன் குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்டு விட்டான் என்று சொன்னதும் ஒரு கணம் அவள் திகைத்தாள். மறுகணம் அவளுக்கு மயக்கம் வந்து விட்டது என்பதை விளக்கினான்.

தேன்மொழியின் தந்தை இலேசாகச் சிரித்தார். "அதற்காக அவளுக்கு மயக்கம் ஏற்பட்டிருக்காது. வேறு ஏதாவது காரணம் இருக்க வேண்டும்" என்றார். "நீங்கள் இப்பொழுது போங்கள். காலைக்கு எல்லாவற்றையும் சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம்" என்றார். இனியனும் அவரிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

இனியன் சென்றவுடன் தேன்மொழியின் தந்தை வீட்டுக்குள் வந்தார். தேன்மொழியைப் பார்த்து "இனியனை அவர் தந்தை தம் குடும்பத்திலிருந்து தனியே பிரித்து விட்டாராமே" என்றார்.

தேன்மொழிக்குத் தன் தந்தையின் சொல் தன்னை வாள்கொண்டு அறுப்பது போலிருந்தது. அவள் உள்ளத்தில் தீ மூண்டெரிய ஆரம்பித்து விட்டது. அவளை அவள் தந்தையிடமிருந்து இன்னும் அப்பால் போகும்படி செய்தது.

அப்பால் சென்று தன் தந்தையின் முகத்தைப் பார்த்தாள். அவர் முகத்திலிருந்த மகிழ்ச்சி அவளை வேதனைப் படுத்தியது. அவளுக்கு நடுக்க மெடுத்தது. பேசாமல் தன் படுக்கை அறையை நோக்கி விரைந்து சென்றாள். 'தொப்' பென்று படுக்கையில் சோர்ந்து விழுந்தாள்.

** ** **

இனியனின் தாயார் இனியனின் கதைகளைக் கேட்டாள். இனியனுக்கும் அவன் தந்தைக்கும் நடந்த வாக்குவாதங்களைப் பற்றி யெல்லாம் கேட்டாள். அன்னையின் உள்ளத்தில் எத்தனையோ உணர்ச்சிகள் பெருகிக் கொண்டிருந்தன. இனியனுக்குப் பகையாக அவன் தந்தையே வந்து விட்டதாகத்தான் அவள் நினைத்தாள். அன்னைக்கு விஷயம் தெளிவாக விளங்கி விட்டது.

ஒரு சமயம் இனியன் அன்னையின் அறைக்கு வந்திருந்தான். அப்போதெல்லாம் அவன் அதிக உற்சாகமாயும், வேடிக்கை விந்நியாசங்கள் பேசிக் கொண்டும் இருந்ததை அன்னை நினைத்துப் பார்த்தாள். ஆனால் அப்பொழுதுகூட இனியனுக்கு அவன் கல்யாண விஷயத்தைப் பற்றிப் பேச்சு எடுத்தால் பிடிப்பதில்லை. சாப்பாடுகூட வேண்டாம் என்று சொல்லி விட்டுச் 'சட்'டென்று தன்னுடைய அறைக்குப் போய்ப் படுத்து உறங்கி விடுவான்.

இனியன் அடிக்கடி அவன் அன்னையிடம் வருவான். அவன் முகம் எப்பொழுதும் உற்சாகமாக இருக்கும். எப்பொழுதும் அவனிடம் அவசரமும் ஓட்ட சாட்டங்களும் அதிகம். ஒரு சமயம் அவன் ஊருக்குச் சென்றபோது தேன்மொழியை அவன் பார்த்ததும், அவள் அவனைப் பார்த்ததும், அடுத்த கணம் அவள் தன் வீட்டுக்குத் திடுதிடு என்று ஓடிப்போய் முகத்தை மூடிக் கொண்டு அழுததெல்லாம் நினைவுக்கு வந்தது.

விடுவிடென்று இனியனின் அறையைத் தேடிப் போனாள். இனியனின் அறை திறந்தே கிடந்தது. இனியன் தன்னுடைய படுக்கையில் சோர்ந்து போய்ப் படுத்துக் கிடந்தான். அவன் அருகில் மெதுவாகச் சென்று "இனியா!" என்று அன்போடு கூப்பிட்டாள் அன்னை.

"அம்மா" என்று அவளைக் கட்டிக் கொண்டான். அவன் கண்களில் கடகடவென்று கண்ணீர் பெருக ஆரம்பித்து விட்டது.

"எல்லாவற்றையும் விவரமாகக் கேள்விப்பட்டேன்" என்றாள் அன்னை.

இனியன் பேசாமல் இருந்தான்.

"நீ எங்களை விட்டு விட்டுப் போய்விடப் போகிறாயா!" என்று அன்னை நடுக்கம் நிறைந்த குரலில் தயக்கத்துடன் கேட்டாள்.

"அம்மா! தேன்மொழி இல்லாமல் என்னால் இருக்க முடியாது."

"உன்னால் அவளை மறக்க முடியாதா!"

"முடியவில்லையே அம்மா!" என்று கண்ணீருடன் கம்பிய குரலில் சொன்னான்.

"நன்றாக யோசித்துப் பார்! உனக்கு மிகுந்த செல்வாக்கு இருக்கிறது. உன்னை எல்லாரும் விரும்புகிறார்கள். இங்கே இருப்பவர்களில் நமது குடும்பம்தான் பெரிய குடும்பம். அப்பாவுக்கு உள்ள பெருமை கௌரவம் எல்லாம் உனக்குத் தெரியும். நீ தேன்மொழியைக் கல்யாணம் செய்து கொள்வதால் அவர் கௌரவம் எவ்வளவு குறையும் என்று யோசித்தாயா! உன்னால் அவர் எவ்வளவு மனம் உடைந்து போய் இருக்கிறார் தெரியுமா!" என்றாள் அன்னை.

இனியன் இந்தச் சொற்களைக் கேட்டதும் ஒரு கணம் திகைத்துப் போனான். ஆனாலும் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு அழுத்திச் சொன்னான்.

"அம்மா! நான் மனதில் தீர்மானித்து விட்டேன். இந்த உறுதியைக் கெடுக்கும்படி எதுவும் என்னைச் செய்ய முடியாது" என்றான். அவன் குரல் மூச்சு வாங்கித் திணறுவது போலிருந்தது.

இதுவரை அன்னை இனியனின் பேச்சிலேயே முழு கவனத்தையும் செலுத்தி விட்டதால் அவனைச் சரியாகவே கவனிக்கவில்லை. அவன் மூச்சுத் திணறுவதை அப்பொழுதுதான் உணர்ந்தாள். அவன் உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். நெருப்பாகச் சுட்டது. அவன் மிகவும் சோர்ந்து காணப் பட்டான். அன்னை எல்லாவற்றையும் மறந்து விட்டாள். அவளுக்கு இனியனின் உடலைப் பற்றிய கவலை வந்து பற்றிக் கொண்டது.

அன்னையின் நெஞ்சில் புதிதாக ஒரு பெரிய கல்லை ஏற்றி வைத்ததுபோல் ஆகி விட்டது.




அவர்கள் பேசிக் கொண்டிருந்த விஷயத்துக்கெல்லாம் முடிவு காணத் துணிந்து விட்டாள். ஆனால் ஏதோ நேரக்கூடாத விஷயம் நேரப்போகிறது. 'அவன் தேன்மொழியைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறான்' என்று நினைத்ததும் அவளுக்கு அவள் கணவரின் நினைவு வந்தது. இனியனின் திருமண விஷயத்தைப் பற்றிப் பேசிய

போது அவர் சொன்ன சொற்கள் அவள் நினைவுக்கு வந்தன. 'இனியனைக் கலந்து கொண்டு தான் நான் அவன் திருமணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நான் ஒருபோதும் அவன் எண்ணத்துக்குத் தடையாக இருக்க முடியாது' என்று தன் கணவர் கூறிய சொற்களை நினைத்துப் பார்த்தாள். இப்பொழுது அதை மறந்து தன்னுடைய ஒரே மகனை வாட்டிப் பிழிந்து அவன் அதே ஏக்கமாய்ப் படுக்கையில் விழுந்து விட்டதையும் எண்ணிப் பார்த்தாள். நேரே தன் கணவரிடம் செல்லத் தீர்மானித்தாள். அதற்குள் இனியனின் உடம்பைக் கவனிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தாள். வைத்தியருக்கு ஆள் அனுப்பி வைத்தாள். இனியனைப் பார்த்து "வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளாதே! நான் உன் திருமணத்தை முடித்து வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன்" என்றாள்.

இனியன் தன் தாயின் அன்பு முகத்தைச் சற்று நேரம் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தான். "அம்மா! நான் உங்களை மிகவும் சிரமப்படுத்தி விட்டேன்" என்றான். மெதுவாகத் தலை நிமிர்ந்து தன் அன்னையின் கண்களில் பிரகாசித்துக் கொண்டிருந்த உறுதியைக் கண்டான்.

அன்னைக்கு என்ன என்னவோ நினைவுகள் வந்து விட்டன. அவள் அழவேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்தாள். இனியனுக்கு எதிரில் கண்ணீர் விட விரும்பவில்லை. அங்கிருந்து எழுந்து வெளியில் சென்றாள். வெளியில் ஒரு மூலையில் தலையைச் சாய்த்துக் கொண்டு ஓசையில்லாமல் அழுது கண்ணீர் பெருக்கினாள். விம்மி விம்மி அழுது அவள் விட்ட பெருமூச்சைக் கேட்டு இனியன் படுக்கையிலிருந்து எழுந்து வந்தான்.

"அம்மா! என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்கெல்லாம் சிரமம் கொடுத்து விட்டேன்" என்று மெதுவாகச் சொன்னான்.

அன்னை அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு "அப்படியெல்லாம் நீ ஒன்றும் செய்யவில்லை, உன் உடம்பு சரியில்லாத போது நீ ஏன் எழுந்து வந்தாய்!" என்று துயரமான குரலில் கூறிக் கொண்டே இனியனின் தலையைத் தன் மார்போடு சேர்த்துக் கொண்டாள்.

"ஒரு தாய் தன் மகனுக்காக வருத்தப்படாமல் இருக்க முடியுமா! நான் கவலைப்படா விட்டால் உனக்கு வேறு யார் தான் கவலைப்படப் போகிறார்கள்!" என்று கேட்டாள்.


அவள் மார்பில் சாய்ந்து கொண்டிருந்த இனியனுக்கு அப்படியே நிற்க முடியவில்லை. தலையைச் சுற்றிக்கொண்டு மயக்கம் வந்தது. "அம்மா!" என்று மெதுவாகக் கூப்பிட்டான். அப்படியே சோர்ந்து தரையில் விழுந்து விட்டான்.


அன்னை நடுநடுங்கிப் போய் விட்டாள். பயங்கரமாக அலறினாள். அவள் அலறல் சத்தத்தைக் கேட்ட இனியனின் தந்தை அங்கு ஓடி வந்தார். இனியன் மயங்கி விழுந்து கிடப்பதையும், அன்னை தலைவிரிகோலமாகக் கதறிக் கொண்டிருப்பதையும் பார்த்தார். மூச்சே நின்று விடும் போல வேதனைப் பட்டார். இனியனைத் தூக்கி வந்து அவன் படுக்கையில் போட்டார். அன்னையைப் பார்த்து, "என்ன நடந்தது!" என்று கேட்டார்.

"எல்லாம் உங்களாலேதான். பெற்ற மகன் என்றும் பாராமல் என்ன என்னவோ செய்து விட்டீர்கள். இளம் மனசு அவனால் தாங்க முடியவில்லை" என்றாள். அவள் உதடுகள் துடித்தன. கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

தந்தை வாய் திறக்காமல் மௌனமாக இருந்தார். அதற்குள் அன்னை அனுப்பி வைத்த ஆள் வைத்தியருடன் வந்து சேர்ந்து விட்டான்.

வைத்தியர் இனியனின்கையை எடுத்து நாடியைப் பிடித்துப் பார்த்தார். இதயத் துடிப்பைக்






காட்டும் குழாயைக் காதில் மாட்டிக் கொண்டு அவன் இதயத் துடிப்பைக் கூர்ந்து பார்த்தார். ஜுர வேகத்தை அளக்கும் கருவியை அவன் வாயில் வைத்துப் பார்த்தார். "ஏதோ பயங்கர அதிர்ச்சியால் இதயம் தாக்கப்பட்டிருக்கிறது. ஓய்வு வேண்டும். அவன் மனத்தைப் பாதிக்கும் விஷயங்களை அவனிடம் பேசக்கூடாது. அத்துடன் கடுமையான ஜுரம் வேறு அடித்துக் கொண்டிருக்கிறது. மிகவும் ஜாக்கிரதையாகத் தான் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று சொன்னார்.

இனியனின் தந்தைக்கு மனசு மாறி விட்டது! அவர் தன் கௌரவம், கொள்கை எல்லாவற்றையும் மறந்தார். எப்படியாவது தம் மகனுக்கு ஆபத்து ஏற்படாமல் இருந்தால் போதும் என்ற முடிவுக்கு வந்து விட்டார். பெற்ற பாசம் அல்லவா! அது சும்மா விட்டு விடுமா!

டாக்டர் இனியனுக்கு வேண்டிய மருந்துகளைக் கொடுத்து விட்டுப் போய் விட்டார். இனியன் கடுமையான ஜுரத்தில் ஏதேதோ முனகிக் கொண்டிருந்தான் "அப்பா! உங்கள் மனசை ரொம்பவும் கஷ்டப்படுத்தி விட்டேன். தேன்மொழியைக் கல்யாணம் செய்து கொள்ளாமல் கூட இருந்து விடுகிறேன், அப்பா! ஆனால் வேறு யாரையும் கல்யாணம் செய்து கொள்ளும்படி வற்புறுத்தாதீர்கள்" என்று பிதற்றினான். அடுத்த கணம் "தேன்மொழி! தேன்மொழி! நீ எப்படி இருக்கிறாயோ! என்னால் உனக்கு எவ்வளவு கஷ்டம். உன்னுடைய நல்ல மனசைக் கெடுத்து விட்டேனே!" என்று கண்ணீர் விட்டான்.

இந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் இனியனின் தந்தையை வாள்கொண்டு அறுப்பது போலிருந்தது! அவர் மௌனமாக இனியனுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தார். இனியன் நல்ல ஜுரத்தில் உளறிக் கொண்டிருக்கிறான் என்பது அவருக்குத் தெரியும். இருந்தாலும் அவன் சொன்ன வார்த்தைகளை அவரால் தாங்க முடியவில்லை. இந்த வார்த்தைகளுக்குப் பின்னால் தவிர்க்க முடியாத ஒரு கடமை தமக்கு இருப்பதை உணர்ந்தார். இனியனின் கடமை உணர்ச்சியை எண்ணி எண்ணி வியந்தார்.

இதுவரை பேசாமல் உட்கார்ந்திருந்த அன்னை திடீரென்று உணர்ச்சியுடன் பேச ஆரம்பித்தாள். "எதற்காக முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறீர்கள்! அவன் இஷ்டப்படியே கல்யாணம் செய்து வைப்பதாகத் தான் அவனிடம் சொல்லுங்களேன். அவன் இஷ்டத்துக்கு விரோதமாக நடக்கப் போவதில்லை என்று என்னிடம் சொன்னீர்களே. உங்கள் பிடிவாதத்துக்காக நான் என் அருமைக் குழந்தையைத் தவிக்கவிட முடியுமா! ஐயோ! என் பெற்ற வயிற்றை என்னவோ செய்கிறதே" என்று அழுது புலம்ப ஆரம்பித்து விட்டாள்.

இனியனின் தந்தை அன்னையின் வாயைப் பொத்தினார். "இங்கு வீணாக அழுது கொண்டிருக்காதே. இனியன் உடம்பு குணமாகட்டும். அவன் விருப்பப்படியே தேன்மொழியை அவனுக்குத் திருமணம் செய்து வைத்து விடுகிறேன். அதை நானே அவனிடம் சொல்லக்கூடாது! ஏற்கெனவே அதிர்ச்சி அடைந்துள்ள அவன் இதயம் இதைக் கேட்டு மேலும் அதிர்ச்சி அடையலாம். ஆகையால் நான் அதற்கு ஒத்துக் கொண்டேன், அவன் கல்யாணத்தைச் செய்து வைத்து விடுகிறேன் என்று நான் சொன்னதாகச் 'சொல்லி

விடு" என்றார். இப்படிச் சொன்னவுடன் அவருக்கு ஏதோ பெரிய வேதனை குறைந்ததுபோல உணர்ந்தார். சென்ற சில தினங்களாக அவர் அடைந்து வந்த துன்பம் தொலைந்து விட்டதாக நினைத்தார். அன்னையின் முகத்தில் மகிழ்ச்சி துள்ளி வழிந்தது. இனியன் ஆழ்ந்த நித்திரையில் அசையாமல் படுத்துக் கிடந்தான்.

** ** **

படுக்கச் சென்றபொழுது அன்றைய நிகழ்ச்சிகளைப் பற்றி அன்னை எண்ணமிட்டாள். தலையணையிலிருந்து தலையைத் தூக்கி ஆச்சரியத்துடன் அறை முழுவதையும் ஒருமுறை பார்த்தாள். இனியன் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தான். அவள் கணவரும் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தார். வாழ்க்கையில் முதல் தடவையாக அவள் அந்த மாதிரி வேதனைப்பட்டாள். ஆயினும் அவளுக்கு அது அவ்வளவு வேதனையைக் கொடுக்கவில்லை. காரணம் தன் கணவர் இனியனின் திருமணத்தைப் பற்றி ஒரு முடிவைச் சொல்லி விட்டதுதான். இனியனைப்பற்றி நினைத்தாள். அவன் காதலித்த தேன்மொழியைப் பற்றி நினைத்துப் பார்த்தாள். அவள் மனத்தில் கருணை பொங்கியது. அவளுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்ய வேண்டும் என்று தோன்றியது. அன்னை இனியன் ஜுரத்தில் உளறியதிலிருந்தும், வேலைக்காரர்கள் மூலமாகக் கேள்விப் பட்டதிலிருந்தும் தேன்மொழியும் படுக்கையில் விழுந்து விட்டாள் என்பதைத் தெரிந்து கொண்டாள். தேன்மொழிக்குத் தங்களுடைய அபிப்பிராயத்தை நாசுக்காக எடுத்துச் சொல்லுவதற்கு ஒரு தகுந்த ஆள் இல்லையே என்று நினைத்தாள். தனக்குள்ளாகவே சிரித்துக் கொண்டாள். பிறகு இனியனைப் பற்றியும் தேன்மொழியைப் பற்றியும் சேர்ந்து அவள் சிந்தனை சென்றது. அவளுடைய உள்ளத்தில் அவர்கள் இருவர் உருவமும் ஒன்றாகக் காட்சி அளித்தன. 'சரியான இளம் தம்பதிகள்தான். இனியனுக்கு ஏற்றவள்தான்' என்று எண்ணி மகிழ்ந்தாள். அந்த அருமையான எண்ணம் அவள் இதயத்துக்கு இதத்தைக் கொடுத்தது. இதுவரை அறியாமையால் மூடியிருந்த கண்களைத் திறந்து வைத்தது போல அவளுக்கு ஒரு புதிய தைரியம் வந்தது! நன்றி உணர்ச்சியோடு தன் கணவரைப் பார்த்தாள். அவரும் இது போன்ற இனிய நினைவுகளில் ஆழ்ந்திருப்பவர் போல அமைதியாகப் புரண்டு படுத்தார்.

மறுநாள் காலை அன்னை எழுந்திருந்ததும் இனியனின் படுக்கைக்கு அருகில் சென்று அவன் நெற்றியில் கையை வைத்துப் பார்த்தாள். ஜுரம் எல்லாம் விட்டிருந்தது! இனியன் கண்ணை விழித்து அன்னையின் முகத்தைப் பார்த்தான். அவள் மகிழ்ச்சியோடு இருந்தாள். அவள் முகத்தைப் பார்த்ததுமே இனியனுக்கு மனத்திருப்தியாக இருந்தது. "என்ன அம்மா!" என்று ஆசையோடு கேட்டான்.

"இப்பொழுது உனக்கு எப்படி இருக்கிறது!" என்றாள் அன்னை. "ரொம்பவும் களைப்பாக இருக்கிறது. அவ்வளவுதான்" என்றான்.

புன்னகை செய்து கொண்டே அன்னை அவன் காதோடு தந்தை சொன்ன விஷயத்தைச் சொன்னாள். இனியன் அப்படியே அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டான். "என்ன இருந்தாலும் அப்பா ரொம்ப நல்லவர் அம்மா!" என்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் இனியனின் தந்தை அங்கு வந்தார். இனியன் படுக்கையிலிருந்து எழுந்திருக்க முயன்றான். அவனை அப்படியே படுத்திருக்கும்படி சொல்லி விட்டுத் தந்தை அவன் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். இதுவரையில் ஒன்றுமே நடக்காதது போல, எப்பொழுதும் இருப்பதுபோல் சகஜமாக "உடம்பைப் பார்த்துக்கொள். வீணாக மனசை அலட்டிக் கொள்ளாதே. டாக்டர் வந்தவுடன் எனக்குச் சொல்லி அனுப்பு" என்று சொன்னார்.

இனியன் "ஆகட்டும்" என்று சொல்லுவது போல மெதுவாகத் தலையை அசைத்தான்.

தந்தை அங்கிருந்து எழுந்து சென்றார். அவர் சென்றவுடன் இனியன் தன் தந்தையைப் பற்றி நினைத்தான். அவனுக்கு இப்பொழுது அவன் தந்தை மிகப் பெரியவராகத் தோன்றினார்; உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் விட உயர்ந்த பொருளாக அவரை எண்ணி மகிழ்ந்தான். அவரை அப்படி மாற்றிய தன் அன்னையை மனத்துக்குள் எண்ணி வணங்கினான். அடுத்த கணம் அவனுக்குத் தேன்மொழியின் நினைவு வந்துவிட்டது. அவள் இப்பொழுது எப்படி இருக்கிறாளோ என்று வேதனைப்பட்டான். ஒரு நாளில் நடந்துவிட்ட இந்தச் சம்பவம் அவனுக்குத் தேன்மொழியைப் பார்த்து எத்தனையோ மாதங்கள் கடந்து விட்டது போன்ற ஒரு பிரிவு உணர்ச்சியைக் கொடுத்தது.

அன்னை அவனுக்குக் காப்பி எடுத்துக் கொண்டு வந்தாள். அங்கேயே பல் துலக்கிவிட்டுக் காப்பி சாப்பிடும்படி சொல்லிவிட்டுச் சென்றாள்.

இனியனின் அறையைவிட்டு அன்னை வெளியில் வந்ததும் ஒரு பெண்ணும் வாலிபனும் அங்கு வந்ததைக் கண்டாள். அவர்களைப் பார்த்ததும் அன்னை திகைத்துப் போய் நின்று விட்டாள்.

அந்தப் பெண் நவநாகரிகமாகத் திடகாத்திரத்துடன் அடக்க ஒடுக்கமாக இருந்தாள். அன்னை அவர்களை "வாருங்கள்" என்று அழைத்ததும் அந்தப் பெண் தன் கையில் வைத்திருந்த பெரிய தோல் பெட்டியைக் கீழே குனிந்து வைத்து விட்டுக் கைகூப்பி வணங்கினாள்.

"இனியரின் தாயார்தானே நீங்கள்" என்றாள்.

"ஆமாம்" என்றாள் அன்னை. அந்தப் பெண்ணின் அடக்கமும் பணிவும் அன்னையை வெகுவாகக் கவர்ந்து விட்டது.

"உங்களைப் பார்த்தவுடனேயே நீங்கள்தான் இனியரின் தாய் என்பதைத் தெரிந்து கொண்டேன். நானும் இவரும்..." என்று தன் அருகில் நின்று கொண்டிருந்த வாலிபரைச் சுட்டிக் காட்டி "கல்லூரியில் இனியருடன் ஒன்றாகச் சேர்ந்து படித்தவர்கள். அவர் உங்களைப் பற்றி அடிக்கடி சொல்லுவார்" என்றாள்.

அவள் பேச்சு நிதானமாக இருந்தது. குரல் இனிமையாக இருந்தது. அவள் கண்களில் இளமை நகை புரிந்து கொண்டிருந்தது.

"உன் பெயர் என்ன?" என்றாள் அன்னை.

"என் பெயர் சுந்தரி. இவர் பெயர் மாணிக்கம்" என்றாள் சுந்தரி.

"அம்மா! யார் அது?" என்று அறையிலிருந்து மெலிந்த குரலில் கேட்டான் இனியன்.

அன்னை சுந்தரியையும் மாணிக்கத்தையும் அழைத்துக் கொண்டு இனியனின் அறைக்குள் சென்றாள். "அடாடா! சுந்தரியும் மாணிக்கமுமா! வாருங்கள், வாருங்கள்!" என்று வரவேற்றான். படுக்கையிலிருந்து எழுந்திருக்க விரும்பினான். முடியவில்லை. அன்னை அவனை அப்படியே படுத்திருக்கும்படி சொன்னாள். இனியனின்

முகத்தில் ஏற்பட்டிருந்த மகிழ்ச்சியைப் பார்த்த அன்னை மிக்க மகிழ்ச்சி அடைந்தாள்.

இனியன் படுக்கையில் இருப்பதைப் பார்த்துச் சுந்தரியும் மாணிக்கமும் திகைத்துப் போய் விட்டார்கள். சுந்தரி மிகுந்த கவலையோடு அவன் அருகில் சென்று விசாரித்தாள். மாணிக்கம் இனியனின் உடம்பை மெதுவாக அழுக்கிப் பிடித்துக் கொண்டு "என்ன உடம்புக்கு! நீ ஒன்றும் இதைப் பற்றி எழுத வில்லையே!" என்று ஆச்சரியத்தோடு கேட்டான்.

அவர்கள் இருவரும் இனியனிடம் காட்டும் அன்பைக் கண்டு அன்னை வியந்து போனாள். "ஒன்றுமில்லை. நேற்றுதான் இருந்தாற்போல் இருந்து இனியனுக்கு மயக்கம் வந்து ஜுரம் வந்து விட்டது. இப்பொழுது தேவலாம். வா அம்மா, சுந்தரி! குளித்து முழுகிப் பலகாரம் சாப்பிட்டு விட்டுப் பிறகு வரலாம்" என்று சுந்தரியை அழைத்துக் கொண்டு போனாள் அன்னை.

இனியன் அங்கிருந்த வேலைக்காரனை அழைத்தான். மாணிக்கத்தை அழைத்துப் போய் அவன் குளித்து விட்டுச் சாப்பிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி உத்தர விட்டான். மாணிக்கமும் அங்கிருந்து வேலைக்காரனுடன் காலைக்கடன்களை முடிப்பதற்குச் சென்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் அன்னை சுந்தரி மாணிக்கம் மூவரும் இனியனின் அறைக்குள் வந்தனர். "பலகாரம் எல்லாம் சாப்பிட்டாகி விட்டதா!" என்று கேட்டான் இனியன். "தங்கள் அருமை அன்னையின் தயவில் எல்லாம் முடிந்து விட்டது" என்று இனியனின் அன்னையைப் பார்த்துக் கொண்டே சொன்னாள் சுந்தரி.

பளபளவென்று மின்னிக் கொண்டிருந்த சுந்தரியின் கருங்கூந்தல் அலை அலையாக அவிழ்ந்து விழுந்தது. அவள் சிரித்துக் கொண்டே கடந்தாள். அன்னையின் கண்கள் அவளையே பின் பற்றிச் சென்றன. சற்று நேரம் அவர்களுடன் பேசி விட்டு அன்னை சென்று விட்டாள்.

பிறகு சுந்தரியும் மாணிக்கமும் தங்களைப் பற்றி இனியனிடம் சொன்னார்கள். தாங்கள் கிராமத்துக்குச் சென்று சேவை செய்த பெருமையைச் சொல்லிக் கொண்டார்கள். கடைசியில் தாங்கள் இருவரும் கல்யாணம் செய்து கொள்ள முடிவு செய்திருப்பதைப் பற்றியும் சொன்னார்கள். படுக்கையில் சோர்ந்து படுத்திருந்த இனியன் 'சட்' டென்று எழுந்திருந்து சுந்தரியின் கையைப் பிடித்து மாணிக்கத்தின் கையில் வைத்துச் சந்தோஷமாகக் குலுக்கினான். நீங்கள் "இருவரும் பல்லாண்டு வாழ வேணும்" என்று அவர்களை வாழ்த்தினான். இனியன் அப்படிச் செய்தது சுந்தரிக்குத் திருப்தியாக இருந்தது. இப்பொழுதுதான் அவள் உண்மையிலேயே சந்தோஷப்பட்டாள்.

இனியன் களைத்துப் படுக்கையில் சாய்ந்து விட்டான். அவனுக்குத் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொள்ளச் சற்று நேரம் பிடித்தது. 'நான் இப்பொழுதுதான் மிக்க சந்தோஷப்படுகிறேன். மாணிக்கம் உண்மையைத் தெரிந்து கொண்டான். காதலின் சக்தியைப் புரிந்து கொண்டான்" என்று சொல்லிச் சிரித்தான் இனியன். மாணிக்கத்துக்குத் தான் ஏற்கெனவே காதலித்த ஒரு கல்லூரி மாணவியைப் பற்றி நினைவு வந்தது. அவன் கடைசியில் பணத்துக்கு ஆசைப்பட்டு வேறு ஒருவளை மணந்து கொண்ட கன்றுவியை எண்ணினான். தன்னுடைய உள்ளத்திலும் உண்மையான காதல் உணர்ச்சி இல்லாமல் வெறும் பருவ உணர்ச்சிக்கு ஆளாகி இருந்த தன் பண்பாடற்ற நிலையை எண்ணிச் சிரித்தான்.

சுந்தரியும் மாணிக்கமும் இனியனின் படுக்கை அருகில் இருந்த இரண்டு நாற்காலிகளில் உட்கார்ந்தனர். இனியன் சுந்தரியைப் பார்த்து "ஏதாவது ஒரு பாட்டுப் பாடேன், கேட்கலாம். உன் சங்கீதத்தைக் கேட்டு எத்தனையோ நாட்கள் ஆகி விட்டன" என்றான்.

சுந்தரி மிகுந்த உற்சாகத்துடன் இருந்தாள். எந்தவிதமான தடையும் சொல்லாமல் தன் இனிய குரலில் கம்பீரமாகப் பாட ஆரம்பித்தாள்.

சிறிது நேரத்தில் அந்த அறை முழுவதும் இசை வெள்ளமாகி விட்டது. காதற் பறவைகள் அங்கு மிங்கும் பறந்து திரிவதுபோல் இசை அலைகள் எங்கும் ஒலித்துத் திரிந்தன. ஒரு சமயம் சுந்தரியின் குரல் தெளிவாகவும் உயர்ந்த ஸ்தாயியிலும் கேட்டது. மறுபடியும் அயர்ந்து அடங்கி இனிமையாக இருந்தது.

இனியன் அவள் இசை வெள்ளத்தில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தான். நாற்காலியில் உட்கார்ந்திருந்த மாணிக்கம் கருங் கூந்தலுக்கு நடுவே பிரகாசித்துக் கொண்டிருந்த சுந்தரியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சூரிய ஒளி ஜன்னல் வழியாக அவர்கள் இருந்த அறையுள் வீசிக் கொண்டிருந்தது. வெளியே யிருந்த மரத்தின் கிளைகள் காற்றில் அசைந்து ஆடிக்கொண்டிருந்தன. அறை முழுவதும் இசை நிரம்பி யிருந்தது. இனியன் இசையை ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்தான்.

சுந்தரி நெடுநேரம் பாடிக் கொண்டிருந்தாள். அவள் பாட்டு இனியன் உள்ளத்தைச் சலனப் படுத்தி விட்டது. தெளிவில்லாத பற்பல உணர்ச்சிகளும் சிந்தனைகளும் மாறி மாறி அவன் உள்ளத்தை ஆட்கொண்டு விட்டன. அமைதியான இன்பத்தையும், அற்புதமான சுகத்தையும் அவன் மாறி மாறி அனுபவித்தான். அவை அவன் இருதயத்தில் எத்தனையோ வித நம்பிக்கைகளை ஊட்டி, தைரியத்தை அளித்தன. அவனுடைய இதயத்தைத் தழுவித் தாலாட்டின.

இனியனின் தாயார் அங்கு எப்பொழுது வந்தாளோ தெரியாது. சுந்தரி பாட்டை நிறுத்திய வுடன் அவள் பேச ஆரம்பித்தாள்.

"சுந்தரி உன் பாட்டு ரொம்ப இனிமையாக இருந்தது. அபாரம், அபாரம்!" என்று தலையை ஆட்டிக் கொண்டே சொன்னாள்.

பிறகு வெகு நேரம் அமைதியாக அவர்கள் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டே இருந்தார்கள். கடைசியாக அன்னை துணுக்கமடைந்து "ஐயோ, வெகுநேரம் வம்பளந்து கொண்டிருந்து விட்டேனே! நாமெல்லாம் சாப்பிடுவதற்கு நேரமாகி விட்டது!" என்றாள்.

இனியனுக்குப் பத்தியமாகச் சாப்பாடு தயார் பண்ணி அனுப்பி வைப்பதாகச் சொல்லி விட்டு அன்னை அங்கிருந்து எழுந்து சென்றாள்.

** ** **

சுந்தரியுடனும் மாணிக்கத்துடனும் பேசிக் கொண்டே பகல் பொழுதைக் கழித்து விட்டான் இனியன். சுந்தரி பழைய கதைகளை அடுக்கடுக்காய்ச் சொல்லிக் கொண்டே இருந்தாள். புது வாழ்வு பெற்ற அவள் உள்ளத்தின் அடிவாரத்திலிருந்து அவை வந்து கொண்டே இருந்தன.

அவனால் அவைகளை அமுக்கி வைக்க முடியவில்லை. அவன் உள்ளம் மேலும் விரிவடைந்தது.

வசந்த காலத்து மாலைக் கதிரவன் வானத்தின் கருணையுடன் ஒளி பரப்பிக் கொண்டிருந்தான். மந்தமாருதம் ஜில்லென்று அந்த அறையில் வீசிக் கொண்டிருந்தது. பறவைகளின் இன்னிசைக் குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

இவையெல்லாம் இனியனின் இதயத்தை உருக்கின. சுந்தரியும் அதே நிலையில் இருந்தாள். மாணிக்கமும் அவர்களுடன் மூழ்கிக் கிடந்தான். அவர்களுடைய பேச்சு மெதுவாகத் தேன்மொழியைப் பற்றித் திரும்பியது. அப்பொழுதெல்லாம் இனியனின் இதயத்தில் தேன் மொழியிடம் நெருக்கமான அன்பு ஊற்றெடுத்துப் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்தது.

சுந்தரி புன்னகை செய்தாள். "தேன்மொழியைப் பற்றிப் பேசும்போது உங்கள் கண்கள், இனிமையான குரல் எல்லாம் விசித்திரமாகத் தோன்றுகின்றன. உங்கள் இதயம் சிரித்துக் கொண்டே இருக்கிறது!" என்றாள்.

"இதயம் சிரித்துக் கொண்டே இருக்கிறது!" என்பதை இனியன் பல தடவை மனத்துக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டான். "ஆமாம்! தேன்மொழியைப் பற்றி நினைக்கும் போது இதயம் சிரிக்காமல் இருக்க முடியாது! அப்பொழுது என் இதயம் சிரிப்பதை விட இனிமையாக எப்பொழுதும் சிரிக்காது" என்றான்.

"மற்றவர்களை விட எனக்கு உங்களிடத்தில் ஒரு விதத்தில் சுதந்திரம் இருக்கிறது. என் மனத்தை உணர்ந்து என்னிடம் உண்மையாக நேசித்தவர்கள் நீங்கள். உங்களிடம் சொல்லுவதற்கு என்ன! எனக்குக் கஷ்டம் என்றவுடனேயே, எங்கள் குடும்பத்துக்குத் தன்னால் இழுக்கு ஏற்படும் என்பதை உணர்ந்தவுடனேயே தேன்மொழி மயங்கி விழுந்து விட்டாள். அது சாதாரண மயக்கம் இல்லை. இதயத்தின் ஆழத்தில் அவள் உண்மையான அன்பின் மீது மோதித் தாக்கி விட்ட அதிர்ச்சி. அதனால் அவள் நேற்று முதல் படுத்த படுக்கையில் இருக்கிறாள். அவளைப் போய்ப் பார்த்து விட்டு, அவள் மனத்துக்கு ஆறுதலாக ஏதாவது சொல்லி வாருங்கள்" என்று சொல்லி அவர்களுடன் துணைக்கு ஒரு ஆளையும் அனுப்பி வைத்தான். அவர்கள் யார் என்பதைத் தேன்மொழியின் தந்தையிடம் விளக்கிக் கூறும்படியும் அந்த ஆளிடம் விவரமாகச் சொல்லி அனுப்பினான் இனியன்.

இனியனின் உள்ளத்தைக் கவர்ந்த தேன்மொழியை, அந்தப் பாக்கியசாலியைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆவலில் சுந்தரியும் மாணிக்கமும் உற்சாகமாக நடந்து சென்றார்கள். வளமான அந்தக் கிராமத்தின் அழகைப் பார்த்து வியந்து கொண்டு, நறுமணத்துடன் வீசிய மெல்லிய காற்றைச் சுவாசித்துக் கொண்டே மெத்தென்று இருந்த மண் சாலையில் அவர்கள் நடந்தார்கள்.

சுந்தரியும் மாணிக்கமும் தேன்மொழியின் வீட்டை அடைந்தனர். இனியனின் ஆள் தேன்மொழியின் தந்தைக்கு அவர்களைப்பற்றி விளக்கிக் கூறினான். அவர் அகமும் முகமும் மலர மிகுந்த மரியாதையுடன் அவர்களைக் கை கூப்பி வணங்கி வரவேற்றார். தேன்மொழி உணர்ச்சியில்லாமல் படுத்திருந்த இடத்துக்கு அழைத்துப் போனார்.

தேன்மொழி தூய வெள்ளை ஆடை அணிந்து கொண்டு தங்கப் பதுமை போல அசையாமல் படுத்துக் கிடந்தாள். அவள் உதட்டில் புன்னகை நெளிந்து கொண்டிருந்தது. தலை தலையணைக்குள் அழுந்தி மறைந்து கிடந்தது. உடல் நலக் குறைவால் கண்கள் கனத்து இருந்தன. அவள் அழகிய கழுத்தில் பள பளப்பும் பட்டின் மினுமினுப்பும் உள்ள கருங் கூந்தல் சுற்றித் தவழ்ந்து கொண்டிருந்தது. அவளைப் பார்த்தால் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்து கிடப்பது போலிருந்தது.

சுந்தரி அவளைப் பார்த்தாள். தங்கச் சிலைபோல கிடக்கும் தேன்மொழியைப் பார்த்தாள். பட்டுப் பாயில் படுத்துக் கிடந்த அந்த அமர வடிவத்தை ஆர அமர வியப்புடன் பார்த்தாள். இனியனுக்கு ஏற்ற எழில் உருவம்தான். மாசற்ற மாணிக்கம் தான் என்று நினைத்துக் கொண்டாள். மிகுந்த பய பக்தி விசுவாசத்துடன் அவள் அருகில் உட்கார்ந்து "தேன்மொழி!" என்றாள். பொற்சிலை கண்ணைத் திறப்பது போலத் தேன்மொழி மெதுவாகக் கண்ணைத் திறந்தாள். இதழ்க் கடையில் புன்முறுவல் தவழ்ந்தது. அகல விரித்த கண்களுடன் ஆடாமல் அசையாமல் சுந்தரியைப் பார்த்தாள். ஏதோ பலத்த யோசனைகள்; பயங்கரக் கனவுகள். அவைகளை வளர்த்துக் கொண்டே இருக்கிறாள் போலிருக்கிறது.

திடீரென்று மிரள மிரள விழித்தாள். "ஆகா! என்ன காரியம் நடந்து விட்டது! என்னால் ஒரு குடும்பம் கலைவதா! ஐயோ பயங்கரமாக இருக்கிறதே! என்னால் தாங்க முடிய வில்லையே! நான் எண்ணியதெல்லாம் வீணாகி விட்டதே!" என்று திரும்பத் திரும்பச் சொல்லி அலறினாள்.

சுந்தரிக்கும் மாணிக்கத்துக்கும் ஏற்கெனவே விஷயம் தெரியுமாதலால் அவர்கள் ஒருவாறு அவள் நிலையைப் புரிந்து கொண்டார்கள். அதைப் பற்றி யோசித்தவாறே அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். தேன்மொழியின் தந்தை தவித்துக் கொண்டிருந்தார். அவர் மீசை துடித்துக் கொண்டிருந்தது. "நேற்று முதல் இப்படியேதான் அம்மா இருக்கிறாள். இந்த நிலைமையை இனியனிடம் சொல்லுவதற்குக் கூடப் பயமாக இருக்கிறது. அவளும் நேற்று முதல் உடல் நலம் சரியில்லாமல் இருக்கிறாளாம்" என்றார். அவர் மனைவி,—தேன் மொழியின் தாய் உடல் குலுங்கக் குலுங்க அழுது கொண்டிருந்தாள்.

அவள் அப்படி அழும் குரல் சுந்தரிக்கு வேதனையாக இருந்தது. இனியனிடம் போய் இந்த நிலைமையை எப்படி விவரித்துச் சொல்லுவது என்று புரியாமல் திகைத்தாள். அவள் ஒருகணம் தேன் மொழியின் பரிதாப நிலைமையையும் இனியனின் நிலையையும் எண்ணிப் பார்த்தாள். அவள் அடி வயிற்றுக் குள்ளிருந்து ஆத்திரம் பொங்கிக் குமுறிக் கொண்டு மேலே எழுந்து வந்தது. கண் இமைகளைத் தள்ளிக் கொண்டு வந்த கண்ணீர் அவள் கண்களை மறைத்தது.

மாணிக்கம் இந்தக் காட்சியைப் பார்த்தான். அவன் தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது. அவன் என்னவோ கற்பனை பண்ணிக் கொண்டு மனத்தைக் கெடுத்துக் கொண்டான். அவனால் நிற்க முடியவில்லை. மயங்கிக் கீழே சாய்ந்து விட்டான்.

மாணிக்கம் மூர்ச்சையாகி விட்டதைக் கண்டு சுந்தரி துடித்துப் போனாள். அவன் தலையை எடுத்துத் தன் மடியில் வைத்துக் கொண்டு விம்மத் தொடங்கி விட்டாள்.

எங்கும் இருள் சூழ்ந்து விட்டது போல இருந்தது அவளுக்கு. அங்கு நிலவி யிருந்த நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டு ஏதோ இனந் தெரியாத பூச்சிகள் 'ஙொய்' என்று சத்த மிட்டுக் கொண்டிருந்தன. அந்தச் சத்தம் எதிர்பாராத ஒரு விபரீதத்தை எடுத்துக் காட்டுவது போலப் பரிதாபமாக ஒலித்தது.

(தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk. Madras 10.

**Regd. No. M. 4392**

*Registered as a newspaper in Ceylon*